# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 22 ஞாயிற்றுக்கிழமை (06.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 100




02 முரளி மீது மீண்டும் குற்றச்சாட்டு



03 இந்தியாவிடம் வீழ்மா அயர்லாந்து



13 குளத்தடி வைரவர்



25 வருமுன் காப்பதே சிறந்தது



27 எங்கிருந்து நஞ்சு வந்தது

பொது நிகழ்வுகளிலும் வாழ்வாதாரத் திட்டங்களிலும் அளவுக்கதிகமாகக் காணப்படும்

# இராணுவத்தினரின் தலையீட்டை உடன் தடுத்து நிறுத்த வேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக யாழ். மக்கள் கொதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். குடாநாட்டில் நடைபெறுகின்ற எந்தவொரு பொது நிகழ்ச்சியாயினும் வாழ்வாதாரத் திட்டமாயினும் அதில் இராணுவத்தினரின் பிரசன்னம் காணப்படுவதற்குக் கடும் விசனம் தெரிவித்துள்ளனர் குடாநாட்டு மக்கள். இராணுவத் தலையீடும் இராணுவச் சோதனைகளும் நிறைந்துள்ள நிலையில் மனித உரிமைகள் பற்றிப் பேச முடியாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றை உடனடியாக நீக்கும்படியும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக மக்களின் விசனத்தையும் கோரிக்கைகளையும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் யாழ்ப்பாண சிவில் சமூகத்தினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுப் பிற்பகல் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெற்றது. (32ஆம் பக்கம் பார்க்க)

## 8வயது மகளைத் தந்தையே வல்லுறவு புரிந்த கொடூரம்

### கோப்பாயில் நேற்றுமுன்தினம் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தனது எட்டு வயது மகளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படும் தந்தையை கோப்பாய் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர். பாதிக்கப்பட்ட சிறுமி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூரத்தைப் புரிந்த தந்தை, தன்னைக் காட்டிக் கொடுத்தால் வெட்டுவேன் என்று அயலவர்களை வாள் ஒன்றைக் காட்டி மிரட்டிவிட்டுத் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (29ஆம் பக்கம் பார்க்க)

இந்தோனேஷிய தடுப்பு முகாமிலுள்ள

## ஈழத் தமிழர்கள் 254 பேருக்கு ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து

ஜகார்த்தா, மார்ச் 6

இந்தோனேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங் கைத் தமிழர்களுக்கு ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகள் 254 பேர் கடந்த 2009ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா நோக்கிச் செல்லும் வழியில் இந்தோனேஷியாவில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அதன் பின் அவர்கள் 2009 ஆம் ஆண்டு (29ஆம் பக்கம் பார்க்க)

## சேந்தாங்குளம் கரையோரப் பகுதியில் நாளை மக்கள் மீளக்குடியமர அனுமதி

### கடற்றொழிலில் ஈடுபடவும் முடியும்

யாழ்ப்பாணம்,மார்ச்6

வலி.வடக்கில் மாதகல் - சேந்தாங்குளம் கடலில் மீன்பிடிக்கவும், அப்பகுதிக் கரையோரங்களில் மக்கள் மீளக்குடியமரவும் நாளை திங்கட்கிழமை முதல் இராணுவத்தினால் அனுமதி வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் இளவாலை வடமேற்கு வித்தகபுரம், இளவாலை வடக்கு ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வுக்கு அனுமதிக் கப்பட்டனர்.

இதில் இளவாலை வடமேற்கு பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியான மாதகல் - சேந்தாங்குளம் கடற்பகுதியில் குடியிருப்பதற்கும் கடலில் மீன்பிடிப்பதற்கும் (29ஆம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரம் பிரதம குருவின் இறுதிக் கிரியை

யாழ்ப்பாணம்,மார்ச் 6

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இயற்கை எய்திய மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலய பிரதமகுரு மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்களின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (29ஆம் பக்கம் பார்க்க)

## தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி சிதறியது தொகுதிப் பங்கீட்டில் இணக்கமில்லை

சென்னை,மார்ச்6

தமிழகத்தில் சட்டசபைத் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீட்டில் இணக்கம் ஏற்படாததைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் - காங்கிரஸ் கூட்டணி முறிந்துவிட்டது. இதனை அடுத்து மத்திய அமைச்சர் பதவிகளில் இருந்து தி.மு.கவினர் விலக உள்ளனர்.

இதனை அடுத்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் இருந்து விலகுவதாக தி.மு.க. நேற்று அறிவித்தது. எனினும் பிரச்சினைகளின் அடிப்படையில், மத்திய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு தரப்படும் என்றும் அது தெரிவித்தது.

திமு.கவின் நேற்றைய அறிவிப்பை அடுத்து காங்கிரஸுடனான அதன் ஏழாண்டு உறவு முடிவுக்கு வந்தது.

தமிழகத்தில், அடுத்த மாதம், 13ஆம் திகதி, சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்கான கூட்டணி அமைப்பது மற்றும் தொகு திப் பங்கீடு விவகாரங்களில், தமிழக அரசியல் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

தி.மு.க., கூட்டணியில் காங்கிரஸ் தவிர, மற்றக் கட்சிகளுடனான (29ஆம் பக்கம் பார்க்க)


எந்தவொரு சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சியறைகளிலும் நீங்கள் கொள்வனவு செய்யும் கைணடிக் சப்பாரி (Kinetic Safari) மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7000 பெறுமதியான DVD பிளேயர் இலவசம்.



இன்றே விரையுங்கள்



| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். | ஆலடிச் சந்தி, மானிப்பாய். | பருத்தித்துறை வீதி, நெல்லியடி. | கண்டி வீதி, சாவகச்சேரி. |
|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 222 4389 | 021 224 0555 | 021 225 5343 | 021 226 4937 | 077 9508957 |

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மழையால் கைவிடப்பட்டது ஆட்டம்



சங்கக்காரவின் ஆட்டம்...



டில்ஷான் ஆட்டமிழந்து வெளியேறுகையில்...

-டிலீப்-

ஆரவாரம், எதிர்பார்ப்புக்கு மத்தியில் தொடங்கியது ஆட்டம். இலங்கை 2007 உலகக் கிண்ணத் தோல்விக்கு பழி தீர்க்குமா? இல்லை ஆஸ்திரேலியா சொந்த மண்ணில் இழந்த தொடருக்காய் பழி தீர்க்குமா? குவிந்தனர் ரசிகர்கள். நிரம்பியது அரங்கு. முடிந்தது ஏமாற்றத்தில்.


பத்தாவது உலகக் கிண்ண தொடர் நடத்துபவர்களில் இலங்கையும் ஒன்று. நடப்புச் சம்பியன் ஆஸ்திரேலியர்கள். இவர்கள் ஆர்.பிரேமதாசா மைதானத்தில் மோதினர் நேற்று. நாணயச் சுழற்சியில் வெற்றி இலங்கைக்கு. எடுத்த முடிவு முதலில் துடுப்பெடுத்தாடுவது.

தரங்க-டில்ஷான் வந்தனர் ஆரம்பத் துடுப்பாட்டத்துக்காய். வீசினார் லீ முதலாவது ஓவரை. சுமுகமாய் தொடங்கியது ஆட்டம். சூடு பிடித்தது அடுத்த ஓவரில். பந்து வீசியவர் ரைட். எதிர் கொண்டவர் டில்ஷான். முதல் பந்து சென்றது பவுண்டரிக்கு. திட்டினார் ரைட், டில்ஷானை நோக்கி. பதிலுக்கு அவரும் முறைப்பு. தொடங்கியது வம்புச் சண்டை. இரண்டாவது பந்து வீசக் கடந்து வந்தார் நடுவரை. பந்தை எதிர்கொள்ளாமல் விலத்தினார் டில்ஷான். ரைட் வீசவில்லை இரண்டாவது பந்தை. வீசினார் வார்த்தைக் கணைகளை. அவருடன் இணைந்து திட்டித் தீர்த்தார் பொன்டிங். மோதல் பெரிதாகியது. காரணம் கேட்டார் நடுவர் பந்தை எதிர் கொள்ளாமல் விட்டதற்காய். 'சைட் ஸ்கிறீன்' பிரச்சினையால் விலத்தியதாகச் சொன்னார் டில்ஷான். கறுவினர் ஆஸ்திரேலியர்கள். வீழ்த்தினார் டில்ஷான் விக்கெட்டை ரைட். ஒருவாறு முடிவு கண்டது அவர்கள் மோதல்.

இலங்கைக்கு ஆறு ஓட்டங்களில் முதலாவது இழப்பு. தலைவர் சங்கக்கார களத்துக்குள் புகுந்தார். பொறுமையாய் தொடர்ந்தது இலங்கையின் ஆட்டம். சங்கக்கார தேவைக்கு ஏற்றதாய் அடித்து ஆடினார். மறுமுனையில் தரங்க தொடர்ந்தார் நிதானம். 25 ஓட்டங்கள் இரண்டாவது விக்கெட் இணைப்பு. லீயின் பந்தில் தரங்க வெளியேற்றம். தடுமாறத் தொடங்கியது இலங்கை. நம்பிக்கையான இமயங்கள் களத்தில் இணைந்து நின்றன. சங்கக்கார-ஜெயவர்த்தன இணைந்து போராடினர் ஆரம்ப இழப்பிலிருந்து தப்புவதற்காய்.

நம்பிக்கையான ஆட்டம் இருவரும் இணைந்து வழங்கினர். ஓட்ட வேகம் மெதுவாய் நகர்ந்தது. 44 ஓட்டங்கள் இந்த ஜோடி பகிர்ந்தது இணைப்பாய். 23 ஓட்டங்கள் ஜெயவர்த்தன அணிக்காய் சேர்த்தது. தேவையில்லாத ஓட்டம். முடிந்தது ரன் அவுட்டில். 75/3 இலங்கையின் அபாயநிலை. மறு முனையில் சங்கக்கார சிறப்பாய் அரைச்சதம் கடந்து நம்பிக்கை கொடுத்தார் அணிக்கு.

புதிதாய் களம் புகுந்த சமரவீர சிறப்பாய் இணைந்து ஆடினார் சங்கவுடன். ஆரம்ப இழப்புகளிலிருந்து மீட்பதற்காய் மெதுவான ஆட்டம். இரண்டு தடவைகள் ஆஸி கோரிக்கை விடுத்தது கள நடுவரின் தீர்ப்பை எதிர்த்து. தோல்வியானது அவர்களின் மேன்முறையீடு. 32.5 ஓவர்களில் 146/3. வந்தார் அழையா விருந்தாளி வருணபகவான். குழப்பினார் ஆட்டத்தை. ஆட்டம் முடிவில்லாமல் முடிந்தது. கைவிடப்பட்ட ஆட்டமாய் கணக்கிட்டு வழங்கப்பட்டது சமபுள்ளிகள்.




மழை வந்தபோது...

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண இருபதாவது ஆட்டம்

ஆட்டம்: இலங்கை Vs ஆஸ்திரேலியா    நாணயச் சுழற்சி: இலங்கை

முடிவு: ஆட்டம் கைவிடப்பட்டது

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| உப்புல் தரங்க | c ஸ்மித் b லீ | 06 | 15 | 0 | 0 |
| டில்ஷான் | c வைட் b ரைட் | 04 | 04 | 1 | 0 |
| சங்கக்கார | ஆட்டமிழக்கவில்லை | 73 | 102 | 7 | 0 |
| ஜெயவர்த்தன | Runout (ஸ்மித்) | 23 | 25 | 3 | 0 |
| சமர வீர | ஆட்டமிழக்கவில்லை | 34 | 48 | 2 | 0 |
| சாமரசில்வா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மத்தியூஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஹேரத் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மலிங்க | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| முரளிதரன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மெண்டிஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (lb 1, w 5) | 06 | | | |

TOTAL - 146/3 (32.5)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| லீ | 5 | 27 | 1 | 0 |
| ரைட் | 5 | 23 | 1 | 0 |
| வொட்சன் | 7 | 29 | 0 | 0 |
| ஜோன்ஸன் | 4 | 15 | 0 | 0 |
| கிரேஜா | 7.5 | 34 | 0 | 0 |
| ஸ்மித் | 4 | 17 | 0 | 0 |

1-6(டில்ஷான்), 2-31(தரங்க), 3-75(ஜெயவர்த்தன)

ஆஸ்திரேலியா

பெயர்

வொட்சன், ஹடின், பொன்டிங், கிளார்க், டேவிட் ஹசி, வைட், ஸ்மித், ஜோன்ஸன், கிரேஜா, பிரட் லீ, ரைட்

## அணிகளின் நிலைகள்

| பிரிவு A | M | W | L | T | N/R | Pt | Net/R |
|---|---|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | +1.747 |
| ஆஸ்திரேலியா | 3 | 2 | 0 | 0 | 1 | 5 | +1.813 |
| இலங்கை | 4 | 2 | 1 | 0 | 1 | 5 | +2.663 |
| நியூஸிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +1.507 |
| சிம்பாப்வே | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +0.840 |
| கனடா | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -2.873 |
| கென்யா | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -4.825 |

| பிரிவு B | M | W | L | T | N/R | Pt | Net/R |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 1 | 0 | 1 | 0 | 3 | +0.870 |
| இங்கிலாந்து | 3 | 1 | 1 | 1 | 0 | 3 | +0.035 |
| தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | +2.763 |
| பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.600 |
| நெதர்லாந்து | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -3.058 |
| அயர்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.207 |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | 2 | [illegible] |

M [illegible] L [illegible] N/R [illegible] T [illegible]
W வெற்றி Pt புள்ளிகள் N/R முடிவுறா ஆட்டம்

# மே.தீவுகள் அணியின் பஸ் மீது டாக்காவில் கல் வீச்சுத் தாக்குதல்

மேற்கிந்தியத் தீவு அணி வீரர்களை, அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு ஏற்றிச் சென்ற பஸ் மீது கல் வீச்சுத் தாக்குதல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இதில் அதிஷ்டவசமாக எந்தவொரு வீரருக்கும் காயமேற்படவில்லை.

வீரர்கள் பத்திரமாக ஹோட்டலில் உள்ளதாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஊடகத் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஊடகத் தொடர்பாளர் பிலிப் ஸ்பூனர் கருத்துத் தெரிவிக்கையில்:

''மிர்பூர் தேசிய விளையாட்டரங்கிலிருந்து புறப்பட்டு நாம் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றுகொண்டிருந்தோம். அப்போது திடீரென எமது பஸ் மீது நான்கு கற்கள் வீசப்பட்டன. இதில் எமது பஸ்ஸின் இரண்டு கண்ணாடிகள் உடைந்துள்ளன.

ஆனால் வீரர்கள் எவருக்கும் காயமேற்படவில்லை. நாங்கள் பத்திரமாக ஹோட்டலில் உள்ளோம் என்றார்.

மிர்பூரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பங்களாதேஷ் - மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 58 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மேற்கிந்தியத் தீவுகள் இந்த ஆட்டத்தில் 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதனால் பங்களாதேஷ் ரசிகர்கள் கோபமடைந்தனர். ஆட்டத்தின்போதே தாம் கையில் வைத்திருந்த '4', '6' இலக்கங்கள் பொறிக்கப்பட்ட விளம்பர அட்டைகளை மைதானத்தினுள் வீசியெறிந்தனர்.

இதன் பின்னரே இந்தக் கல் வீச்சுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் முஷ்ரப்பா கமால் தெரிவிக்கையில்:

நாங்கள் குறித்த சம்பவம் தொடர்பாக வருத்தமடைகின்றோம்.

இதுதான் முதற் தடவையாக எமது நாட்டில் இடம்பெற்றுள்ள கிரிக்கெட் வீரர்கள் மீதான துரதிஷ்டவசமான சம்பவம்.

இதற்காக மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன். தற்போது அவர்களுக்கு முழுமையான மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

இது தொடர்பாக ஐ.சி.சியின் பத்திரிகையாளர் மாநாடு சென்னையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹரூன் லொர்கட், பங்களாதேஷில் இடம்பெற்ற சம்பவம் சிறியதொரு சம்பவமே.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும் ஏனைய போட்டிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (15)




# முரளி மீது மீண்டும் குற்றச்சாட்டு

இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் முறையற்ற விதமாக பந்தை வீசி எறிகின்றார் என ஐ.சி.சி. நடுவர்கள் பலர் நம்புவதாகவும் ஆனால் ஆட்டங்களின்போது அவர் பந்தை எறிவதாக குற்றஞ்சாட்டுவதிலிருந்து தவிர்த்துக் கொள்கின்றனர் - என்று ஆஸ்திரேலியாவின் சர்ச்சைக்குரிய நடுவர் டெரல் ஹெயார் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுடன் இடம்பெற்ற ஆட்டத்தில் பந்தை முறையற்ற விதமாக வீசியெறிந்தார். இவர் தனது இறுதி ஓவர்களில். வீசிய பந்துகள் வழமைக்கு மாறாக அளவுக்கு அதிகமாகத் திரும்பின. தொடர்ந்தும் இவர் பந்தை எறிகின்றார்.

1995ஆம் ஆண்டு இலங்கை அணி ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற அந்த அணிக்கு எதிரான ஆட்டத்தில் முரளி பந்தை வீசியெறிகின்றார் என்ற குற்றச்சாட்டை முதலில் சுமத்தியவர் டெரல் ஹெயார். இந்த முறை இவருடன் இணைந்து ரோஸ் மெர்சனும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து ஐ.சி.சி. 2004 ஆம் ஆண்டு முரளியை ஆஸ்திரேலியாவில் வைத்து பரிசோதித்து அவர் முறையற்ற விதமாக பந்தை வீசியெறியவில்லை என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முரளி சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி, டெஸ்ட் போட்டி என்பவற்றில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். (15)

உங்கள் இல்லங்களுக்குத் தேவையான அனைத்துவகையான இலத்திரனியல் சாதனங்களை குறைந்த விலையில் பெற்றிட இன்றே நாடுங்கள்

Midea
Electro Mart

No: 1-1, 1-H,
Stanley Road,
Jaffna, SriLanka.
T.P: 021 222 4566,
Fax:021 222 1646.

Authorized Dealer for Abans Ltd.
e-mail: midea21@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிடம் வீழுமா அயர்லாந்து?



-டிலீப்-

இந்திய அணிக்கும் அயர்லாந்து அணிக்கும் இடையிலான ஆட்டம் இன்று பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. அயர்லாந்து அணிதான் விளையாடிய இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை அபாரமாக ஆடி வீழ்த்தியதன் மூலம் அந்த அணி மீது ரசிகர்களுக்கு அதிக எதிர்பார்ப்பை தோற்றுவித்துள்ளது.

இந்திய அணி தனது வழமையான திறனுடனே உள்ளது. இந்திய அணியை அயர்லாந்து அணி வீழ்த்துவதென்பது சற்றுக் கடினமான விடயமே. இருந்தாலும் இந்திய அணியின் பந்து வீச்சு மிக மோசமாகவே உள்ளது. திறமையான மற்றும் அதிரடியான துடுப்பாட்ட வரிசையை இந்திய அணி கொண்டிருந்தாலும் அதன் மூலம் பெறப்படும் இலக்கு மோசமான களத்தடுப்பு மோசமான பந்து வீச்சு என்பன மூலம் தாரை வார்த்து விடுகின்றது. கிட்டத்தட்ட இங்கிலாந்து அணியின் நிலைமையை ஒத்ததாகவே இந்திய அணியின் நிலையும் காணப்படுகின்றது.

ஆனால் அயர்லாந்து அணியின் நிலைப்பாடோ முற்றிலும் மாறுபட்டது. களத்தடுப்பு மட்டுமே அந்த அணியின் உச்ச நிலை சிறப்பில் உள்ளது. பந்து வீச்சு ஓரளவு சொல்லும் படியாக உள்ளது. ஆனால் இந்தியாவின் துடுப்பாட்ட வரிசைக்கு இந்தப் பந்து வீச்சு எந்த மட்டில் என்ற நிலை காணப்படுகின்றது. அவர்களின் பந்து வீச்சாளர்கள் யாரும் பெயர் சொல்லும்படியாக இல்லை. துடுப்பாட்டமும் அதே போன்றதொரு நிலையிலேயே காணப்படுகின்றது.

பிரெய்ன் சகோதரர்கள் துடுப்பாட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டால் மட்டுமே அந்த அணி ஓரளவேனும் கௌரவமான ஓட்ட இலக்கைப் பெற்றுக்கொள்கின்றது. இருப்பினும் இந்திய அணியின் பந்து வீச்சு, களத்தடுப்பு மோசமாக இருப்பதனால் அயர்லாந்து அணிக்கு அது சாதகமான நிலைமையை உருவாக்கும்.

ஆட்டம் இடம்பெறும் சின்னச்சாமி மைதானத்தை பொறுத்தவரை ஓட்டக் குவிப்புக்கு ஏற்ற மைதானமே. இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடினால் 300 ஓட்டங்களை நிச்சயமாகப் பெற்றுக்கொள்ளும். அதேயளவு சந்தர்ப்பங்கள் அயர்லாந்துக்கும் உண்டு. இந்த மைதானத்தில் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணிக்கே வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. முதலாவதாக துடுப்பெடுத்தாடும் அணி எவ்வாறானதொரு ஓட்ட எண்ணிக்கையை நிர்ணயித்தாலும் அந்த ஓட்ட எண்ணிக்கையை இரண்டாவதாக துடுப்பெடுத்தாடும் அணியினால் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு இந்தியா-இங்கிலாந்து, அயர்லாந்து-இங்கிலாந்து ஆட்டங்கள் சரியானதொரு சான்று.

இந்திய அணியில் பெரும்பாலும் பியூஸ் சால்வாவுக்குப் பதிலாக தமிழக வீரர் அஸ்வின் களமிறங்கக் கூடும். அத்துடன் விராட் ஹோலிக்குப் பதிலாக ரெய்னாவுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம். அயர்லாந்து அணி பெரும்பாலும் மாற்றமில்லாமலே களமிறங்கக்கூடும்.

எது எப்படியிருப்பினும் இந்திய மண்ணில் அந்த அணியின் ரசிகர் பட்டாளத்தின் முன்னால் அயர்லாந்தின் வெற்றி கேள்விக் குறியே!

இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு
EUROSTAR
Live your Life
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE
வழங்கும் 32" TV LCD
மாபெரும் இறுதிப் போட்டி
உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?
..................................................
போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?
..................................................
பெயர் : ........................................
தே.அ.இல. : ....................................
முகவரி : ........................................
........................................
போட்டி முடிவுத் திகதி
15.03.2011

## இன்றைய ஆட்டங்கள்

சிதம்பரம் மு.ப. 9.30
இங்கிலாந்து - தென்னாபிரிக்கா



சின்னச்சாமி பி.ப. 2.30
அயர்லாந்து - இந்தியா



# பள்ளேகலவில் தேன்கூடுகள்

இலங்கையில் உலகக் கிண்ணப் போட்டிகளுக்காகப் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கிலிருந்து நேற்று மூன்று தேன்கூடுகள் அகற்றப்பட்டுள்ளன. இதற்கு முன்னதாக ஒன்பது தேன்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளன.

பள்ளேகல விளையாட்டரங்கு சர்வ்தேச தரத்துக்கு அமைவானது இல்லையென்ற குற்றச்சாட்டுக்கள் முன்வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (15)

| அதிகூடிய ஓட்டங்கள் | M | R | 50'S | 100'S | H.S | Avg. |
|---|---|---|---|---|---|---|
| ஸ்ரோரஸ்(இங்கிலாந்து) | 03 | 280 | 01 | 01 | 158 | 93.33 |
| ஏ.பி.டீ.வில்லியர்ஸ்(தெ.ஆபிரிக்ர) | 02 | 241 | 01 | 01 | 134 | 105.00 |
| சங்கக்கார(இலங்கை) | 04 | 241 | 03 | 00 | 92 | 120.50 |

| அதிகூடிய விக்கெட்டுகள் | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி (பாகிஸ்தான்) | 03 | 14 | 05/16 |
| கெமரோச் (மே.தீவுகள்) | 03 | 10 | 06/27 |
| ஜோன்ஸன் (ஆஸ்திரேலியா) | 03 | 07 | 04/41 |

# இங்கிலாந்து - தென்னாபிரிக்கா மோதலில் வெற்றி யாருக்கு?

-அருண்மொழி-

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் சிதம்பரம் சேப்பாக்கம் மைதானத்தில் இன்று 21 ஆவது ஆட்டம் இடம்பெறவுள்ளது. இரண்டு அணிகளும் பலமான அணிகள் என்பதால் எந்த அணி வெற்றி பெறும் என்ற ஆவல் ரசிகர்களிடையே மேலோங்கியுள்ளது.




'தில்லாலங்கடி திரைப்படத்தில் ஜெயம் ரவி சொல்வதைப் போல எதிலும் ஒரு 'கிக்' இருக்க வேண்டும்' என்பது இங்கிலாந்து அணிக்கு நிறையவே பொருந்துகின்றது. இங்கிலாந்து அணி தான் சந்தித்த முதலாவது ஆட்டத்தில் நெதர்லாந்துடன் ஒரு பரபரப்பான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணியுடனான ஆட்டத்தில் இறுதி வரை 'திரிலான' போக்கினை வெளிப்படுத்தி ஆட்டத்தை சமநிலை செய்து கொண்டது. மூன்றாவது ஆட்டத்தில் அயர்லாந்து அணியுடன் மோதியது. இந்த ஆட்டமும் இறுதிவரை யார் பக்கம் வெற்றி என்பது தெரியாமல் இருந்து இறுதி ஓவரில் அயர்லாந்து தன் பக்கம் வெற்றியை மாற்றிக் கொண்டது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதை போல் இங்கிலாந்து அணியின் நிலை உள்ளது. முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி, இரண்டாவது ஆட்டம் சமநிலை, மூன்றாவது ஆட்டம் தோல்வி அப்படியாயின் இன்றைய நான்காவது ஆட்டம்?



இங்கிலாந்து அணியில் சிறப்பான துடுப்பாட்ட வரிசை மட்டுமே உள்ளது. அந்த அணியில் களத்தடுப்பு மற்றும் பந்துவீச்சு மிக மோசமாகவே உள்ளது. அயர்லாந்து அணியுடனான இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தின் பந்து வீச்சு, மற்றும் களத்தடுப்பு என்பன மிக மோசமாக அமைந்ததாலேயே இங்கிலாந்து அணி தோல்வியடைந்தது.

மறுபுறம் தென்னாபிரிக்க அணியோ பலமானதொரு நிலையில் உள்ளது. அந்த அணியில் இது நாள் வரையில் வெற்றிடமாக இருந்த சுழற் பந்து வீச்சும் இம்ரான் தாகீரால் நிரப்பப்பட்டுள்ளது. துடுப்பாட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மிகச்சிறப்பாகவே செயற்பட்டு வருகின்றனர். மத்திய வரிசையின் துடுப்பாட்டம் ஆரம்பத் துடுப்பாட்டத்தைவிட பலமானதாகவே உள்ளது. டீவில்லியர்ஸ், டுமினி போன்றோரின் சிறப்பான துடுப்பாட்டம் தென்னாபிரிக்க அணியை எப்போதும் நெருக்கடிக்குள் தள்ளாமல் பாதுகாத்துக் கொள்ளும். வேகப் பந்து வீச்சில் ஸ்ரெயின் விக்கெட்டுக்களை எதிர்பார்த்தளவு வீழ்த்தாதது அந்த அணிக்கு பாதிப்புத்தான். இருப்பினும் அவரது பந்து வீச்சில் ஓட்டங்கள் பெரிதாக எதிரணிக்கு வழங்காதது சிறப்புத்தான். தென்னாபிரிக்க அணியின் களத்தடுப்பு மிகப் பலமாகவே உள்ளது.

இவ்வாறான நிலையில் இரு அணிகளினதும் மோதல் பரபரப்பானதாகவே இருக்கும். அத்துடன் அதிரடிகளுக்கும் பஞ்சமிருக்காது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட்டும் நாங்களும்



வே.தபேந்திரன்,
கைதடி வடக்கு, கைதடி

கிரிக்கெட் இந்தச் சொல் இந்திய உபகண்ட நாடுகளின் பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்த ஒன்று.

நாம் கனவான்களோ இல்லையோ ஆனால் கனவான் விளையாட்டில் கனமான பாத்திரத்தை வகித்து வருகின்றோம். யாழ்ப்பாணத்தவர்களும் கிரிக்கெட் விளையாட்டின் மீது அலாதிப்பிரியர்கள் தான்.

பிரிட்டனின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர் வழி வந்த பாடசாலைகள் உருவாக்கப்பட்ட போதே கிரிக்கெட்டும் எமக்கு அறிமுகமாகிவிட்டது. இலங்கை 1982 இல் டெஸ்ட் அந்தஸ்தை பெற முன்னரே, இன முரண்பாடுகள் தீவிரமடைய முன்பு தேசிய அணியில் யாழ்ப்பாணத்தவர்கள் இடம் பெற்றனர்.

லகான் என்ற ஹிந்திப்படத்தினைத் தமிழ் மொழிபெயர்ப்புடன் பார்த்திருப்பீர்கள். இந்திய ஏழைக்கிராமத்து இளைஞர்கள் பிரிட்டிஷ் ஆதிக்கவாதிகளுடன் கிரிக்கெட் விளையாடி அதில் வென்று வரிச்சுமையிலிருந்து விடுதலை பெற்றதை.

யாழ் மத்திய கல்லூரி - சென்ஜோன்ஸ் கல்லூரிக்கு இடையிலான 'வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம்' என்று அழைக்கப்படும் கிரிக்கெட்போட்டி நூறு ஆண்டைக் கடந்து யாழ் மண்ணின் பண்பாட்டுத் திருவிழாவாக உள்ளது.

1980 இற்கு முன்பான காலப் பகுதியில் சென்றல்- சென். ஜோன்ஸ் கிரிக்கெட் போட்டி என்றால் யாழ்.நகரப் பகுதியே ஆரவாரம் அடையும்.

குடாநாட்டுப் பாடசாலைகள் பல வெறிச்சோடிக் காணப்படும். அவர்கள் கிரிக்கெட் பார்க்க மத்திய கல்லூரியின் மைதானம் வந்து விடுவார்கள். சைக்கிள்கள், மாட்டுவண்டில்களில் எல்லாம் இந்தப் பாடசாலைகளின் ரசிகர்கள், மாணவர்கள் வருவார்கள். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் ரயில் முழுவதும் இந்தக் கல்லூரிகளின் பழைய மாணவர்களும், ரசிகர்களும் திரண்டு வருவார்கள். இலங்கை வானொலியின் செய்திகளிலும் இந்தக் கிரிக்கெட்டின் 'ஸ்கோர்' இடம் பிடிக்கும். அந்தக்காலச் சினிமாப் பாட்டுகளுடன் இணைந்ததாக தமது கல்லூரிகளின் வீரதீரப் பிரதாபங்களைச் சேர்த்துப் பாடுவார்கள். 'பம்பல்கள்', கேலிக் கதைகளுக்கு குறைவில்லை. மேளதாளம் சகிதம் மைதானத்தைச் சுற்றியும், வீதி தோறும் ரசிகர்கள் வலம் வருவார்கள். மைதானத்தில் வீரர்கள் திறமை காட்டும் போது ரசிகர்பட்டாளம் சோடாக்களுடன் மைதானத்தினுள் ஓடுவார்கள். யாழ்.நகரப் பிரதேசமே சனத்திரள்களால் திணறும்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியும் மோதும் 'பொன் அணிகளின் போர்' எனும் பெயரிலான போட்டிகள் அடுத்ததாக முக்கியத்துவம் பெறும்.

அடுத்ததாக யாழ்.இந்துக் கல்லூரியும், கொழும்பு இந்துக் கல்லூரியும் மோதும் கிரிக்கெட் போட்டிகளும் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

1983 ஜூலை வன் முறைகளுடன் இந்தப் போட்டிகள் நின்று போனது. அண்மைய ஆண்டுகளாக இது யாழ். இந்து- கொக்குவில் இந்துக் கல்லூரிகளிற்கிடையே 'இந்துக்களின் போர்' என்ற பெயரில் நடைபெற்றுவருகிறது.

1983 இற்கு முன்பு கொழும்பு றோயல் கல்லூரி, சென் பீற்றர்ஸ் கல்லூரி, கண்டி சென். தோமஸ் கல்லூரி ஆகியவையும் ஒன்று விட்ட ஒரு வருடம் யாழ்ப்பாணம் வந்து விளையாடும் நிலைமை இருந்தது. எம்மவரும் சவாலாக விளையாடுவார்கள். வெற்றி தோல்விகள் மாறி மாறிவரும். அந்தக் காலத்தில் யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள் தென்பகுதி கல்லூரி ரசிகர்களின் சிங்களப் பாட்டுக்களின் அர்த்தம் விளங்காது ஆனாலும் தாமும் விளங்கியவர்கள் போல ''பாசே பசியலட்ட அப்துலட்ட பும்பும் ரது போலட்ட அரே'' எனப்பாடினார்கள். சிங்கள ரசிகர்கள் இவர்கள் எந்த மொழியில் பாடுகின்றார்கள் என விளங்காது குழம்பிப் போனது கண்டு சிரிப்போம்.

இப்போதும் கூட இந்தப் பாடல் இடையிடையே மைதானத்தில் கேட்க முடிகிறது.

ஞாபகத் திரைகள் அப்படியே இருக்க உலகக் கிண்ணப் போட்டிகளை நோக்கிப் பாய்வோம். 1975 இல் முதல் போட்டிகள் நடந்த போது கத்துக்குட்டி அணியாக எமது நாட்டு வீரர்கள் அனுர தென்னக்கோன் தலைமையில் இங்கிலாந்து சென்று விளையாடினார்கள். லண்டன் கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் குழு 'பி' ஆட்டத்தில் ஜூன் 11ஆம் நாளன்று ஆஸ்திரேலிய அணிக்கெதிராக விளையாடினார்கள். 60 ஓவர்கள் கொண்ட ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 5 விக்கெட் இழப்பிற்கு 328 ஓட்டங்களைப் பெற்றது.



கத்துக்குட்டி அணியென நினைத்தோருக்கு எமது நாடு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. 4விக்கெட் இழப்பிற்கு 276ஓட்டங்களைப் பெற்றது. சிதாத் வெத்தமுனி, டுலிப் மெண்டிஸ், அனுர தென்னக்கோன், மைக்கல் திசேரா, பந்துல வர்ணபுர, அநுர ரணசிங்க ஆகியோர் மட்டுமே அசத்தலாகத் துடுப்பெடுத்தாடி இலங்கைக்கு கௌரவம் சேர்த்தனர். 1975, 1979 ஆண்டுகளில் வானொலி நேரடி வர்ணனையை மட்டுமே எம்மால் கேட்க முடிந்தது. தொலைக்காட்சி என்ற ஒன்றே எமக்குத் தெரியாத காலம்.

1983 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற போது ரூபவாகினி நேரடி ஒளிபரப்பை நடத்தியது. இறுதி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 54.4ஓவர்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 183 என்ற சுமாரான ஓட்டத்தையே பெற்றது.

ஆயினும் 3ஆவது முறையாகவும் சம்பியன் ஆகுமென எதிர்பார்த்த மேற்கிந்தியத் தீவுகளை 140 ஓட்டங்களுக்குள் அடக்கி கிண்ணத்தைச் சுவீகரித்தது இந்திய அணி. 1932 ஜூன் 25 இல் டெஸ்ட் கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்து இங்கிலாந்து அணியுடன் விளையாடிய அதே தினத்தில் சரியாக 51வருடங்களின் பின்பு உலகச் சம்பியனாகியது.

இது தற்செயல் நிகழ்வென்றாலும் விசேட அம்சமாயிருந்தது. ஆசியாவை நோக்கி ஆச்சரியமாகப் பார்க்க வைத்தது கபில் தேவ் தலைமையிலான இந்திய அணி.

1987இல் 4ஆவது உலகக் கிண்ணப் போட்டிகள் இந்தியா, பாகிஸ்தானில் நடந்த போதும் எம்மவர்கள் யுத்தம் காரணமாக அந்தப் போட்டிகளை காணும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

1992, 1996 போட்டிகளை மின்சாரமற்ற யாழ்ப்பாணத்தில் ஜெனரேற்றர் துணை கொண்டு சிலவற்றைப் பார்க்க முடிந்தது.

1999 இல் மின்சாரம் வந்தது. ஆனால் பகுதிநேர, ஒன்று விட்டு ஒரு நாள் மின்வெட்டு அதனிடையேயும் போராடிப் பார்க்க முடிந்தது.

2003 இல் இயல்பு நிலை வாழ்க்கையில் பார்த்தோம். 2007 இல் பகுதி நேர மின்தடை மிகவும் இறுக்கமான் சூழலில் உலகக்கிண்ணப்போட்டிகளை ரசித்தோம்.

ஒரு காலத்தில் ஆடம்பரப் பொருளாக இருந்த தொலைக் காட்சி இன்று அத்தியாவசியப் பொருளாக வீடுகளுக்குள் நுழைந்துவிட்டது.

இன்று 2011 இல் 10 ஆவது உலகக்கிண்ணப் போட்டிகளை ரசிக்கின்றோம். மிக நவீன தொலைத் தொடர்பு தொழில் நுட்பங்களுடன் இருக்கின்றோம்.

திறமை + அதிஷ்டம் = கிண்ணம். அது யாருக்கு?

உலகக்கிண்ணி வாசகர் கணை

## பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை
முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள்
வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடுதீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள்
வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக, நாச்சிக்குடா.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மஸி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

**பருத்தித்துறையில்**

கனன் போட்டோ
கவிதா ரெடர்ஸ்

**நெல்லியடியில்**

மொடோன் ஸ்ரோர்ஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

**மந்திகையில்**

நாவலர் புத்தகசாலை

**உடுப்பிட்டியில்**

ரஜினி பீடா

**வல்வெட்டித்துறையில்**

கலைச்சோலை பான்சி கவுஸ்

**தென்மராட்சியில்**

அருள்நாயகி புத்தகசாலை

மனியம் ஸ்ரோர்ஸ்
ஸ்ரீ கருணா மல்ரி சொப்
கஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்லாரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறீராம் மல்ரி சென்ரர்

**கிளிநொச்சியில்**

பிள்ளையார் புத்தகசாலை
அறிவுமதி புத்தகசாலை
சோமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசிகர்களை ஏமாற்றிய பங்களாதேஷ்

நடப்பு உலகக் கிண்ண ஆட்டங்களில் இந்தியா விளையாடும் ஆட்டங்களுக்கு அடுத்தபடியாக அதிகபட்ச ரசிகர் கூட்டம் சேர்வது பங்களாதேஷ் விளையாடும் ஆட்டங்களுக்கே.

ஆனால் பங்களாதேஷ் - மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான ஆட்டம் அந்த ரசிகர்களின் உணர்வுகளை மதித்ததாக அமையவில்லை.

மிர்பூர் மைதானத்தில் இரவு உணவு வரை அனைத்தையும் எடுத்துக் கொண்டு 'ஸ்ரேடியத்திற்குள்' தங்களது வீரர்களுக்கு உரத்த ஆதரவு அளிக்க பெரும் ரசிகர் கூட்டம் வந்திருந்தது.


அதற்கு ஏற்றவாறு நாணய சுழற்சியிலும் வென்று துடுப்பாட்டத்தையும் தேர்வு செய்தார் பங்களாதேஷ் அணியின் தலைவர் ஷகிப் அல் ஹஸன். ஆனால் நடந்தது என்ன?

அவர்களது 'ஹீரோ' தமீம் இக்பால் முதல் இரண்டு பந்தை ஆடாமல் விட்டார். ஆனால் அவருக்கு அதுவே பந்துகளைப் போதுமான அளவுக்கு பார்த்து விட்டோம் என்ற நிறைவைத் தந்திருக்கிறது.

அடுத்த பந்து கெமர் றோச் வீசியது மிகவும் வெளியே சென்றது. அதனை ஏதோ தான் ஒரு பிரையன் லாரா என்பது போல் சுழற்றினார். பந்து மட்டை விளிம்பில் பட்டு இரண்டாவது 'ஸ்லிப்பில்' பிடியெடுப்பாக அமைந்தது. ரசிகர்கள் ஆரவாரம் அப்படியே சோகமான மௌனமாக மாறிப்போனது.

அடுத்தடுத்து இம்ருல் கையிஸ், யுனைட் சிட்டிக், ஷாகிப் அல் ஹசன், ரகிம், அஷ்ப்புல் என்று முன்னணி வீரர்கள் பவிலியன் நோக்கி நடையைக் கட்டத் துவங்கினர். 18 ஓவர்களில் 58 ஓட்டங்களுக்குச் சுருண்டது.

அயர்லாந்துக்கு எதிராக முன்னைய ஆட்டத்தில் அலட்சியமாக ஆடிய பங்களாதேஷ் ஓரளவுக்கு சவாலான 205 ஓட்டங்களை எட்டியது. ஆனால் அதன் பிறகு சுழற்பந்து வீச்சைக் கொண்டு அயர்லாந்தை வீழ்த்தியது. அந்த எதிர்பார்ப்புடன் வந்த ரசிகர்கள் பங்களாதேஷ் ஆடிய பொறுப்பற்ற ஆட்டத்தை மட்டுமே காண முடிந்தது. இனி என்னதான் செய்கின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். (15)



ஆரவாரம்: இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான, ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தை ரசிக்கும் இலங்கை ரசிகைகள்...

# இங்கிலாந்தைப் போலவே இந்தியாவையும் வீழ்த்துவோம்

இங்கிலாந்து - அயர்லாந்து இடையே நடந்த லீக் ஆட்டத்தில் இங்கிலாந்தை அயர்லாந்து அதிர்ச்சித் தோல்வியடையச் செய்தது. அயர்லாந்து வெற்றிக்கு அந்த அணியின் வீரர் கெவின் ஓ பிரெய்ன் முக்கிய காரணமாக இருந்தார். அவர் அதிரடியாக ஆடி 113 ஓட்டங்கள் குவித்தார். இந்த நிலையில் அயர்லாந்து அணி இந்திய அணியுடன் இன்று மோதவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கெவின் ஓ பிரெய்னிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:-

இங்கிலாந்தை வெற்றி கொண்ட மகிழ்ச்சி இன்னும் எங்களை விட்டு அகல வில்லை. இதே வெற்றியை இனிவரும் ஆட்டங்களிலும் பெறவேண்டும் என்ற முனைப்போடு இருக்கிறோம். இந்தியாவுடன் மோதும் ஆட்டம் எங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். இந்தியாவையும் எங்களால் வீழ்த்த முடியும். எங்களுடைய பந்துவீச்சும் நன்றாக உள்ளது. இதனால் தான் பங்களாதேஷைக் கட்டுப்படுத்தினோம், இங்கிலாந்தை வீழ்த்தினோம்.

இதே மாதிரி எங்கள் ஆட்டம் தொடர்ந்தால் இந்தியாவுக்கும் நெருக்கடி கொடுக்க முடியும். ஷேவாக் போன்ற சில வீரர்கள்தான் எங்களுக்குப் பிரச்சினை. தொடக்கத்திலேயே சில விக்கெட்டுகளை வீழ்த்தி இந்தியாவுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் எனத் திட்டமிட்டு உள்ளோம். நாங்கள் கடந்த உலகக் கிண்ணப் போட்டியிலும் நன்றாகதான் ஆடினோம். அதே போல 20 ஓவர் சம்பியன் தொடரிலும் சிறப்பாக ஆடினோம். இப்போது எந்த அணியையும் வீழ்த்தக்கூடிய அளவுக்கு வலிமையாக மாறி இருக்கிறோம்.

இங்கிலாந்துடன் நடந்த ஆட்டத்தில் நாங்கள் வெற்றி பெற இந்திய ரசிகர்களின் ஆதரவும் முக்கிய காரணமாக இருந்தது. இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தின் போதும் இந்திய ரசிகர்கள் எங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் என நம்புகிறோம் -என்றார். (15)

**அடுத்த வர்ணப் படத்தில் அதிரடி நாயகன் சேவாக். எப்போது வரும்? இணைந்திருங்கள் உதயனுடன்...**



தினமொரு பரிசுப் போட்டி

கனடா - கென்யா அணிகளுக்கிடையிலான நாளைய (07.03.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

..........................................

பெயர் : ..........................................

தே.அ.இல : ..........................................

முகவரி : ..........................................

..........................................

இந்தக் கேள்விக்கான விடையை இந்தக் கூப்பனில் எழுதி நாளை (07.03.2011) பிற்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.

2ஆம் பரிசு
காத்திருங்கள்

கம்ப்யூட்டர் ருடே
வழங்கும்
தினமும் வெல்லும் ஒருவருக்கு
ஒரு வருடத்துக்கான
கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா

UTHAYAN FE ISLAND
cfict GATEWAY CENTRE JAFFNA
4 1/2 வழங்கும் லட்சம் ரூபா
பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்
48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

மாபெரும் காலிறுதிப் போட்டி

காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும் அணிகள் எவை?

1. .................... 5. ....................
2. .................... 6. ....................
3. .................... 7. ....................
4. .................... 8. ....................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ..........................................

முகவரி : ..........................................

..........................................

போட்டி முடிவுத் திகதி
10.03.2011

1ஆம் பரிசு
தொகையை முடிந்தால் கற்பனை செய்துபாருங்கள்

மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..........................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

..........................................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ..........................................

முகவரி : ..........................................

..........................................

போட்டி முடிவுத் திகதி
15.03.2011

மற்றும்
மாபெரும் காலிறுதிப் போட்டி

மாபெரும் இறுதிப் போட்டி 10 ஆறுதல் பரிசுகள்
அள்ளுங்கள் ஆறுதல் பரிசில்களை

SINGER PLUS
No.01 STANLY ROAD
JAFFNA. வழங்கும்
EGG BEATER

SINGER
HOSPITAL ROAD
JAFFNA. வழங்கும்
FAN

SINGER PLUS
CHUNNAKAM. வழங்கும்
FAN

SINGER PLUS
NELLIYADEY. வழங்கும்
FAN

SINGER PLUS
CHAVAKACHCHERI.
வழங்கும் TOATER

PC SOLUTION
KASTHURIYAR ROAD
JAFFNA. வழங்கும்
COLOUR PRINTER

PC POWER UNIT
LUXAN PLAZA
KASTHURIYAR ROAD. வழங்கும்
Rs. 5000 GIFT VOUCHER

BARANABAS
247, Stanly Road, Jaffna. வழங்கும்
SINSUNG DVD PLAYER

சரவணா ரெக்ஸ்
770, 772, கே.கே.எஸ் வீதி,
(துட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

கிருபா லேணர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் (01.03.2011) அன்று நடைபெற்ற பட்ட மளிப்பு விழாவில் B.Sc.(Eng.) பட்டம் பெற்ற

செல்வன்

**சோமசுந்தரம் பிறிந்தாபன்**

அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சுதேஸ்குமார் (அண்ணா)
பிரியதர்சினி (அண்ணி)

குமர கோட்டம்,
கோண்டாவில்.

(23,24,43)


## ஆங்கில பாட ஆசிரியருக்கு பயிற்சிப் பட்டறை

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான 5 நாள் வதிவிடப் பயிற்சிப்பட்டறை நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்டப நிறுவனத்தில் ஆரம்பமாகவுள்ளது.

வட மாகாண ஆங்கில ஆசிரியர்களில் இருந்து தெரிந்தெடுக்கப் பட்ட ஆங்கில ஆசிரியர்கள் அறுபது பேர் இப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

முதல் தடவையாக நடைபெறும் இந்த ஆங்கில நாடகபயிற்சிப் பட்டறைக்கான விரிவுரைகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், கொழும்பில் இருந்து வருகை தரவுள்ள நாடக ஆற்றுகையாளர்களான மிரியெல்ல, இராசையா யோகநாதன் மற்றும் குழந்தை சண்முகலிங்கம் ஆகியோருடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகத்துறை விரிவுரையாளர்களும் கலந்துகொள்கின்றனர்.

வட மாகாண ஆளுநர் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வடமாகாணக் கல்விப்பணப்பாளர் ஆகியோரின் ஆலோசனையின் கீழ் வட மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் இராதாக்கிருஷ்ணனின் மேற்பார்வையில் இது மேற்கொள்ளப்படவுள்ளது. (த-86)





## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

திரு. திருமதி ஜோதீஸ்வரன் - செல்வரஞ்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வி

**நந்துஷா**

தனது முதலாவது பிறந்தநாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் இன்று (06.03.2011) வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை அம்மன் துணைகொண்டு சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்:
அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அபிஅண்ணா (லண்டன்), அபி, நிவி, தூரி, வர்னா, சுஜனு, மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், தங்கைமார், தம்பிமார், மைத்துனன்மார், மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

செல்வஸ்தான்,
இமையாணன்.

(48,22,19)



உ
சிவமயம்

## சிவாச்சார்யாபிஷேக அழைப்பு

அன்புடையீர்.

கைலாச விநாயகர், கமலாம்பிகா சமேத கைலாசநாத சுவாமியினதும் நல்லைக்கந்தனதும் அனுக்கிரகத்துடன் நிகழும் மங்களமிகு விகிர்தி வருஷம் மாசித் திங்கள் 23 ம் நாள் (07.03.2011) திங்கட்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்த யோகமும் திருதியை திதியும் கூடிய காலை 6.50 மணிமுதல் 7.50 மணிவரை உள்ள மீனலக்ன சுபவேளையில்

**எமது குமாரன் சிரஞ்ஜீவி**
**பிரம்மஸ்ரீ கு.ப கணேஷராஜசர்மாவிற்கு**

சமய விஷேஷ நிர்வாண தீட்சையுடன் கூடிய சிவாச்சார்யாபிஷேகம் செய்து வைக்க கருங்காலி போசுட்டி முருகன். மணற்காடு முத்துமாரி அம்மன். வியாவில் ஐயனார் அனுக்கிரகத்தாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்துடனும் நிச்சயிக்கப்பட்டு ஷ முகூர்த்தம் நல்லூர் சிவன்கோயிலில் நிகழ இருப்பதால் தாங்கள் தங்கள் பந்துமித்திரருடன் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தீட்சாகுரு
சிவாகம கிரியா கலாநிதி. பிரதிஸ்டா கிரியா பூஷணம். சிவபூஜா புரந்தரர்
**சிவஸ்ரீ.க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்**
காரைநகர், கருங்காலி முருகமூர்த்தி ஆலய,
பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலய பிரதம குரு

**தங்கள் நல்வரவை நாடும்**
**பிரம்மஸ்ரீ கு.பசுபதீஸ்வரசர்மா சகுந்தலாவேி குடும்பத்தினர்.**
179, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

வரவேற்பாளர்கள்
உறவினர்களும், நண்பர்களும்



# மெலிபன் பிஸ்கட் காட்சியகம்
# கோலாகலத் திறப்பு விழா

நாளை (07.03.2011) திங்கட்கிழமை முற்பகல் 10.25 தொடக்கம் நண்பகல் 12 மணி வரை உள்ள சுப நேரத்தில் **இல.152, (348), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் வாடிக்கையாளர்கள் நலன் கருதி கோலாகலமாகத் திறந்து வைக்கின்றோம். இந்த நிகழ்வில் பங்கு கொள்ளுமாறு அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மெலிபன் பிஸ்கட் காட்சியகம்




**மெலிபன் பிஸ்கட் காட்சியகம்**
**104, (298), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**ஏக விநியோகத்தர், பெட்டா எசென்ஸ் சப்பிளையர்.**

(49-27)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# மனித உரிமை மீறல்கள்; அரசு நியாய வழி நடக்குமா?

★ மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளை அலுவலகத்தில் பொதுமக்கள் இதுவரை பதிவுசெய்த முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை, பெறுபேறு யாவை என்பன குறித்து முறைப்பாட்டாளர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

★ அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றை நீக்கி, மக்கள் தமக்குள்ள குறைகளையும் பாதிப்புக்களையும் வெளிப்படையாகத் தெரிவிக்க வகை செய்வது அவசியம்.

★ குடாநாட்டில் சந்திக்குச் சந்தி இராணுவச் சோதனைச் சாவடிகள் என்ற நிலையை அகற்றி மக்களின் இயல்பு வாழ்க்கையை அனுமதிக்க வேண்டும்.

★ மீள்குடியேற்றத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளைக் கண்காணித்து, உரிய நட்டஈடுகள் மக்களுக்குக் கிடைக்கின்றன என்பதனை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகம் உறுதிப்படுத்தவேண்டும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தினருக்கும் சிவில் சமூகத்திற்கும் இடையிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவது குறித்த சந்திப்பு ஒன்று, யாழ்.மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு பொதுமக்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட முக்கிய அம்சங்களில் மேற்கண்டவையும் அடங்கும்.

இந்தக் கோரிக்கைகள் அல்லது யோசனைகள் குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானவை. அவர்களின் அன்றாட வாழ்க்கையை, இயல்பு வாழ்க்கையைப் பாதிப்பவை.

யாழ்ப்பாண மாவட்டம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த காலம் தொடக்கம், சிவில் நிர்வாகம் முந்திய நிலைக்குத் திரும்பிய பின்னரான காலம் வரை, ஏன் இப்போதும் கூட இளைஞர்கள், யுவதிகள் மட்டுமன்றி வயதானவர்களும் காணாமற்போவது, காணாமற்போகச் செய்யப்படுவது, தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இவை குறித்து பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்வதோடு உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்திலும் பதிவு செய்வது வழக்கமாகும். பலர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிலும் முறைப்பாடு பதிவு செய்ததுண்டு.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனக்குள்ள ஆணையை (*Mandate*) கையில் எடுத்து காணாமற்போன சிலர் குறித்து இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கண்டுபிடிக்க முயற்சி செய்தது.

ஆனால் மனித உரிமை ஆணைக்குழு அத்தகைய முயற்சிகள் எதிலும் ஈடுபடுவதற்கு இலங்கை அரசு சட்டவசதி செய்யவில்லை அல்லது அதற்கான ஆணை எதுவும் இருக்கவில்லை.

ஆகையால் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகம் இதுவரை தனக்குக் கிடைத்த முறைப்பாடுகள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன, சம்பந்தப்பட்ட இளைஞர், யுவதிகள் மற்றோரின் நிலைமை என்னாயிற்று என்பது குறித்துத் தெரியப்படுத்த வேண்டும். அதற்கான சட்ட விதிகள் இல்லையெனின் அரசாங்கம் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியவற்றை நீக்குவது என்பது அரசுக்கு ஒவ்வாமையான விவகாரம். அவை இரண்டும் அரசின் ஆட்சியை ஊன்றி நிலைநிறுத்தவும், தான் செய்யக்கூடிய மக்கள் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் உதவும் கருவிகள். ஆகையால் அவை குறித்து இங்கு விவரிப்பதால் எதுவும் ஆக்கபூர்வமாக நடைபெறாது.

குறிப்பிட்ட சந்திப்பில் வலியுறுத்தப்பட்டு மேலே சுட்டிக்காட்டப்படும் மூன்றாவது நான்காவது அம்சங்களில் மனித உரிமை ஆணைக்குழு மக்களுக்கு உதவவேண்டும். அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் செயற்படுவர் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதேவேளை, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்குப் போதிய அதிகாரங்கள் இல்லை என்ற 'பொட்டுக்கேட்டை' நாம் மட்டும் கூறவில்லை. அரசமைப்பின் பதினெட்டாவது திருத்தச் சட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், நாட்டின் மனித உரிமைகள் சட்டத்தைத் திருத்தினால் மட்டுமே ஆணைக்குழுவின் பணிகளை முன்னெடுக்க இயலும் என்று தெரிவித்திருப்பது கவனத்தில் எடுக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இப்போதுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தில் உரிய, வேண்டிய, மிக முக்கியமான திருத்தங்கள் செய்யப்படாவிட்டால், மனித உரிமை மீறல்கள் குறித்து எதனையும் செய்யமுடியாது என்று புதிய ஆணைக்குழுவின் தலைவர் - அவர் முன்னாள் நீதியரசர் - உட்பட அங்கத்தவர்கள் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர்.

ஏனைய நாடுகளில் மனித உரிமை ஆணைக் குழுக்களுக்கு, ஏன் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமை அமைப்புக்களுக்குக் கூட மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டவும் நீதிமன்றுக்கு எடுத்துச்செல்லவும் செயலதிகாரம் உண்டு. அவ்வாறிருக்க, இங்கு மனித உரிமை ஆணைக்குழுவுக்கு வேண்டிய அதிகாரங்கள் இல்லையெனில் அது மக்களுக்கு எவ்வாறு உதவமுடியும். அரசாங்கத்தின் அங்கங்கள், அவை சார்பானவை குறித்த அத்துமீறல்களை வெளிப்படுத்தி மக்களுக்கு நியாயம் வழங்க முடியாது.

புதிய உறுப்பினர்கள் உண்மையைக் கூறிவிட்டதால் அவர்களின் நியமனத்தை ரத்துச் செய்து, அரசு தனது கைப்பொம்மைகளை நியமித்து மனித உரிமை மீறல்களை ஊக்குவிக்குமா இல்லையா என்பது இனித்தான் தெரியவரும். அரசாங்கம் நியாய வழி நடக்குமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# குடாநாட்டில் குடிசன மதிப்பீடு முதற்கட்டப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச். 6

அகில இலங்கை ரீதியாக 2011 ஆம் ஆண்டுக்கான குடிசன மதிப்பீட்டுப் பணிகள் இலங்கை புள்ளிவிவரத் திணைக்களத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலும் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இலங்கை புள்ளி விவரத் திணைக்களத்தினால் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வரைபடங்கள் பெறப்பட்டுள்ளதுடன் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு வசதியாகக் கிராம அலுவலர் பிரிவுகள் கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட பகுதிகளில் கிராம அலுவலர்கள் தவிர்ந்த ஏனைய அரச அலுவலர்கள் வீடுகள், கட்டடங்கள் என்பவற்றைக் குறிப்பிட்ட காலத்தில் அடையாளமிட நியமனம் செய்ய வேண்டுமா என்ற விவரங்களும் பெறப்படுள்ளன.

தற்போது மாவட்ட செயலகங்களுக்கு குடிசன மதிப்பீட்டுச் சுவரொட்டிகள், குடிசன மதிப்பீட்டின் முக்கியத்துவம் அடங்கிய கைநூல்கள் மற்றும் கிராம அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கான ஆவணங்கள் என்பன அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகங்களில் கடமையாற்றும் புள்ளி விவரவியலாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் அண்மையில் நடைபெற்றன.

இதனையடுத்து இம்மாத இறுதியில் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புக்கள் அனைத்தும் முடிவடைந்ததும் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-68)

# இலங்கையில் புதிய வகை மலேரியா நோயாளி இனங்காணப்பட்டார்

அண்மைக்காலமாக இலங்கையில் மலேரியா நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. சில வருடங்களுக்கு முன்னரான காலப்பகுதியில் மலேரியா நோய் இலங்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவந்தது.

குறிப்பாக வன்னிப்பகுதி மலேரியாத் தாக்கத்தின் உச்சங்களில் ஒன்றாக இருந்தது. சுகாதாரப் பிரிவின் கடும் முயற்சியால் இலங்கையில் மலேரியா கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இலங்கையில் ''பிளஸ்மோடியம் பல்சிபாரம்'', பிளஸ்மோடியம் வைவக்ஸ்'' என்னும் ஒட்டுண்ணி வகையே இத்தாக்கங்களை ஏற்படுத்தி வந்தன. உலகில் இது போன்று 4 இன ஒட்டுண்ணிகள் மலேரியா நோயை ஏற்படுத்த வல்லவை. மற்றைய இரு இனங்களும் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

கடந்த மாதம் ஜா-எலப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் ''பிளஸ்மோடியம் மலாரியே'' எனும் மற்றைய வகை நோயாக்கியால் தாக்கப்பட்டு மலேரியா நோயாளியாக முதன் முதலாக இனங்காணப்பட்டுள்ளார். இவர் உகண்டா நாட்டில் பணிபுரிந்து வந்தார் என்பதால் அங்கிருந்து தொற்றுக்குள்ளாகி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

றாகம மருத்துவபீடத்தின் ஒட்டுண்ணியியல் ஆய்வு கூடத்தில் நடைபெற்ற பரிசோதனை மூலம் இது கண்டறியப்பட்டுள்ளது. இதை கண்டறிந்த மருத்துவவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளருக்கு விருதும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (த-149)

**அத்துமீறல் நடவடிக்கை குறித்து**

# வடக்கு மீனவர்களின் கருத்துக்களையறிய வவுனியாவில் இன்று கலந்துரையாடல்

தென் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக வடபகுதி மீனவர்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

நீர்கொழும்பிலுள்ள தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இதில் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் இடம்பெற்றுவரும் நெடுந்தீவு, மாதகல், பருத்தித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் அதிகம் கலந்துகொள்ளவுள்ளனர்.

வவுனியாவில் இடம்பெறும் இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் கருத்துத் தெரிவிக்கையில்:

இந்திய மீனவர்களுக்கும் வடபகுதி மீனவர்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளது. அதற்கு முன்னேற்பாடாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் அடாவடித்தனம் தொடர்பாக வடபகுதி மீனவர்களது நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடாகியுள்ளது- என்றார். (ஒ-14)

# 'ஜெய்க்கா' நிறுவனத்தின் உதவியுடன் உணவு பதனிடல், மீன் வளர்ப்பு பயிற்சி

வண்ணை,மார்ச்.6

'ஜெய்க்கா' நிறுவன அனுசரணையுடன் கடல் உணவு பதனிடல், மீன் வளர்ப்பு ஆகிய ஒரு வாரகாலப் பயிற்சி நெறிகள் கொழும்பு மட்டக்குளியில் அமைந்துள்ள சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தில் இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருப்பதாக யாழ். கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரி உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிக்காக உதவிப் பணிப்பாளர், அலுவலகர் ஆகியோர் இம்மாதம் 20 ஆம் திகதி கொழும்பு செல்லவுள்ளனர்.

இதே வேளை மாலுமிகளுக்கான 3 மாத கால பயிற்சி நெறி கடந்த 1 ஆம் திகதி தொடக்கம் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

கடல் வரைபடம் வாசித்தல், தொடர்பாடல், செய்மதி உபகரணம் இயக்குதல் பயிற்சி நெறிகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் செயல்முறைப் பயிற்சி மேற்கொள்ள 42 அடி நீள நவீன தொழில்நுட்ப கருவிகள் பொருத்திய பயிற்சிக்கலத்தை திருகோணமலையில் இருந்து குருநகர் இறங்குதுறைக்கு எடுத்துவரப்படுவதற்கான பணிகளில் உதவிப் பணிப்பாளர் கொழும்பு சமுத்திரவியல் பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்புடன் ஈடுபட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



மல்லாகம் பழம்பதி தேவஸ்தானத்துக்கு வழிகாட்டியாக இருந்த மாவிட்டபுரம்கந்தசுவாமி கோயில் ஆலய ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமான

**மகாராஜஸ்ரீ து.சண்முகநாதக்குருக்கள்**

அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பழம்பதி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

பழம்பதி தேவஸ்தான சபை, மல்லாகம்.

## கண்ணீர் அஞ்சலி



கொனிக்கா கலர் லாப் உரிமையாளர் ஸ்ரீதரன் அவர்களின் அன்னை

**திருமதி இராசமணி வீரசிங்கம்**

சிவபதமடைந்த செய்திகேட்டு மனம் வருந்துவதோடு ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

தனுஸ் வீடியோ, உரும்பிராய்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் அமரத்துவமடைந்த வருமான

**அமரர் செல்லப்பா நமசிவாயம்**

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: துதியை

அன்னை மடியில் 08.05.1925

இறைவன் அடியில் 15.02.2010

அன்பின் திருவுருவே பாசத்தின் பிறப்பிடமே
பண்பின் சிகரமே அணையா விளக்கே
விரைந்தோடிச் சென்று ஓர் ஆண்டு ஆனதையா
புன்னகை மாறாத உன் திருமுகம்
நெஞ்சம் நிறைந்து நிற்குதையா
பெருமைமிகும் நின் குணத்தை எம் நெஞ்சமதில்
நித்தமும் நினைத்திருப்போம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள் } கனடா
மைத்துனர் (நல்லூர்).

நா.காசிவிசுவநாதன்
நல்லூர்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா பரமசாமி



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா பரமசாமி 04.03.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமியின் (முன்னாள் சாரதி, இ.போ.ச.) அன்பு மனைவியும் பத்மாவதி, ஸ்ரீதரன், பிரபாகரன், இந்துமதி, ஜெயமதி, மனோகரன் (இத்தாலி), வரதன், பாஸ்கரன் (நோர்வே), கருணாகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கலாவதி மற்றும் பராபரன் (சவுதி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற செல்வானந்தம் மற்றும் முத்துவேல், சற்குணம் (சாந்தி), பாலச்சந்திரன், கவிதா, ஜெயந்தி, சிவாஜினி, பகவதி, சிவறஞ்சினி, சிவரூபி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை, மகன் ஸ்ரீதரன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் அல்லாரை கொற்புலவு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.ஸ்ரீதரன் (மகன்).
T.P. 021 7210814

கணபதி அரிசி ஆலை,
மீசாலை கிழக்கு, மீசாலை.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

நிறை கூடிய இறைச்சிக் கோழி விற்பனைக் குண்டு.
உயிர் நிறை :- 270/=
தொடர்பு:- 0776331914

## தேவை

யாழ். தட்டா தெருவுக்கும் மனோகராச்சந்திக்கும் இடையில் நிறுவனம் ஒன்றுக்கு இடம் தேவை.
வீடு அல்லது கடை விரும்பத்தக்கது.

தொடர்பு:- 0771289167

## கட்டடம் வாடகைக்குண்டு

யாழ்ப்பாண நகரிலிருந்து 2 Km தூரத்தில் K.K.S. றோட் தட்டாதெரு சந்திக்கு அருகில் 1500 சதுர அடி அலுவலக பாவனைக்குரிய கட்டடம் வாடகைக் குண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக கம்பனிகள் விரும்பத்தக்கது. வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடியது. மேலதிக வசதிகள் தேவைப் படின் செய்து தரப்படும். இடம் நேரில் பார்வையிட்டு வாடகை தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 0750484976

## மில் வேலை ஆள்கள் தேவை

தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை, கொப்பறா, எள், இலுப்பை பருப்பு (விதை கோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெயாக உடன் ஊற்றித்தரப்படும்.

பாலன் மில்லினால் தயாரிக்கப்பட்ட பைகளில் அடைக்கப்பட்ட தரமான அரிசி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்

பாலன் மில், மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.
021 3212624

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், பிரான்ஸ் இல் PR உடைய 1984 ஆம் ஆண்டு பூரம் நட்சத்திர மணமகனுக்கு சிவந்த மிக அழகிய மணமகள் தேவை.
* சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.

தொடர்பு: 0779063025
E.mail: jaffna2011@hotmail.com

## பெண் விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் இயங்கும் தனியார் மருந்து விற்பனை நிலையமொன்றில் பணிபுரிய பெண் விற்பனையாளர் தேவை.

தொடர்புகளுக்கு: 0772178701

## வேலை ஆள்கள் தேவை

1. வாகனத்தில் சென்று பொருள்களை விநியோகம் செய்வதற்கு ஆண் - 2
2. சமையல் பெண் - 1

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0773923036

## தேவை

## சுத்திகரிப்பு தொழிலாளி

நகரின் மத்தியில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு நிறுவன வளாகம் மற்றும் பூந்தோட்டத்தினை சுத்தப்படுத்தி பராமரிப்பதற்கு முழு நேர சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவர் தேவை. ஆர்வமுள்ளோர் திங்கட்கிழமை (07.03.2011) பி.ப. 2 மணிமுதல் 4.30 மணிவரை கீழ்க்காணும் அலுவலக முகவரிக்கு வருகை தரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

IIS CITY CAMPUS
200, சிவன்பண்ணை வீதி, வைத்தீஸ்வரா சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே. இல. 021 222 8060

Improve the signal on your USB Internet dongle by connecting this mag - mount Antenna

**USB - Modem (Dongle)**

7.2Mbits/s Download
5.76Mbits/s upload
Support windows xp.vista ,7
Plug 'n play

Whole Sale and Retail
Further Details
0777588128



Grand Mobile
No- 22,
1st Cross Street,
Vavuniya.

## கோண்டாவில் சிவபூமி பாடசாலை

## விளையாட்டுப் போட்டி

காலம்: 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி
இடம்: சிவபூமி பாடசாலை விளையாட்டு மைதானம்

தலைவர்: ஆறு.திருமுருகன்
(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர்: திரு.மா.தியாகராஜா
(சிரேஷ்ட சட்டத்தரணி)

திருமதி ரதி தியாகராஜா
(இளைப்பாறிய முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி)

சிறப்பு விருந்தினர்கள்: திரு.மா.இளம்பிறையன்
(விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்)
(சர்வதேச விசேட ஒலிம்பிக் குழு வடமாகாணம் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர்)

திருமதி சிவசக்தி இளம்பிறையன் (ஆசிரியை)


திரு.K.சண்முகநாதன் (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)
(தலைவர் - லயன்ஸ் கழகம், உரும்பிராய்)

திருமதி J.சண்முகநாதன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபூமி குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி



விளைவேலி ஆதீனம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி
விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் உரிமையாளரும், மாவைக்கந்தன் ஆலய ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமான

**மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்**

அவர்களின் பிரிவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரும், விநாயகர் அடியார்களும்.

## கண்ணீர் அஞ்சலி

கொனிக்கா கலர் லாப் உரிமையாளர் ஸ்ரீதரன் அவர்களின் தாய்

**திருமதி இராசமணி வீரசிங்கம்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு மனம் வருந்துகின்றோம். அன்னாரின் குடும்பத்தினரோடு துயர் பகிர்ந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சபேஸ் போட்டோ,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும் அம்பலவாணர் அன் சன்ஸ் உரிமையாளருமாகிய

**பொன்னம்பலம் அம்பலவாணர்**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்,
இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி மாணிக்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/வீமன்காமம் ம.வி.)



வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி மாணிக்கம் நேற்று (05.03.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முத்தையா மாணிக்கத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் உமாசுதன் (கனடா), சாந்தினி (அதிபர், யா/செட்டித்தெரு மெதடிஸ்தமிஷன்), தேவசுதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி (கனடா), கார்த்திகா (கனடா) ஆகியோரின் மாமியாரும் நதினி (கனடா), சரண் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பழனிவேலனின் அன்புச் சகோதரியும் நிர்மலாதேவியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.
021 321 8016

பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளமற்ற லீவுடன் தேர்தலில் குதித்த அரச ஊழியர் இப்போது நிர்க்கதியில்

## ஒத்திவைக்கப்பட்டதால் வந்த விளைவு

யாழ்ப்பாணம், மார்ச் 6

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டிடுவத்றகாகச் சம்பளமற்ற லீவில் நின்ற அரச ஊழியர்கள் பலர் யாழ்.மாவட்டத்தில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமையால் தமது கடமைக்கு மீளத் திரும்புவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதம் 17ஆம் திகதி அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தலை அரசு அறிவித்திருந்தது. இந்தநிலையில் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினால் யாழ்ப்பாணம் உட்பட 60 தொகுதிகளில் எதிர்வரும் 22ஆம் திகதி வரை தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக யாழ்.மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டம் ஆகியவற்றில் 3 நகர சபைகள் 16 பிரதேச சபைகள் உள்ளடங்கலாக 19 சபைகளுக்கான தேர்தலும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த சபைகளுக்கான தேர்தலில் வேட்பாளர்களாகப் பல அரச ஊழியர்களும் சம்பளமற்ற விடுமுறையுடன் போட்டியிடுகிறார்கள். தற்போது தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளமையால் அவர்கள் மீண்டும் தமது அரச கடமைகளுக்குத் திருப்புவதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

கடந்த காலத்திலும் இவ்வாறு தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட போது அவற்றில் வேட்பாளர்களாக நின்ற அரச அலுவலர்கள் எதுவித சிரமுமின்றிக் கடமைகளுக்குத் திரும்ப முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இப்போது அந்த அரச அலுவலர்கள் தமது கடமைகளை மீண்டும் பொறுப்பேற்கச் சென்ற போது சில திணைக்களத் தலைவர்கள் அதற்கு அனுமதி வழங்கியுள்ளனர். எனினும் வேறு சில திணைக்களங்களின் தலைவர்கள் இதற்கு அனுமதி மறுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது. கடமையைப் பொறுப்பேற்பதற்காக அரச அலுவலர்கள் சென்ற போது சில திணைக்களங்களின் தலைவர்கள் அவர்களைத் திருப்பி அனுப்பியதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் போட்டியிடுவதற்காகக் குறிப்பிட்ட அரச ஊழியர்களுக்கு உரிய திணைக்களங்கள் மூன்று மாத காலமே சம்பளமற்ற லீவை வழங்கியுள்ளன.

தேர்தல் நடைபெறாத பகுதிகளில் வேட்பாளர்களாக உள்ள அரச ஊழியர்களின் மூன்று மாத கால லீவு நிறைவு பெறுவதனால் அவர்கள் மீண்டும் உரிய சுற்று நிருபங்களின் படி கடமையைப் பொறுப்பேற்கத் திணைக்களத் தலைவர்கள் அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-68)

## வலி.மேற்குப் பிரதேச சபைக்கு இரண்டு மாடிக் கட்டடம்

உள்ளூராட்சி உட்கட்டுமான மேம்படுத்தல் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வலி.மேற்குப் பிரதேச சபைக்கு நவீன வடிவிலான இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.


இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் அடிக்கல்லை நட்டு வைத்தார்.

46 மில்லியன் ரூபா செலவில் இத்திட்டம் முடிவுறுத்தப்பட்டு இவ்வாண்டு நவம்பர் மாத அளவில் பிரதேச சபைச் செயலாளரிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் வலி.மேற்குப் பிரதேச செயலர் திருமதி தே.பாபு, பொறியியலாளர் ஜி.சுரேன், உதவிப் பொறியியலாளர் கே.சண்முகநாதன் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (த-302)

### சொந்தக் காலில் நிற்க...



*உதவியளிப்பு: வன்னியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுக் கால் ஒன்றின் செயற்பாட்டை இழந்து அங்கவீனமான குடும்பஸ்த்தர் ஒருவரின் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாகக் காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தினால் சைக்கிள் திருத்தும் கடை ஒன்றினை ஆரம்பிப்பதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. வியாவில் ஐயனார் ஆலய பரிபாலகர் மகாராணி க.சோமசேகரம் அங்கவீனமான குடும்பஸ்தருக்கு கடைக்குத் தேவையான பொருள்களை வழங்குகிறார்* (த-250)

## யாழ்.ஆயருக்கு நெடுந்தீவில் வரவேற்பு

நெடுந்தீவு, மார்ச் 6

கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவுக்கு சென்ற யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகைக்கு நெடுந்தீவுத் துறைமுகத்தில் மக்கள் கோலாகலமாக வரவேற்பளித்தனர்.

நெடுந்தீவு மக்களின் வரவேற்பைத் தொடர்ந்து அன்று மாலை தூண்காலைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட இறை இரக்க ஆண்டவர் ஆலயத்தைத் திறந்து வைத்த யாழ்.ஆயர் அங்கு விசேட திருப்பலியையும் ஒப்புக்கொடுத்தார்.

நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு அமல்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இங்குள்ள கத்தோலிக்க மக்கள் கலந்துகொண்டனர்.

நேற்று சனிக்கிழமை நெடுந்தீவு புனித யுவானியார் தேவாலயத்தில் 60 பேருக்கு யாழ்.ஆயர் உறுதி பூசுதல் வழங்கினார். (த-111)

## 'ஜெய்க்கா' உதவியுடன் கடல் அட்டை வளர்ப்பு

ஜெய்க்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் கடல் அட்டை வளர்ப்பு இடம்பெற்று வருவதாக யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பதில் உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நவாந்துறை, குருநகர், மண்டைதீவு ஆகிய இடங்களிலேயே இந்தக் கடல் அட்டை வளர்ப்பு இடம் பெறுகின்றது. கடல் அட்டை ஒன்று ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. பத்து நாள்களுக்கு முன்னர் இந்தக் கடல் அட்டை வளர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மண்டைதீவில் கடல் அட்டை வளர்ப்புக்குரிய ஆரம்ப கட்ட வேலைகள் இடம்பெற்று வருகின்றன. 25 சதுர அடி மீற்றர் பரப்பளவில் இந்த அட்டை வளர்ப்பு நடைபெறுகிறது.

'ஜெய்க்கா' நிறுவனத்தின் நிதியுதவியுடன் கடல்பாசி வளர்ப்பு புங்குடுதீவு கிழக்கில் இடம்பெற்று வருகிறது. கடல்பாசி வளர்ப்புக்கென 30 பயனாளிகள் தெரிவு இடம்பெற்று சுழற்சி முறையில் முதல் கட்டமாக ஐந்து பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அம்பாறையிலிருந்து கொண்டுவரப்பட்ட கடல்பாசியே இங்கு வளர்க்கப்படுகிறது - என்றார். (த-14)

## ஆரிய திராவிட பாஷா சங்க கட்டடத்தில் இராணுவத்தின் தேசிய மாணவர் படை

யாழ்ப்பாணம், மார்ச் 6

இராணுவத்தின் தேசிய மாணவர் படையணியைத் தங்க வைப்பதற்காகவே ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் கட்டடம் சுவீகரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நீண்டதொரு பாரம்பரியம் மிக்க இந்தச் சங்கத்தின் செயற்பாடுகளை எதிர்காலத்தில் எவ்வாறு மேற்கொள்வது என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

1921ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளால் யாழ்ப்பாணத்தில் பல பண்டிதர்கள், தமிழ் அறிஞர்கள் உருவாக்கப்பட்டனர். அத்துடன் தமிழ் கலாசார விழுமியங்களையும் அது பேணிப் பாதுகாத்து வந்தது.

1999ஆம் ஆண்டு முதல் இந்தச் சங்கத்துக்கு யாழ்.கொட்டடியில் உள்ள அரச கட்டடமொன்று நிரந்தரமாக வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தற்போது அந்தக் கட்டடத்தில் இருந்து ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தினை வெளியேறுமாறு வடமாகாண ஆளுநரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தில் இராணுவத்தின் தேசிய மாணவர் படையணியினைத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கல்வித் திணைக்களத்தின் நம்பத் தகுந்த வட்டாரங்கள்தெரிவித்தன. (த-9)

# வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தில் பணிபுரியும் தென்பகுதி ஊழியர் அதிருப்தி

## சுற்றறிக்கை காரணமாக இடமாற்றம் கோருகின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தென்பகுதியிலிருந்து வடமாகாணச் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றவர்களும், பல்வேறு பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களும் வேறு மாகாண சுகாதார திணைக்கள நிறுவனங்களுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்துவருவதாகத் தெரியவருகிறது.

கடந்த மாதம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் விடுவிக்கப்பட்ட சுற்றறிக்கையை அடுத்தே வைத்தியசாலையில் கடமையாற்றும் பல் வேறு தர உத்தியோகத்தர்கள் இடமாற்றம் கோரி வருவதாகத் தெரியவருகிறது.

வடக்கு மாகாணச் சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விடுமுறை வேதனம் மற்றும் மேலதிக நேரப்படி ஆகியவை மட்டுப்படுத்தப்பட்டதையடுத்தே உத்தியோகத்தர்கள் இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள சுகாதாரத் திணைக்களங்களிலும் போதனா மற்றும் பொது வைத்தியசாலைகளிலும் இவ்வாறான செயற்பாடுகள் இல்லையென்பதால் உத்தியோகத்தர்கள் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் கோரி வருவதாகவும், இந்தச் செயற்பாட்டினால் வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் மீண்டும் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை ஏற்படலாமெனவும் தெரியவருகிறது. (த-207)

## வைக்கோலுக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், மார்ச் 6

நவாலியில் வைக்கோலுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள் ளது. அறுவடை முடிந்த கையோடு நல்லின வைக்கோல் ஒரு கட்டு 350 ரூபா முதல் 400 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த காலங்களை விட இவ்வருடம் கால்நடை வளர்ப்போரின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்தே வைக்கோல் பெரும் விலைக்கு விற்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (த-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

NPHC.... தொடரிலக்கம் உடைய Hero Honda Street Smart விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு 0777115876,
(1064) 0213214803 (44-)

**வீடு விற்பனை**

வில்லியம் கிரைண்டிங் மில்லுக்கு அருகில் Dehiwela, 3 மாடிக் கட்டடத்தில் 3 ஆவது மாடியில், 3 படுக்கையறை, 2 குளியல் அறை, வாகனத்தரிப்பு எல்லா வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 2365738

# முல்லைத்தீவு குடும்பங்களின் விவரம் திரட்டல்

தென்மராட்சி, மார்ச் 6

தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களின் விவரங்கள் அந்தந்தக் கிராம அலுவலர்களால் திரட்டுப்பட்டு வருகின்றன. (த-207)

Aitken Spence

# அறிவித்தல்

**மிஹிந்தலையில் - களஞ்சியப்படுத்தல் (Yard) மற்றும் அலுவலகத்திற்கான இடவசதி உண்டு**

எமக்குச் சொந்தமான இடங்களில் பொருள்களைக் களஞ்சியப்படுத்துவதற்கான இடவசதிக்கான காணி மற்றும் அலுவலகத்திற்கான இடவசதிகள் உள்ளன.

- கைத்தொழில் பேட்டைகள் அமைந்துள்ள பகுதிகளில்
- பிரதான வீதிக்கு சமீபமாக 20 அடி மற்றும் 40 அடி நீளமான கொள்கலன்கள் செல்லக்கூடிய வசதியுடன்
- கொள்கலன்களை சேமித்து வைப்பதற்கான இடவசதியாகவும் பயன்படுத்த முடியும்

**கொக்கலையில் - களஞ்சியசாலை (Warehouse) இடவசதி**

களஞ்சியசாலை அல்லது களஞ்சியப்படுத்தல் இடவசதி

- கொக்கலை கைத்தொழில் பேட்டை அமைந்துள்ள பகுதிக்கு சமீபமாக
- 3,000 சதுர அடி பரப்பைக் கொண்டதாக களஞ்சியசாலைக்குரிய இடவசதி
- பிரதான வீதிக்கு சமீபமாக 20 அடி மற்றும் 40 அடி நீளமான கொள்கலன்கள் செல்லக்கூடிய வசதியுடன்

**மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-**

மனோஜ் பெர்னாண்டோ, எட்கன் ஸ்பென்ஸ் லொஜிஸ்டிக்ஸ்,
இல: 775/5 நீர் கொழும்பு வீதி, மாபோலை – வத்தளை
தொலைபேசி : 2944533 (D), 2931227, 2931845 Ext. 533
மொபைல் : 0773514175

Aitken Spence® Logistics

ATS ELGI
Think Long Run

**30 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் சந்தையில் முதல்வன்**




வாகனங்கள் சுத்திகரிக்கும் நிலையங்களுக்கு உபயோகிக்கப்படும் இயந்திரங்கள்




நோத் அன்ட் ஈஸ்ற் எஞ்சினியறிங்,
யாழ் வீதி, மானிப்பாய்.

தொ.பே: 021 720 0290 Mobile: 0777568685

# விக்ரம் – ராஜன் – கங்கு
## ஞாபகார்த்த கிரிகெட் சுற்றுப் போட்டி – 2011

இறுதியாட்டம்
யாழ். கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம்
எதிர்
யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணி

தலைவர்: - திரு. இ. சிவசங்கர்
(Project Engineer, UNOPS)

பிரதம விருந்தினர்: - திரு. அ. பஞ்சலிங்கம்
(முன்னாள் அதிபர் - யாழ். இந்து, கொக்குவில் இந்து)

சிறப்பு விருந்தினர்: - திரு. அ. அகிலதாஸ்
(அதிபர் - கொக்குவில் இந்துக் கல்லூரி)

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்.
நாள்: இன்று (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை.
நேரம்: காலை 08.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும், கொக்குவில்.

(சி/575407)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமணி வீரசிங்கம்



சிவன்பண்ணை வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும், 198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி வீரசிங்கம் 04.03.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சவுந்தரம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான திருமதி இராசம்மா இராசையா, திருமதி லட்சுமி கந்தையா மற்றும் திருமதி பாக்கியம் செல்லப்பா, காலஞ்சென்றவர்களான இராசையா, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரன் (ஜெயம் - ஜேர்மனி), விமலரதி, நித்தியகலா, ஸ்ரீதரன் (சிறிராம் ஜுவல்லர்ஸ், கொனிக்கா கலர்லாப்), விஜயகுமாரி, ரவீந்திரகுமார் (சுப்பஸோ - லண்டன்), ஜெயசீலன் (சானுகா நகைமாடம்), ஸ்ரீசக்திவேல் (ஸ்ரீ மீனாட்சி ஜுவல்லர்ஸ், டொட் லைன் கலர் லாப்), நிகிலா, உஷாநந்தினி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற திருமதி கலா ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி) மற்றும் சண்முகலிங்கம் (பூரணி நகைமாடம்), சுரேந்திரன் (டுபாய்), திருமதி மைதிலி ஸ்ரீதரன், சத்தியரூபன் (ஸ்ரீ நதியா நகைமாடம், ஸ்ரீ நதியா கலர் லாப்), திருமதி அனுசியா ரவீந்திரகுமார் (கொழும்பு), திருமதி சத்தியப்பிரியா (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்), கிருஸ்ணமோகன் (ரட்ணா கொன்ஸ்ரக்சன்ஸ்), இராஜேஸ்வரன் (பிரதேச செயலகம் - கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு மாமியும் திருசாந்தன், நிரோசன், மீனஷா, மீனலக்ஷன், ஹரிஸ்ராம், ஹரிணி, ஸ்ரீ நதியா, சானுகா, கஜலக்ஷன், கஜஹனுசன், சுபசிரவின், வர்ஷன், சாய்பிரதா, திருசாளினி, நிஹாசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*198/5, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*021 222 2435.*

தகவல்:
குடும்பத்தினர்.

(32-24-50)

# மரண அறிவித்தல்

## திருமதி ஆச்சிப்பிள்ளை வயித்திலிங்கம்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் (வெள்ளவத்தை) வாழ்ந்து வந்தவருமான ஆச்சிப்பிள்ளை வயித்திலிங்கம் 03.03.2011 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அல்லியர் சின்னையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கோண்டாவில் சின்னையா வயித்திலிங்கத்தின் அருமை மனைவியும் செல்லத்துரை, பொன்னம்மா, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற பூமணி மற்றும் புஸ்பவதி, சறோஜினிதேவி, கலாநிதி ஜெயக்குமார் ஆகியோரின் அருமைத் தாயும் வேலாயுதபிள்ளை, காலஞ்சென்ற பூதத்தம்பி, காலஞ்சென்ற அருந்தவநாதன், இராசரத்தினம், பத்மினி ஆகியோரின் அருமை மாமியும் ரவிராஜ், ரவிரஞ்சன், றாகினி, ரவிகாந்தன், ரவிமோகன், யமுனா, ரவிதாஸ், ராஜ்குமார், ராஜு, சுதர்சினி, சுதர்சன், சுபாசினி, நிர்மலன், கலாநிதி பிரேம்ராஜ், சசிகலா, உதயராஜ், மேகலா, கோபிரான், நிருசான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் 32 பூட்டப்பிள்ளைகளின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிதொடக்கம் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகி பூதவுடல் கல்கிசை மயானத்தில் பி.ப.2 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*36 ஏ/2, 37 ஆவது ஒழுங்கை,*
வெள்ளவத்தை,
*கொழும்பு-06.*
*தொ.பே: இல - 2582531 / 2554830*

தகவல்:
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

(சி/576295)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

## உப்பளங்களில் கடமையாற்றியவர்கள் பற்றிய தகவல் சேகரிப்பு

மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆனையிறவு உப்பளத்துக்கு முன்னனுபவம் உள்ள வேலையாள்கள் சகல தரங்களிலும் தேவைப் படுகின்றனர். ஆகவே, வடமாகாண உப்பளங்களில் வேலை புரிந்தோர் (முன்னனுபவம் உள்ளவர்கள்) இவ் விண்ணப்பப் படிவத்தில் உள்ள விவரத்தை நிரப்பி கீழ் தரப்பட்ட முகவரிக்கு உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1. முழுப்பெயர் : ..................................
2. முகவரி : ..................................
3. தொலைபேசி இல. : ..................................
4. பிறந்த திகதி : ..................................
5. இறுதியாகத் தொழில் செய்த இடமும் பதவியும் : ..................................
6. கல்வித்தகைமைகள் : ..................................
7. உப்பளம் சார்ந்த அனுபவம் : ..................................

**விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து 2011.03.20ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி** : செயலாளர்,
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
780, மருதானை வீதி, கொழும்பு - 10.

விண்ணப்பப்படிவத்தின் இடது பக்க மேல்மூலையில் "உப்பளங்களில் கடமையாற்றியவர்கள் பற்றிய தகவல் சேகரிப்பு" என்ற தலைப்பைக் குறிப்பிட வேண்டும்.

வே. சிவஞானசோதி
செயலாளர்
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

(49-19-21)

## காணி விற்பனை


கே.கே.எஸ் வீதி, மருதனார்மடம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரிக்கு அருகில் விளாப்பை பரப்பு 4¾ காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய நாள்கள் திங்கள் முதல் வெள்ளி வரை.
தொலைபேசி இல:- 0773945822

## வீடு விற்பனைக்கு

1½ பரப்புக் காணியுடன்
ஆஸாத் வீதி (மானிப்பாய் வீதியில்)
யாழ்ப்பாணம்.
தொ.பே. 0772344377, 0777 209 558, 0777 70 70 88

## இலெக்ட்ரிக் மோட்டர்




ரூபா 7500/= லிருந்து

ஜெனரல் இகியுமன்ட்ஸ் லிமிடெட்
400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 12.
தொலைபேசி: 2345046, 2327264, 2343823
2430799 தொலைநகல்: 2434637

## STUDYING IN UK

World Class Education at an affordable cost



ADMISSIONS FOR MARCH/APRIL/JUNE 2011 INTAKES

NO WIN* NO FEE

IELTS is not mandatory*

OUR PARTNER COLLEGES IN PARTNERSHIP WITH

University of Bolton, Trinity Saint David, University of Wales Newport, Coventry University, UEL, University of Wales, University of Gloucestershire

OUR PARTNER COLLEGES
- Greenwich School of Management London
- British Institute of Technology & E-commerce
- College of Technology London
- Guildhall College
- E College London
- City of London Academy
- Oxford College International
- 360GSP College
- SDS College London
- Scott's College London
- Nelson College London
- Winston College

Hotline: 077 3691913

For More Details
IES, 479-1/1, Galle Road, Colombo-06.
TP | 011 4378835 / 011 5766722 M | 0773691913,
@ | subitha@ies.lk, Web : www.ies.lk
LONDON OFFICE : 165B, HIGH STREET, EASTHAM, LONDON E6 1JB

* Terms and Condition Apply

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்: 20.04.1941

ஆண்டவன் அடியில்: 04.02.2011





(48,19,21)

எங்கள் வாழ்வின் உயர்விற்கு ஏணியாக வாழ்ந்த
எங்கள் அம்மாவே! நீங்கள் எங்கு சென்றீர்கள்?

எம்மை உலகிற்கு அறிமுகம் செய்து அறிவாலே எமது
வாழ்வை வளம்படுத்தி வாழ்க்கையிலே நம்மை இன்பங்
காணவிட்டு அம்மா நீங்கள் எங்கே சென்றுவிட்டீர்கள்

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் இலக்கணமாய் வாழ்ந்த
எங்கள் அம்மாவே எங்களை விட்டு எங்கு சென்றீர்கள்

அம்மா எங்கள் அறிவு வளர்ச்சிக்கு நல் ஆசானாய்
நோயுற்றபோது நல் வைத்தியனாய் மனந்தளர்வுற்ற போது
தைரியமாய் மனம் விட்டுக் கதைக்கும்போது சிறந்த நண்பியாய்
இருந்து எம்மை வளர்த்து பாதுகாத்தீர் அம்மா

நீங்கள் எங்களுக்கு பாசமுள்ள அம்மாவாய் தந்தையாய்
சகோதரியாய் அம்மம்மாவாய் வாழ்ந்தீர் அம்மா

நீங்கள் பூப்பறித்த பூமரம் இன்னும் வாடவில்லை
நீங்கள் பறித்த பூ அம்மனின் காலடியில் இன்னும் வாடவில்லையே

தாயே எங்கள் முகங்களை வாட்டி வதங்கவைத்துவிட்டு எங்கு சென்றீர்கள்
இனி எந்த ஜென்மத்தில் உங்களை நாம் காண்போம்
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உங்களுக்கே பிறக்கும் வரம்
கிடைக்க இறைவனைத் துதிக்கின்றோம் அம்மா

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவன் பாதத்தை இறைஞ்சுகின்றோம்

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் Innovoge International Company க்கு Distributor, Supervisor தேவை. நீங்களும் இணைந்து கொள்ளலாம்.
6 மாத கால பயிற்சி வழங்கப்படும்.
தகைமை: ஜி.சீ.ஈ. (சாதாரணதரம்)
தொடர்புகளுக்கு: 0776390493, 0776219536
Old Road, Kopay South, Kopay.

## M&D Electric Service

சகலவிதமான மின்னிணைப்பு வேலைகளும், நீர்க் குழாய் வேலைகளும், உறுதியாகவும், உத்தரவாதத்துடனும், குறித்த தவணையில் செய்து கொடுக்க நாடவேண்டிய ஒரே நிறுவனம். M&D Electric Service

T.P: 0713913924, 0777913924, 077 946 9844.
E-mail- rajan913@gmail.com

## வீடு விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில், பிரதான வீதியில் 2 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0724590055

## New Medi Care Hospital

காது, மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை நிபுணர்
Dr. B. திருமாறன் (E.N.T. Surgeon)
ஒன்றுவிட்ட வியாழன் பி.ப. 5.30 மணிக்கு நியூ மெடிகெயர் வைத்தியசாலை, சாவகச்சேரிக்கு வருகை தருவார். பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்.

இல. 32, கச்சாய் றோட், சாவகச்சேரி.
T.P. : 021 3734505, 021 4920949.

இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்

TOKYO SUPER | TOKYO SUPER MIX READY MIXED CONCRETE | NIPPON CEMENT

## READY MIXED CONCRETE PLANT-யாழ்ப்பாணம்

சர்வதேச தரக்கட்டுப்பாட்டுக்கும், இலங்கை தரக்கட்டுப்பாட்டுக்கும் இசைவாக சீமெந்து உற்பத்தி சம்பந்தமாக கீர்த்திநாமம் பெற்ற வ/டோக்கியோ சீமெந்து (லங்கா) பீஎல்சி கூட்டுத்தாபனத்தில் கீழ்வரும் வெற்றிடங்கள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### கொங்கிரீட் ட்ரக் மிக்ஷர் சாரதிகள் (Concrete Truck Mixer Driver)

கனரக வாகனங்கள் ஓட்டுதல் சம்பந்தமாக குறைந்தபட்சம் 05 வருட அனுபவமும் நல்ல தேகாரோக்கியமுள்ள 25 - 50 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

சம்பளம் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரர் தனது சுயவிபரங்களுடன் உறவினர் அல்லாத அத்தாட்சிப்படுத்தும் இருவரின் விபரங்களுடனும் தனது பெயர், முகவரியுடன் விண்ணப்பத்தை 07 நாட்களுக்குள் கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மனிதவள மற்றும் நிர்வாக முகாமையாளர்
**டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பீஎல்சி**
77B, புதிய நுகே வீதி, பேலியகொட.
பெக்ஸ்: 0112 945866

WATERTEC PRINCE Husqvarna Einhell

## பதவி வெற்றிடம்

ஹாட்வெயார் மற்றும் இலகு இயந்திரங்களை விற்பனை செய்வதில் கடந்த 06 தசாப்தங்களாக உறுதியான நிலைப்பாட்டினைக் கொண்டிருப்பதோடு சர்வதேச ரீதியாக தலைசிறந்து விளங்கும் பலவித ஹாட்வெயார் மற்றும் இலகு இயந்திரப் பொருட்களுக்கு முகவராகவும் இருந்து வரும் சென். அந்தனீஸ் ஹாட்வெயார் (தனியார்)கம்பனியானது, பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

### களஞ்சியப் பொறுப்பாளர் - யாழ்ப்பாணம்

விண்ணப்பதாரி பின்வரும் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தியுடன் களஞ்சியப்பொறுப்பு சம்பந்தமாக குறைந்தது 01 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
- களஞ்சியப்பொறுப்பு, விலைப்பட்டியல் கட்டுப்பாடு மற்றும் களஞ்சிய ஆவணங்கள் தொடர்பான பூரண அறிவு இருத்தல் வேண்டும்.
- வயது முப்பத்தைந்துக்கு குறைவாக இருத்தல் அவசியம்.
- களஞ்சியப்பொறுப்பு சான்றிதழ் வைத்திருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும், தமது உறவினரல்லாத மதிப்புக்குரிய இருவருடைய பெயர்,முகவரியிடப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் களஞ்சியப் பொறுப்பாளர் - யாழ்ப்பாணம் எனக் குறிப்பிட்டு ஏழு தினங் களுக்குள் தபால்,பெக்ஸ் அல்லது மின்னஞ்சல் மூலமாக கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

The Manager HR & Administration,
**St. Anthony's Hardware (Pvt) Ltd.**
524, Sri Sangaraja Mawatha, Colombo 10.
Fax: 2446554 E-mail: vacancy@stanthonys.lk

இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்

TOKYO SUPER | TOKYO SUPER MIX READY MIXED CONCRETE | NIPPON CEMENT

## READY MIXED CONCRETE PLANTS

பேலியகொட, எல்பிட்டிய, யாழ்ப்பாணம், திருகோணமலை

சர்வதேச தரக்கட்டுப்பாட்டுக்கும், இலங்கை தரக்கட்டுப்பாட்டுக்கும் இசைவாக சீமெந்து உற்பத்தி சம்பந்தமாக கீர்த்திநாமம் பெற்ற வ/டோக்கியோ சீமெந்து (லங்கா) பீஎல்சி கூட்டுத்தாபனத்தில் கீழ்வரும் வெற்றிடங்கள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### கொங்கிரீட் பம்ப் இயக்குனர்கள் (Concrete pump car operators)

கொங்கிரீட் பம்ப் இயக்குதல் சம்பந்தமாக குறைந்தபட்சம் 05 வருட அனுபவமும் நல்ல தேகாரோக்கியமுள்ள 50 வயதுக்குக் குறைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு நல்ல சம்பளமும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர் தனது சுயவிபரங்களுடன் உறவினர் அல்லாத அத்தாட்சிப்படுத்தும் இருவரின் விபரங்களுடனும் தனது பெயர், முகவரியுடன் விண்ணப்பத்தை 07 நாட்களுக்குள் கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 0773 497478 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மனிதவள மற்றும் நிர்வாக முகாமையாளர்
**டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பீஎல்சி**
469 1/1, காலி வீதி,கொழும்பு 03.
பெக்ஸ்: 2945866 ஈ-மெயில்: supermixpegoda@tokyocement.lk

மாவை ஆதீனம்
## மஹாராஜ ஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள்
அவர்களின் மறைவு குறித்து
### சர்வதேச இந்துமத குருபீடத்தின்
# கண்ணீர் அஞ்சலி

இலங்கைத் திருநாட்டின் புகழ்பூத்த
யாழ்/மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி தேவஸ்தான
ஆதீன பிரதம குருவும் வேத, ஆகம சித்தாந்த
வித்தகரும் சிவாகம கிரியா பூஷணமாகவும்
திகழ்ந்த மாவை ஆதீனம் மஹாராஜ ராஜஸ்ரீ
து.ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள்
முருகப் பெருமானின் திருவடி சேர்ந்த
செய்தி கேட்டு வேதனை அடைந்தோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்து மஹாராஜ
ஸ்ரீ குருக்கள் அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்தித்து எமது கண்ணீர்
அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி,
சர்வதேச இந்துமத குருபீடம்.
*( அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)*
கொழும்பு-13

(48,27,23)

# மரண அறிவித்தல்

மாவையாதீனம்
## மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாத குருக்கள்



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், மாவை ஆதீன கர்த்தாவும், பிரதான சிவாச்சாரியாருமாகிய, மஹாராஜஸ்ரீ சு.துரைச்சாமிக்குருக்கள் ஷண்முகநாதக்குருக்கள் 04.03.2011 வெள்ளிக்கிழமை இரவு 10.15 மணியளவில் மாவை திருமுருகன் திருவருள்துணை கொண்டு சிவசாயுட்சிய பதவிநிலை அடைந்துள்ளார் (சிவபதமடைந்துள்ளார்).

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமிக்குருக்கள் - நாராயணியம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் கீரிமலை நகுலேஸ்வர ஆதீனம் கு.நகுலேஸ்வரகுருக்களின் அன்பு மைத்துனரும் நகுலேஸ்வரகுருக்கள் வேதநாயகிஅம்மாவின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற து.சுந்தரமூர்த்திக்குருக்கள், வைத்தியநாதக் குருக்கள் (இராசாக்குருக்கள்) - விசாலாட்சிஅம்மாளின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று கீரிமலைத் தீர்த்தக்கரைக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் மாவைக்கந்தன் அடியார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இளவரசு ஷ.ரத்தினசபாபதி குருக்கள் மற்றும் மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள்
இலங்கைத் தொலைதொடர்புகளுக்கு: 021 3210349,
கைத்தொலைபேசி: 0771042257
*மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளத்தடி வைரவர்



அன்றைய இரவு நீண்டுகொண்டு போனதாகவே அவனுக்குத் தோன்றியது. சிலவேளை விடியற் காலையை எதிர்பார்க்கும் அவனது அவசரம் கூட அதற்குக் காரணமாக இருக்கலாம். நீண்ட தூர ஓட்டப்பந்தையத்தில் நிதானமாக ஓடுபவன் கடைசி நேரத்தில் தன் முழு சக்தியையும் பாவித்து வேகத்தை அதிகரிப்பது போல் ஒரு வருடத்துக்கு மேல் பொறுமை காத்த அவனுக்கு அந்த இரவு ஒருவித தவிப்பையும் ஏற்படுத்தியிருக்கலாம்.

விஸ்வநாதக் குருக்கள் என அழைக்கப்படும் அந்த விஸ்வநாதன் பொறுமையற்றவனாகப் புரண்டு மறுபக்கமாகப் படுத்துக் கொண்டான். அவனின் மனைவி ஆழ்ந்த உறக்கத்திலிருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. நிறைமாதக் கர்ப்பிணியாகிய அவள் வசதிகளற்ற அந்த முகாமில் தன் பிரசவம் எப்படி நடக்கப்போகிறது என்பது பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. அப்படி அவன் ஏதாவது கவலைப்பட்டுச் சொன்னால், அவள், ''இவ்வளவு காலம் பட்டதைவிட என்ன புதிசாய் வரப்போகுது'' என்று சிரித்தவாறே சொல்லி அவனைத் தைரியப் படுத்துவாள். அவன் மறுநாள் கிளிநொச்சி போய்வரப் போவதாகச் சொன்னபோதும் அவள் ''ஓ.. நீங்கள் யோசியாமல் போட்டு வாங்கோ.. அப்படி ஏதுமெண்டால் பக்கத்து 'ரென்ற்' ஆக்கள் இருக்கினை தானே'' எனத் தடைசொல்லாமல் விடைகொடுத்தாள்.

இன்றோ நாளையோ என்ற அவளின் நிலையில் அவளை விட்டுப் போகத் தயக்கமாக இருந்தபோதிலும் போகாமல் இருந்தால் பைத்தியம் பிடித்து விடும் போலவும் அவனுக்குத் தோன்றியது. இறுதியில் நீண்ட மனப்போராட்டத்தின் பின் போவது என்று அவன் முடிவெடுத்து விட்டான்.

எப்படிப் புரண்டு புரண்டு படுத்த போதிலும் தூக்கம் மட்டும் வரமறுத்தது. வழமைபோலவே கூடாரத்துணியை ஊடுருவிவரும் மின்சார வெளிச்சம் கூட அப்போது அவனுக்கு என்றுமில்லாதவாறு இடையூறாக இருப்பதாகவே தோன்றியது.

மெல்ல எழுந்து வந்து கூடாரத்துக்கு அருகில் கிடந்த மரக்குற்றியில் அமர்ந்துகொண்டான். ஆங்காங்கே நடப்பட்டிருந்த காட்டுத்தடிகளில் கட்டியிருந்த அந்த மின்குமிழ்களின் ஒளியில் கண்ணுக்கெட்டியவரை கூடாரங்கள் சிதறிக்கிடந்தன. மறுபுறம் மங்கிய நீலவானத்தில் விரிந்து கிடந்த விண்மீன்களின் பின்னணியில் இருள் மண்டிக் கிடந்த அந்தக் காடு ஒருபெரும் கரும்பூதமாகப் பரந்து கிடந்தது.

உதயன் 25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**வெள்ளிவிழா சிறுகதைப் போட்டியில் பாராட்டுப் பெற்ற சிறுகதை 8**

நெஞ்சளவு நீரிலும், முழங்காலளவு சேற்றிலும் நந்திக்கடலை நடந்து கடந்து, இராணுவக் கட்டுப்பாடுப் பகுதிக்கு வந்து விசாரணைகள், நாள் கணக்கில் வரிசையில் நிற்றல், உணவுக்கும் நீருக்கும் தவித்தல் போன்ற சடங்குகளை முடித்து கூடார வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டது. அவர்கள், தாங்கள் ஒரு பூசகர் குடும்பம் என்பதைப் பல சமயங்களில் வலிந்து மறக்கவேண்டியிருந்தது. எனினும் அவன் அங்கு நின்ற மரத்தடியில் ஒரு கல்லைவைத்துப் பூசை செய்யமட்டும் தவறவில்லை. நாள்கள் செல்லச் செல்ல மற்றவர்களும் அதைக் கோயில் என ஏற்றுக் கொள்ளும் நிலை தோன்றிவிட்டது. ஆனால் அங்கு வந்து சேர்ந்த முதல் இருவாரங்களிலும் வரிசையில் நின்று வாங்கிய உணவை ''சிவசிவ'' என்று சொல்லி மூன்று முறை நீர் தெளித்துவிட்டுச் சாப்பிட்டதை மட்டும் அவனால் மறக்க முடிவதில்லை.

எவ்வளவு வெளிச்சம் இருந்த போதிலும் அவனின் மனதைப் போலவே எல்லா இடமும் இருளடைந்திருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

இன்றைய வாழ்வும், அவலங்களுக்கான காரணங்களும் எண்ணங்களில் மீண்டும் மீண்டும் கீறிக்கீறி ரணங்களை ஏற்படுத்திய போதும் ஏதேதோ ஞாபகங்கள் இதயத்தில் இழையோடின. அவன், தான் ஒரு பெருந்தவறைச் செய்துவிட்டதாகவும், அதற்கான தண்டனையையே ஒவ்வொரு கணமும் அனுபவிப்பதாகவும் பல சமயங்களில் உணர்வதுண்டு.

சிவந்த மேனியும் உயர்ந்த உருவமும் அகன்ற நெற்றியில் எப்போதும் திகழும் விபூதிக் குறிகளும் நீண்ட கழுத்தை விட்டு எப்போதுமே பிரியாத உருத்திராட்ச மாலையுமாகக் காட்சியளிக்கும் வேதார்ணியக்குருக்கள் மேல் அந்த ஊரே தனி மதிப்பு வைத்திருந்தது. அந்தக் குளத்தில் அலைகரைக்கு எதிராக வீதியைக் கடந்து இயற்கையாகவே அமைந்திருந்த அந்த மேட்டுப்பகுதியில் கட்டப்பட்டிருந்த சிறிய வைரவர் கோவிலின் பூசகர் அவர். அந்த ஊரில் இடம்பெறும் மரணச்சடங்குகள் முதல் அந்தியேட்டிக்கிரியைகள், துவஷங்கள், புதுமனைப் புகுதல், திருமணங்கள், பூப்புனிதநீராட்டு விழாக்கள் என எவையுமே அவர் இல்லாமல் நடைபெறுவதில்லை.

அன்று புரட்டாதிச்சனி விரதம். விஸ்வநாதனின் மனைவி சாரதாவும் மூன்று வயது மகளும் இலைகளில் போட்ட படையலை ஒரு உயரமான இடத்தில் வைத்துவிட்டுக் ''கா..கா'' எனக் காகங்களை அழைத்துக் கொண்டிருந்தனர். வேதார்ணியக் குருக்கள் காகங்களைக் கூவியழைக்கும் மருமகளையும் பேர்த்தியையும் வேடிக்கையாகப் பார்த்தவாறு கோயில் முகப்பில் அட்டணைக்கால் போட்டவாறு அமர்ந்திருந்தார்.

எங்கிருந்தோ பறந்து வந்த இரு காகங்கள் சோற்றில் வாய் வைத்தபோதுதான் கூவி வந்த எறிகணை ஒன்று அவர்களைக் கடந்து சென்று வயல்வெளியில் விழுந்து வெடித்தது.

மருமகளும் பேர்த்தியும் விழுந்து வெறும் தரையில் படுத்துக் கொண்டனர். வீட்டுக்குள் நின்ற விஸ்வநாதனும் வெளியே ஓடி வந்தான்.

''எல்லோரும் பங்கருக்குள்ளை வாங்கோ'' என்று விட்டு அவன் தனது மகளைத் தூக்கிக் கொண்டு பதுங்கு குழியை நோக்கி ஓட, சாரதாவும் எழுந்து அவனைப் பின்தொடர்ந்தாள். அடுத்தடுத்து வந்த எறிகணைகள் அவர்களுக்கு அண்மையிலேயே வீழ்ந்தன. பெரும் வெடியோசை மட்டுமன்றி மரங்களில் இருந்து சருகு விழுவது போன்ற எறிகணைச் சிதறல்களின் ஒலியும் அவர்களின் காதில் விழுந்தது.

விஸ்வநாதன் கத்தினான்... ''ஐயா... பங்கருக்குள்ளை வாங்கோ....'' பெரிய குருக்கள் அசையவேயில்லை. கண்களை மெல்ல மூடியவாறு எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அது ஒரு தேவாரமாகவோ அல்லது காயத்திரி மந்திரமாகவோ இருந்திருக்கலாம். எறிகணை ஒலிகளோ, விமானக் குண்டு வீச்சுக்களோ அவர்களுக்குப் புதிவையல்ல.. இருந்தபோதிலும் இதற்கு முன்பு அவர்களைச் சுற்றி அதிரவைக்கும் வகையில் எறிகணைகள் விழுந்ததில்லை. எறிகணைகளின் தொடர்த் தாக்குதல் நின்றபின்பு விஸ்வநாதன் பதுங்கு குழியை விட்டு வெளியே வந்தான்.

''ஐயா... இப்பிடி செல் விழுகுது.. அசையாமல் இருக்கிறியள்...'' அவர் மெல்லச் சிரித்தார்.

''இதிலை விழுந்தால்..அது வைரவருக்கும் தானே...! அவருக்கு ஒண்டு நடந்தால் பிறகு நான் எங்கை பூசை செய்கிறது...''. அதற்கு மேல் அவருடன் கதைப்பதில் பயன் எதுவுமில்லை என்பதை அவன் நன்றாகவே அறிவான். எதுவும் பேசாமல் அந்த இடத்தைவிட்டு அகன்றான்.

''மாமாவைப் போசனம் பண்ண வரச்சொல்லுங்கோ'' வீட்டுக்குள்ளிருந்து சாரதாவின் குரல் கேட்டது. அன்று மாலையும் சிறிது நேரம் எறிகணை [illegible] ஒலிகளும் அடிக்கடி கேட்கத் தொடங்கின. அன்று மாலையே மக்கள் ட்றக்ரர்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள் எனப் பல்வேறு வாகனங்களிலும் முடிந்தளவு பொருள்களை ஏற்றிக் கொண்டு வெளியேற ஆரம்பித்தனர்.

வீதிகள் வாகனங்களால் நிறைந்துவிட்டன. அன்று இரவு விஸ்வநாதன் தகப்பனிடம் ''ஐயா சனமெல்லாம் வெளிக்கிடுது.. இஞ்சை இருக்கிறது ஆபத்துப்போல கிடக்கு...'' அவர் சில வினாடிகள் அமைதியாக இருந்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் ''ஓ... விடியக் கொண்டு போகக் கூடிய சாமான்களையும் எடுத்துக்கொண்டு கல்மடு கைலாயக் குருக்கள் வீட்டை போங்கோ...'' என்றார்.

''அப்ப நீங்கள்...'' என இழுத்தான் அவன்.

''அதைப்பற்றிப் பிறகு பாப்பம்.. முதல் நீங்கள் போங்கோ..'' என்றார் பெரிய குருக்கள் அழுத்தமாக. அதற்கு மேல் அவன் எதுவுமே பேசவில்லை. அப்படிப் பேசி அவனுக்குப் பழக்கமில்லை.

அடுத்தநாள் அதிகாலையில் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தபோது சாரதா அவரிடம் போனாள்.

''மாமா உங்களை விட்டுவிட்டு நாங்கள் என்னெண்டு போறது..? நீங்களும் வாங்கோ..?''

அவர் மெல்லச் சிரித்தார்... பின்..'' பிள்ளை நான் என்னெண்டு வைரவரை விட்டிட்டு வாறது...? அவரை நான் பட்டினி போட முடியாது... அவர் என்னைக் காப்பாத்துவார்'' என்றார் உறுதியாக. சில வினாடிகள் கண்களை மூடி ஏதோ வாய்க்குள் முணுமுணுத்துவிட்டு மெல்லப் பேசினார். ''பிள்ளை... நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காமல் போட்டு வாங்கோ.. வைரவரும் நானும் பத்திரமாய் இருப்பம்... அப்படியில்லாமல் வைரவர் விடை தந்தால் நீங்கள் எங்கை இருந்தாலும் அங்கை வந்து சேருவேன்..'' அவள் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

அவர் தனது வழமையான கனிவுடனும் உறுதியுடனும் சொன்னார். ''கவலைப்படாமல் போட்டு வாங்கோ..''

அவர்கள் மாறிமாறி இடம்பெயர்ந்து உடையார் கட்டில் தங்கிருந்த போது கிளிநொச்சியில் இடம் பெயராமல் இருந்த சிலரை இராணுவம் ஒரு பஸ்ஸில் ஏற்றி வவுனியா கொண்டு சென்றதாக ஒரு கதை பரவியது.

அப்போது சாரதா அவனிடம் ஓடி வந்து ''மாமாவும் அந்த பஸ்ஸில போயிருப்பாரோ?'' எனக் கேட்டாள். அவன் ஒருவித விரக்தியுடன் சொன்னான்.. ''அவர் வைரவரை விட்டிட்டுப் போகமாட்டார்.''

அடிவானில் நிலவு மெல்ல மேலெழுந்த போது நேரம் ஒருமணி இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டவனாக உள்ளே போய்ப் படுத்துக்கொண்டான்.

அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து இரண்டு மூன்று நாள்களாக மிச்சம் பிடித்து பிளாஸ்ரிக் ரியூப்பில் சேகரித்து வைத்த நீரில் குளித்துவிட்டு அவன் புறப்படத் தயாரானான். அவள் ஏதோ ஒரு நிறுவனம் கொண்டு வந்து கொடுத்த பால்மாவில் தேநீர் ஊற்றிக் கொடுத்தாள்.

**நா.யோகேந்திரநாதன்,**
**நீர்வேலி**

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து 100 யார் தூரத்தில் யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியின் மூன்றாவது ஒழுங்கையில் 2 ஆவது காணி நான்கு பக்கங்களும் மதிலுடனும் கிணற்றுடனும் கூடிய ஒரு பரப்பும் 4 குழியுமான விஸ்தீரணம் கொண்ட காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776629961

## நீங்கள் ஆங்கிலம் கற்க விரும்புகிறீர்களா?

Kingbross Institute இனால் குறுகிய காலத்தில் இலகுவாக ஆங்கிலம் கற்றுக்கொள்ள இதோ ஓர்! சிறந்த வாய்ப்பு.

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்றுக் கொள்ள இலகுவான வழி.

ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்பட்டு சான்றிதழும் வழங்கப்படும்.

[ஆங்கிலம் கற்போருக்கு பேச்சுமொழி சிங்களம் இலவசமாகக் கற்பிக்கப்படும்]

மேலதிக விபரங்களுக்கு:- 0777251241, 0212229373

# ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

பருத்தித்துறை, மார்ச் 6

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பரதநாட்டியம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வட இந்து கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் உயிரியல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது. செயலட்டைகள் தயாரிப்பதற்கான காகிதாதிகள், ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி என்பவற்றை எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (த-190)

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கும் ஐஸ் கிறீம் தொழிற்சாலை மலிவான விலையில் விற்பனைக்குண்டு .(கொம்பிறேசர், பாத், கிறீம் ரீற்றர், டீபிறிசர்கள் விற்பனை வான்) தொடர்புகளுக்கு: T.P: 0787841561 தரகர்களும் பங்கு கொள்ளலாம். (963) (38-19)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான ரிநிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 10.03.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

- ★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085
- ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி 0774656377
- ★ முகுந்தன், பருத்தித்துறை 0771392593
- ★ துர்க்காபாம், சுன்னாகம் 0779346599

(1017) (38-19)

நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர், தொ.பே இல:- 021 222 6944.

## கண்ணீர் அஞ்சலி



04.03.2011 அன்று இறைபதமடைந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவும் வேதாகம சாஸ்திரங்களின் விற்பன்னருமான

மகாராஜஸ்ரீ து.ஷண்முகநாதக் குருக்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய மாவை முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

மல்லாகம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தீர்த்தத் திருவிழா உபயகாரர்.

(சி/5750401) (38-19-27)

## உடன் தேவை

விரைவில் திறக்க இருக்கும் அசைவ உணவகத்துக்குத் தரமான சமையல் நிபுணர், உணவக சுத்திகரிப்பாளர் உடன் தேவை.

தொடர்பு: 0774018370

(1003) (38-19)

## Advertisement for Restaurant Manager

Immediate vacancy for a restaurant manager. Fluency in all three Languages preferred.

T.P: 0774018370

(1002) (27-19)

## எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி



- சகல விதமான சளி, இருமலுக்கும் சிறந்த நிவாரணி
- தொடர்ச்சியாகப் பாவித்து வரும்போது ஆஸ்மா நோய்க்குச் சிறந்த நிவாரணி
- 100 வீதம் மூலிகை கொண்டது
- ஆயுர்வேத சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எவரெஸ்ட் மருந்தகம்

AY/MF/JA/295, உசன், மிருசுவில். (191) (38-27-19)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)

## வீடு வாடகைக்கு

இராஜ வீதி, கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள முருகன் கோயிலுக்கு எதிரே உள்ள ஒழுங்கையில் நான்கு அறைகள் உள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 0718676483.

(1014) (38-19)

## யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2011

காலம்:- 20.03.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி
இடம்:- பாடசாலை பிரதான மண்டபம்

பெற்றோர், ஆசிரியர் யாவரும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.

திரு.க.கனகரத்தினம்
கௌரவ செயலாளர்.

(சி/576576) (49-19-27)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1kg 430/=) கல்பேட் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
T.P: 0212226944.

(1016) (38-19)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு: 1957.01.21
இறப்பு: 2008.03.06

அமரர் கிருஸ்ணன் சிவனேசன்

(வடமாகாண தெ.ப.பொ. கூ.ச.சமாசம் - பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

அன்புடன் எம்மை அணைத்திடும் அப்பா
அறிவுரை பல கூறி வழிநடத்திடும் அப்பா
பண்புடன் இவ் உலகில் வாழ-எமக்காக
பணிவுடன் இறை அருள் வேண்டிடுவார்.

யாக்கரு, கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. தொ.பே: 021 226 4145

மனைவி,
பிள்ளைகள்.

(48,22,24)

## Spoken English & Grammar

(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்). உள்நாட்டில், வெளிநாட்டில் உயர்கல்வி பெற, தொழில்வாய்ப்புப் பெற உகந்த கல்வி.

By: Mr.B.Ruban (A/L Eng. Teacher& BBA) More Details: 0779785749/ call or SMS JTI 46 Clock Tower Road, Jaffna.

(1021) (38-19)

## விறகு விற்பனை

வேம்பு, முதிரை, தேக்கு மர வகைகள், பிறவெட்டுக்கள் மொத்தமாக விற்பனைக்குண்டு. மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: மலிரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி.
T.P: 0217912783

(1020) (38-19)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் பிரம்மஸ்ரீ ச.பிரணதார்த்திகர சர்மா அவர்களின் அன்புத்தாய்

சர்வேஸ்வரக்குருக்கள் மனோன்மணி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.

(1021) (49-19-27)

## விற்பனையாகிறது


தரம்1 முதல் O/L வரை யாழில் விற்பனையாகின்றன. கொழும்பு ஸ்ரீரஞ்சனி புத்தகசாலையினரின் பரீட்சை நோக்கு, அறிவொளி, விஞ்ஞானஒளி. தொடர்பு: இ.நிர்மலன் 0714980324.

## ஒத்து மாறல்

கொழும்பு மத்தி பாடசாலைகளைச் சேர்ந்த இரு ஆசிரியர்கள் யாழ்.நகர பாடசாலைகளுக்கு ஒத்துமாற விரும்புகிறார்கள். நியமனம் 1. தமிழ் மொழி 2.பயிற்றப்பட்ட விஞ்ஞானம். T.P: 0779235382

## அரிய சந்தர்ப்பம்

இலங்கையின் முதல்தர கை உழவு இயந்திரமான
SUPER FANG
குறைந்த விலையில் மார்ச் 31ஆம் திகதி வரை



விலை 175,000/-

தொடர்பு
வவுனியா / மல்லாவி : 0778070891
கிளிநொச்சி : 0773211340, கொழும்பு : 0777703997

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14 . 03 . 1946



இறப்பு 15 . 02 . 2010

அமரர் நாகமணி உலகநாதன்

திதி: துதியை (06.03.2011)

பாசம் என்னும் பறவைக் கூட்டிலே
நேசமுடன் வாழ்ந்தவரே
மோசமான காலன் தன் கணக்கில்- உங்கள்
வேசத்தைக் கலைத்து எமைத் தவிக்க விட்டானே!
மீண்டுமொரு பிறப்பிருந்தால்
மீண்டும் வாருங்கள் எங்களுடன்
காத்திருப்போம் உங்களுக்காக.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(1042) (27-19-38)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பம் 1984, மிருகசீரிடம்,MBBS Final Year, Sydney, Australia citizen பெண்ணுக்கு மணமகன் தேவை. Doctor, Engineer, Accountant விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 226 3819, 011 3030095.

## கடை வாடகைக்குண்டு

K.K.S Road, H.S.B.C, DFCC வங்கி அருகில் 13 அடி அகலம், 35 அடி நீளம் உடைய விஸ்தீரணம் கொண்ட கடை வாடகைக்குண்டு.

தொடர்புக்கு: 0770262486, 0776110859.

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில் சந்தியில் MPCS Union இற்கு அருகில் 5பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்: 021 225 5051

(877) (38-19)

## வாடகைக்குண்டு

இல.115, 04ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் 5அறைகள் 2வரவேற்பறைகள், வாகனத்தரிப்பிட வசதிகொண்ட வீடும், பற்றிக்ஸ்நியில்8அறைகள், வாகனத்தரிப்பிட வசதிகொண்ட [illegible] குண்டு. தொடர்பு: 021 5100184 (மு.ப. 8.30 மணிமுதல் மாலை 6 மணிவரை தொடர்பு கொள்ளவும்).

(சி/576643) (38-19)

## 6 ஆம் மாத நினைவலைகள்



பிறப்பு: 1954.06.28
இறப்பு: 2010.09.06

நடராஜா கனகலிங்கம்

ஆறு மாதங்கள்
ஓடி மறைந்திட்டாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
மறைந்திடுமோ?
கருணை நிறைந்த உங்கள்
முகம் காண நித்தம் நித்தம்
ஏங்கித் தவிக்கின்றோம்

அராலி வீதி, ஓட்டுமடம்.
0778175926

குடும்பத்தினர்.

(48,19,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதிர்

## தமிழுக்கு ஆங்கிலம் (6)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

**'ஏ' வரிசையில்**
ஏணி: Ladder
ஏப்பம்: Belching
ஏந்து: Hold up
ஏக்கம்: Anxiety
எண்ணு: Count
ஏசு: Scold
ஏவு: Set up
ஏளனம்: Ridicule
ஏமாறு: Get dissappointed
ஏமாற்றம்: Dissappointment
ஏரி: Lagoon
ஏற்றுமதி: Export
ஏற்கனவே: Already
ஏறக்குறைய: More or Less
ஏலம்: Auction, Cardamoni
ஏய்ப்பு: Deceit
ஏங்கு: Lomg for
ஏராளம்: Abundance
ஏழை: poor
ஏறு: Climb, ox

**'ஐ' வரிசையில்**
ஐயம்: Doubt
ஐயன்: Priest, God
ஐயா : Sir
ஐவர்: Five Persons
ஐயோ: Alas

**'ஒ' வரிசையில்**
ஒடி: Break
ஒடுக்கம்: Narroness
ஒடுக்கு: Opress
ஒட்டகம்: Camel
ஒட்டு: Paste, join
ஒதுங்கு: Get aside
ஒத்தாசை: Help
ஒப்பந்தம்: Agreement
ஒப்பம்: Signature
ஒப்புவி: Recite, Hand over
ஒருவன்: Oneperson
ஒலி: Sound
ஒளி: Light, Hide
ஒழி: Destroy
ஒழுக்கம்: Good conduct
ஒழுங்கு: order
ஒழுங்கை: Lane
ஒற்றன்: Spy
ஒன்றுமில்லை: Nothing
ஒல்லி: Lean
ஒத்திவை : Postpone
ஒருங்கிணை: Coordinate
ஒப்பனை: Make up
ஒன்றுக்கொன்று: one to one
ஒப்பிடு: Compare

**'ஓ' வரிசை**
ஓது: Recite, study
ஓடு: Run, shell
ஓசை: Sound
ஓட்டி: Driver
ஓணான்: Chamilion
ஓரம்: Edge
ஓங்காளி: Vomit
ஓடம்: Boat
ஓடை: Broak
ஓட்டை: Hole
ஓவியம்: Picture
ஓலை: Palm leaf

**'ஔ' வரிசையில்**
ஔடதம்:Medicine
ஔவியம்: Envious
ஔவை: Ancient poetess

தொகுப்பு:ரம்யன்

## வாழ்க்கை

*மனித வாழ்க்கையில்*
*துன்பம் என்பது*
*சூழ்ந்து உள்ளது*
*அதை கண்டு நாம் என்றும்*
*அஞ்சக் கூடாது*
*துன்பம் உள்ளது*
*அதைக் கண்டு இவ் உலகில்*
*எல்லா உயிரினமும்*
*இறக்கவேண்டுமா?*

**எஸ்.வனோச்**, தரம்-4'சி',
சென்.ஜோன் பொஸ்கோ.

## மணற்கரையில் நண்டுகள்

வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வதைப்போல்
துள்ளியே அலைகள் மேன்மேல்
கரையினிற் சுழன்று விழும்!
வெள்ளலை, கரையைத் தொட்டு
மீண்ட பின் சிறுகால் நண்டுப்
பிள்ளை ஓடி ஆடிப்
பெரியதோர் வியப்பைச் செய்யும்

**எஸ்.சானுகா,**
தரம்-7,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

## விடை தெரியுமா? 98

*1.சர்வதேச மகளிர் தினம் எப்போது அனுஷ்டிக்கப் படுகிறது?*
*2. தற்போது அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் ஒரு சக்தி வாய்ந்த விண்வெளி ஓடத்தை விண்ணில் அனுப்பிக் கிரகங்களை அது படம் பிடித்து அனுப்புகிறது. அந்த விண்வெளி ஓடத்துக்கு என்ன பெயர்?*
*3.கொக்குவில் இந்துக் கல்லூரி ஊடக கழகத்தினால் வெளியிடப்பட்ட நூலின் பெயர் என்ன?*
*4. 83 ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழா எந்த நாட்டில் நடைபெற்றது?*
*5. உலகின் மிகப் பெரிய புத்தகம் உள்ள நாடு எது?*

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 12.03.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடைகள் 96

1. ஆர். பிரேமதாசா விளையாட்டரங்கு
2. குமார் சங்கக்கார
3. காஹிம் மெகாமி
4. 10
5. பாகிஸ்தான்

### வெற்றி பெற்றவர் விவரம்

1.கு.திலக்ஷி,
யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
2.தெ.துசாந், தரம்- 7 'சி',
யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.
3.உ.சனாதனன், தரம்-4,
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
4.ப.ஹம்ஷா, தரம்- 9'சி',
யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி.
5.சி.நிரோஜன், தரம்-6 'பி',
நெல்லியடி ம.ம.வித்தியாலயம், கரவெட்டி.

## மாணவத் தாரகை



அ.காயத்திரன்,
தரம்-4,
யாழ். புனித ஜோன்
பொஸ்கோ வித்தியாலயம்.



ற.நிஷான், தரம்-6,
யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி.



வசந்தகுமார் நேசகுமார்

## பொது அறிவு

- கடற்தங்கம் என்று அழைக்கப்படுவது சுறாமீன்
- உலகின் முதல் கம்பியூட்டர் எனியாக்.
- மனிதனின் சிந்தனை வேகம் மணிக்கு 2701 cm ஆகும்.
- பின்புறமாக மரத்தில் ஏறும் விலங்கு கரடி.
- அம்மைத் தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு 1796.
- சர்வதேச மகளிர் கிரிக்கெட் கவுன்சில் உருவான ஆண்டு 1958.
- ஒட்டகச் சிவிங்கியின் நீண்ட கழுத்தில் 7எலும்புகள் உள்ளன.
- 'போலிங்கன்' விருது அமெரிக்கக் கவிதைகளுக்கு வழங்கப்படுகிறது.
- மீனவர்களின் சொர்க்கம் என அழைக்கப்படும் நாடு கனடா.
- இஞ்சி உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு இந்தியா.
- உலகில் பெண்களைவிட ஆண்கள் அதிகம் உள்ள நகரம் மும்பை
- புல்லாங்குழலின் பழைய தமிழ்ப்பெயர் வங்கியம்.
- சூரியனின் மகன் என்று அழைக்கப்படும் தாவரம் பருத்தி.
- தக்காளிக்கு முதன்முதலில் வைக்கப்பட்ட பெயர் காதல் அப்பிள்.
- தாய்லாந்து நாட்டைப் புன்னகை நாடு என்று அழைக்கின்றனர்.

பாசினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன ஊர்வலம்

பாடைகட்டிப் பறை கொட்டி
வெடி முழங்க
அதோ! ஓர் ஊர்வலம்
''கண்ணாடிப் பிட்டி'' நோக்கிப் போகிறது
என்னவாம்...? ஏதாம்...?
எதுதான் நடந்ததாம்...?

கௌரி காதலித்தாள் - கர்ப்பமுற்றாள்
கலியாணம் என்று வந்தபோது
காதலித்த காந்தனின் பெற்றோர்கள்
சாதி எதுவென்றார்
சம்பந்தம் செய்வதென்றால்
ஈது விலை என்றார் - இடக்கிட்டார்!
காளை குலைந்தான் - கைவிட்டான்
ஏழை அவளென்ன செய்வாள்?
இடித்த அலரிக்காய்
இனிக்கும் சர்க்கரை சேர்த்து
முண்டு விழுங்கினாள் - மூச்சு அடங்கினாள்

அதோ! ஆறடிப் பெட்டியில்
அவள் அமைதியாய்க் கிடக்க
கோடை இடியென வெடி முழங்க
ஊரவர் ''கிசுகிசுக்கள்'' காதைப் பிளக்க
அவள் மட்டும் அஸ்தமன திசைநோக்கி
அமைதியாய் செல்கின்றாள்
மௌன ஊர்வலம் தொடர்கிறது
அந்த மௌனம்-அவளுக்கு மட்டுந்தான்!

காதலிக்கவும்- கட்டிப் புரளவும்
கட்டி முடியாத குறைவீட்டில்
ஒட்டி உருகி உறவாடவும்
கிட்ட வராத சாதியும் சீதனமும்
கலியாணம் என்றபோது முளைத்தது ஏன்?
காளையர்க்கு விளையாட்டு
கன்னியர்க்குத் தலைமுழுக்கு!
காதல் இனியதா?-இல்லைக் கொடியதா?
எங்கே பதில் கூறும்?
நம்பிக்கெட்ட இந்தக் கௌரிபோல்
இன்னமும்-எத்தனை நூறு கௌரிகள்
படலை திறந்து சுடலை நோக்கிப்
பயணிக்கப் போகிறார்?
காதலே வாழ்க!-காதலனே நீயும் வாழ்க!
அப்பரம்மா காட்டும் புதிய உறவோடு
நீ மட்டும்- நூறாண்டு காலம் வாழ்க!



த.நாகேஸ்வரன்,
சாவகச்சேரி.

# உன் கையிலுண்டு உயர்வும் தாழ்வும்

துடிப்புடை சிற்பியவன் பிடித்த உளிகொண்டு
அடித்தான் இராப்பகலாய் எடுத்தான் உள்ளிருந்து
வடிவுடை தெய்வ உருவத்தை நன்றே
அடியார்கள் வழிபட ஆலயத்துள் வைத்தான்

அடிவாங்க முடியா அடுத்திருந்த கற்கள்
பிடித்தன இடம் படிக்கட்டுப் பாதையிலே
அடிவாங்காக் கற்களுக்கு அப்படி விதிப்பு
அடிதாங்கிய ஒன்றுக்கு அதியுயர் மதிப்பு

புன்னகை மங்கையர் பூண்டு மகிழ்ந்திடும்
பொன்னகைப் பெற்றிட வேண்டின் தங்கமது
நன்றடிபட்டுச் சுடுபட்டு சுடர்விட வேண்டும்
துன்பம் தாங்கிட இன்பம் பொங்கிடும்.

துன்பத்தின் அடிகளைப் பொறுமையுடன் பெற்று
உண்மை நேர்மை எண்ணமுடன் உழைத்து
வென்று உயர்ந்தோரை இவ்வுலகு உரைக்கும்
உன்கையில் உண்டு உயர்வும் தாழ்வும்

க.அருமைநாயகம்,
குளப்பிட்டி.

# எம் மனம் நாடிய யாழ்.குடாநாடு

நெடுவன் பனை
நீலக்கடல்
நிறைந்த மச்சம்
பரந்தவெளி
மந்தைக் கூட்டம்
சிந்தையாட்டம்

வயல் வெளி
தோட்டத்துரவு
அமைதியைத் தந்திடும்
ஆலயங்கள்
மண்பற்றுக் கொண்ட
பூவரசு வேர்கள்

மறைந்தவர் நினைவை
மீட்டிடும்
பட்டிப் பூக்கள்

தென்றலுடன் கதைபேசும்
எந்தன் நிலத்து
விருட்சங்கள்

பாடும் பறவை
தேடும் உறவு
நாடும் உவகை
எம் நிலம்
எம் மக்கள்

ஆ.முல்லை திவ்யன்

# வீரத்தாய்க்கு மலர்தூவி அஞ்சலிக்கின்றோம்...!

''தோன்றில் புகழொடு தோன்றுக''
என-வாழ்ந்து காட்டிய
வல்வை மண்ணின்
வல்லமைத் தாய்க்கு

நெஞ்சம் நெகிழ
விழிநீர் சொரிந்து
விசும்புகின்றோம்

வீரம் தளைத்தோங்க
தளிர் ஒன்றை இப்
புவிக்குத் தந்திட்ட
தாய்மண் போற்றும்
தன்னிகரில்லாத் தலைமையின்
தாய்க்கு......?
மலர்தூவி
அஞ்சலிக்கின்றோம்

வணங்கா மன்னன்!
பண்டார வன்னியன்
தோப்பில் இருந்து!
வன்னி வாழ் மக்கள் சார்பில்

வன்னியூரன்.

# எதிர்பார்ப்புகளுடன்...!

அன்பு மடல் எழுதி...
அனுப்பி விட முடியவில்லை
எங்கு...? அனுப்புவது என்று
புரியாமல்...!
என் மனத்தில் உள்ள ரணங்கள்
இங்கே!
எழுத்துக்களாய் சிதறிடவே...
செவிவழி குரல் கேட்க
முடியவில்லை
சில நிமிடங்கள் கூட...
ஆறுதல் கூற
அண்ணா என்ற உறவின்றி

எதிர்பார்ப்பும் ஏக்கங்களுமாய்
காலங்கள் கடந்து செல்ல
உங்கள் தங்கை மனம் உள்ள
துன்பம் யாரறிவார்?
எப்போ வருவீர்கள்?
காலங்கள் சென்றாலும்...
காத்திருப்பேன் என் அன்பு
அண்ணாக்களின்
வருகைக்காக...!



எஸ்.கிருசாந்தி,
G.O.C பாலர் பாடசாலை ஆசிரியை,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பென்காசியும் முள்ளிவாய்க்காலும்

ஞாயிறு காரம்

**சந்திரசேகர ஆசாத்**

கேணல் கடாபியை அதிபராகக் கொண்ட வட ஆபிரிக்க தேசமான லிபியா இன்று பெரும் போர்க்களமாக மாறிவிட்டது. நகரங்களின் மையங்களான சதுக்கங்களிலும், வீதிகளிலும் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் கொழுந்து விட்டு எரிகின்றன.

இராணுவத்தின் ஒரு பகுதியினர் சீருடைகளைக் களைந்து எறிந்து விட்டு மக்களுடன் இணைந்து விட்டனர் என்று கூறப்படுகின்றது. அதேவேளை படையிலுள்ள கடாபியின் ஆதரவு சக்திகளும் கடாபி ஆதரவு ஆயுதக் குழுக்களும் இணைந்து, போராட்டத்தில் ஈடுபடுபவர்களுடன் மோசமான சண்டையில் ஈடுபட்டிருப்பதாகவும் இதுவரை பல ஆயிரக்கணக்கான உயிர்கள் பலி கொள்ளப்பட்டு விட்டதாகவும் மேற்குலக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

லிபியாவின் இரண்டாவது பெரிய நகரமான பென்நாசி கிளர்ச்சிக்காரர்கள் கையில் விழுந்ததை அடுத்து அவர்கள் தலைநகர் திரிபோலியை நோக்கி முன்னேறினர்.

மேலும் லிபிய விமானப் படையினர் பென்காசி நகர் மீது விமானக்குண்டு வீச்சுக்களை நடத்தி உள்ளனர். அதன் காரணமாக ஏராளமானோர் பலியாகினர் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு லிபியாவில் கேணல் கடாபிக்கு எதிராக உள்நாட்டில் பெரும் கலவரங்கள் வெடித்துள்ள நிலையில் சர்வதேச சமூகமும்கூட கொதிப்படைந்து துரித மான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

### கொதித்து எழுந்த சர்வதேசம்

அமெரிக்கா, கேணல் கடாபி உடனடியாகப் பதவி விலகவேண்டும் என எச்சரித்துள்ளதுடன் லிபியா மீது ஆயுத விற்பனைத்தடையையும் அறிவித்துள்ளது. அது மட்டுமன்றி கடாபியினதும் அவரின் ஆதர வாளர்களினதும் சொத்துக்களையும் முடக்கியுள்ளது. இதேபோன்ற நடவடிக்கைகளை பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளும் மேற்கொண்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றியமும் இவ்வாறான தடைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையும் உடனடியாகக் கூடி லிபியா மீது தடைகளை அறிவித்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து லிபியா அதிரடியாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கைகளைக் கூடி ஆராய்ந்தும் வருகின்றன. இவை மட்டுமன்றி 23 நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட நேட்டோ படையமைப்பு லிபியாவின் வான் பரப்பில் விமானப் பறப்புக்கு தடைவிதித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை கேணல் கடாபியைப் போர்க்குற்ற விசாரணைகளுக்கு உட்படுத்த முடிவெடுத்துள்ளது. கடைசியாகக் கிடைத்த செய்திகளின் படி அமெரிக்கா லிபியா மீது தாக்குதல் நடத்தத் தயாராகின்றது.

இன்னொருபுறம் முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு கடாபியைக் கடுமையாக விமர்சித்துள்ளதுடன் அந்நாட்டைக் கூட்டமைப்பிலிருந்து இடை நிறுத்தப் போவதாகவும் அறிவித்துள்ளது.

இவ்வாறு உள்நாட்டிலும் மேற்குலகிலும் முஸ்லிம் நாடுகளிடமும் பெரும் எதிர்ப்பைச் சம்பாதிக்குமளவுக்கு கேணல் கடாபியின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள்தான் என்ன?

42 வருடங்களாக சர்வதிகார ஆட்சியை நடத்துகின்றார் என்பதும் ஊடக சுதந்திரம், மனித உரிமைகள் என்பவற்றை ஒடுக்குகின்றார் என்பதும் லிபியா 90 வீதமான முஸ்லிம்களைக் கொண்டிருந்தபோதும் அவர்களின் மத உரிமைகளை மறுக்கின்றார் என்பதும் அதிகார துஷ்பிரயோகம் மூலம் தனது எதிர்ப்பாளர்களை வன்முறைக் கரங்கள் கொண்டு ஒடுக்குகின்றார் என்பதும் கிளர்ச்சியாளர்களால் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள்.

போராடும் மக்கள் மீது ஆயுதத் தாக்குதல்கள், கூலிப்படைகளின் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள் மேற்கொள்வதன் மூலம் பல்லாயிரம் உயிர்களைக் கொன்றுகுவிக்கின்றார் என்று இப்போது ஐ.நா. சபையும், நேட்டோவும் முஸ்லிம் கூட்டமைப்பும் கடாபி மீது குற்றம் சுமத்துகின்றன.

### நீதி எல்லோருக்கும் சமமா?

இப்படியான சூழ்நிலையில் எம்மிடம் ஒரு கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகும். மனிதாபிமானத்துக்காகவும், ஜனநாயக சுதந்திரத்துக்காகவும், நியாயமான தமது உரிமைக்காகப் போராடும் மக்கள் பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்யப்படுவதை எதிர்த்தும் கடும் நடவடிக்கைகளை எடுக்கும் ஐ.நா, நேட்டோ, மேற்கு நாடுகள் என்பன முள்ளி வாய்க்காலில் ஒரு பெரும் இனக்கொலை நடந்தபோது ஏன் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை?

லிபியாவை விடப் பன்மடங்கு கொலை வெறியாட்டம் முள்ளிவாய்க்காலில் நடத்தப்பட்டது என்பதை மறுக்க முடியுமா?

பாதுகாப்பு வலயம் என்ற பேரில் ஏறக்குறைய மூன்றே முக்கால் லட்சம் மக்கள் மூன்று கிலோ மீற்றர் நீளமும் ஒரு கிலோ மீற்றர் அகலமும் கொண்ட ஒரு சிறுபகுதிக்குள் முடக்கப்பட்டனர்.

விமானக்குண்டு வீச்சுகள், பீரங்கித் தாக்குதல்கள், எறிகணை வீச்சுக்கள், தடைசெய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகள், கொத்துக் குண்டுகள் என்பவற்றின் மூலமான தாக்குதல்கள் என்பவற்றால் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்டன.

உணவு, மருந்து என்பன மட்டுப்படுத்தப்பட்டதன் மூலம் பசியிலும் நோயிலும் மக்கள் படாதபாடுபட்டனர். போரின் இறுதியில் சில நாள்களிலே மட்டும் நாற்பதினாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்கின்றன மனித உரிமைக் குழுக்கள்.

அப்படியான ஒரு கொடிய நிலையிலும் இலங்கை அரசின் மீது ஏன் தடை விதிக்கப்படவில்லை? ஏன் ஆயுத விநியோகம் தடுத்து நிறுத்தப்படவில்லை? ஏன் விமானப்படைக்குப் பறப்புத் தடைப் பிரதேசம் வகுக்கப்படவில்லை. அதிலும் போரில் சிக்கியுள்ள மக்களை மீட்டு சர்வதேசம் ஒரு போர்நிறுத்தம் கோரியபோதும் அதற்கு இணங்க மறுத்த இலங்கை அரசு மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? மாறாக மறைமுகமாக இலங்கை அரசுக்கு ஆயுத உதவிகளும், தொழில்நுட்ப ஆலோசனைகளும் உளவுத் தகவல்களும் ஏன் வழங்கப்பட்டன?

இவை விடைகாணப்பட முடியாத கேள்விகள் அல்ல. வரலாறு முழுவதுமே இவற்றுக்கானபதில்கள்உண்டு.

### கடாபியின் வரலாறு

1969ஆம் ஆண்டில் இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் கேணல் கடாபி தனது 27ஆவது வயதில் லிபியாவின் ஆட்சியைக் கைப்பற்றினார். எண்ணெய் உட்பட லிபியாவின் வளங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த மேற்கு நாடுகளுக்கு அவரின் வரவு கசப்பாகவே இருந்தது.

இவர் ஆட்சிக்கு வந்த ஏழு வருடத்துக்குள் லிபியாவில் இருந்த அமெரிக்க, பிரிட்டிஷ் படைத் தளங்களை நாட்டை விட்டு வெளியேற்றினார். 1970ஆம் ஆண்டில் கிறீன்புக் என்ற புதிய திட்டத்தை முன்வைத்ததன் மூலம் முதலாளித்துவ நடைமுறைகளையும் முஸ்லிம் அடிப்படைவாதப் போக்குகளையும் நிராகரிக்கும் ஒரு நடைமுறையை முன்வைத்தார். ஏற்கனவே இவர் 1973 ஆம் ஆண்டில் ஆசிய எண்ணெய் நிறுவனங்களைத் தேசிய மயமாக்கினார். இப்படியான நிலையில் அமெரிக்காவின் கோபக்கணை லிபியாவுக்கு எதிராகக் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. எனவே லிபியாவுக்கு எதிரான வியூகங்களை வகுக்க ஆரம்பித்தது.

1986 ஆம் ஆண்டில் ஜேர்மனியில் இடம்பெற்ற ஒரு குண்டு வெடிப்பில் அமெரிக்க வீரர் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து லிபியா மீது குற்றம் சுமத்தப்பட்டு லிபியத் தலைநகர் திரிப்போலி மீது அமெரிக்கா விமானக்குண்டு வீச்சை நடத்தியது. அன்று முதல் அமெரிக்க-லிபிய இராஜதந்திர உறவுகளும் துண்டிக்கப்பட்டன.

### லொக்கர் பீ குண்டு வெடிப்பு

1988 ஆம் ஆண்டில் ஸ்கொட்லாந்தில் இடம்பெற்ற விமானக்குண்டு வெடிப்பில் 243 பேர் கொல்லப்பட்டனர். இது தொடர்பாக லிபிய முகவர் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டார்.

பல இராஜதந்திர அழுத்தங்களூடாக இவரை லிபியா விசாரணைக்கு ஒப்படைத்தது. அத்துடன் மீண்டும் அமெரிக்க - லிபிய ராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகின. ஆனால் அவர்கள் விடுதலையாகி 2006ஆம் ஆண்டில் நாடு திரும்பியபோது அவர் ஒரு தேசிய வீரராகக் கௌரவிக்கப்பட்டார்.

மேலும் கடாபி அணிசேரா நாடுகள் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கிய காலத்தில் அந்த அமைப்பு ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டல்களிலிருந்து விடுபடும் வகையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவர் அந்தக் காலத்தில் மூன்றாம் உலக நாடுகளின் ஒரு வீர புருஷராகக் கருதப்பட்டார். ஆபிரிக்க நாடுகளின் ஒன்றியத்தை அமைப்பதிலும் இவரின் பங்கு முக்கியமானது.

இவரின் இத்தகைய தேசிய நலன்கள் சார்ந்த நடவடிக்கைகள் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு இவர்மேல் பெரும் வெறுப்பை ஏற்படுத்தின. கடாபி பிற்போக்கான மதக் கோட்பாடுகளை நிராகரித்து, லிபியாவை நவீனமயப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் முஸ்லிம் அடிப்படைவாதிகளையும் இவரின் எதிரிகளாக்கின.

எனவே கியூபா, ஈரான், வடகொரியா என ஆட்சிகள் கவிழ்க்கப்படவேண்டிய நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா நீண்ட காலமாகவே லிபியாவையும் இணைத்துக் கொண்டது. எனினும் கேணல் கடாபி அந்தச் சதி வலைக்குள் சிக்குப்படாமல் லாவகமாகவே தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டார்.

### ஆட்டம் கண்ட ஆட்சி

ஆனால் வட ஆபிரிக்க நாடுகளில் நீண்ட காலமாகவே சர்வாதிகார ஆட்சிகளை நடத்தி வந்தவர்களுக்கு எதிராக ஏற்பட்ட மக்கள் எழுச்சியை அமெரிக்கா நன்றாகவே பயன்படுத்த முடிவு செய்தது. இதற்கு ஏற்கனவே லிபியாவில் மறைமுகமாக இயங்கி வந்த முஸ்லிம் அடிப்படைவாத இயக்கமான இஹ் வானுல் முஸ்லிம் என்ற இயக்கத்தை களமிறக்கி விட்டது.

இவர்களுக்கு லிபிய ஆதரவாளர்களையும் படையினரையும் எதிர்த்துப் போராட வெளிநாடுகளிலிருந்தே ஆயுதங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

அதாவது லிபியாவில் கேணல் கடாபியின் ஆட்சியைக் கவிழ்த்து அந்த நாட்டின் வளங்களைத் தான் கொள்ளையிடத்தக்க வகையில் ஒரு பொம்மை ஆட்சியை ஏற்படுத்துவது என்ற நீண்ட கால அமெரிக்க நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற இன்று லிபியர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

எகிப்து, டுனிஷியா போன்ற நாடுகளில் மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டபோது மேற்குலகம் அதை வெகு லாவகமாகக் கையாண்டு அதிபர்களை பதவி இறக்கி அடிப்படை ஆட்சி மாற்றங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொண்டன. யேமன், பஹ்ரைன், அல்ஜீரியா போன்ற நாடுகளிலும் இதையே எதிர்பார்க்கலாம். ஏனெனில் அந்த நாடுகள் ஏற்கனவே அமெரிக்காவின் பொருளாதார அரசியல் நலன்களுக்குச் சார்பாக உள்ளன.

ஆனால் கடாபியின் ஆட்சியில் லிபியா எப்போதுமே தன்னை ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான நாடாகவே இனம்காட்டி வந்துள்ளது. எனவே லிபியாவின் முழு ஆட்சிக் கட்டமைப்பையும் மாற்றுவதே அமெரிக்காவினதும் அதன் நேசநாடுகளினதும் அடிப்படை நோக்கமாகும்.

### லிபியா எதிர் முள்ளி வாய்க்கால்

முள்ளிவாய்க்காலில் லிபியாவை விடப் பலமடங்கு படுகொலைகளும் மனித உரிமை மீறல்களும் போர்க்குற்றங்களும் இடம்பெற்றபோதும் இந்த நாள்களில் மேற்குலகம் இலங்கை மீதான ஒரு மென்நிலைப் போக்கைக் கடைப்பிடித்திருந்தமைக்கும் லிபியா மீது உடனடியாக்வே கடும் போக்கைக் கடைப்பிடிப்பதற்கும் காரணம் இதுதான்.

ஒரு நாட்டில் தனக்குச் சார்பான ஓர் ஆட்சி இருக்குமானால் அங்கு எழும் மக்கள் போராட்டங்களைத் திசை திருப்புவது. முடியாவிட்டால் அழிப்பது அல்லது நாட்டினை ஆள்பவர்கள் தனக்கு அடங்க மறுத்தால் போராட்ட இயக்கங்களுக்கு ஆதரவு வழங்கி ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி கொடுத்து தங்கள் காலில் விழவைப்பது. முடியாவிட்டால் ஆட்சிகளையே கவிழ்ப்பது, பின் போராட்ட இயக்கங்களையே அழிப்பது. இதுவே ஏகாதிபத்திய நாடுகளின் நிகழச்சித் திட்டமாகும். அதேவேளை எதற்கும் கட்டுப்படாத போராட்ட அமைப்பை பல்வேறு வழிமுறைகள் மூலம் தனிமைப்படுத்தி அழிப்பதும் அவர்களின் பாணிதான்.

இந்த வகையில் விடுதலைப் புலிகளின் வளர்ச்சி அவர்கள் இலட்சியத்தை அடையுமளவுக்கு கைமீறிப்போய் விடாமல் பார்த்துக்கொள்ளப் பல ஏகாதிபத்திய நாடுகள் அதைப் பயங்கரவாதப் பட்டியலில் இணைத்தன. பின் சமாதான முயற்சிகள் மூலம் அதை நீர்த்துப் போகச் செய்ய முயன்றன. அதுவும் முடியாத போது அதை அழிக்க இலங்கை அரசுக்கு சகல உதவிகளையும் வழங்கின. ஆனால் இன்று இலங்கை சீனா பக்கம் சாயும் போது போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை வைத்து மிரட்டி வருகின்றன. எனினும் அதில் கூட நடவடிக்கைகள் இழுபறி நிலைமையிலேயே உள்ளன.

### எதிர் எதிர் நோக்கங்கள்

இவ்வாறே ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்யாவை வெளியேற்றவும் நஜிபுல்லா ஆட்சியைக் கவிழ்க்கவும் தலிபான், அல்கெய்தா ஆகிய அமைப்புக்களுக்கு சகல உதவிகளும் வழங்கப்பட்டன. அவை அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் நிற்க மறுத்தபோது அவைக்கு எதிராக நேரடியாகவே போர் தொடுக்கப்பட்டது. இன்றும் ஆப்கானிஸ்தானில் இரத்த ஆறு ஓடுகின்றது.

வலிமையான ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகிய கேணல் கடாபிக்கு எதிராக முஸ்லிம் சகோதர அமைப்பு என்ற முஸ்லிம் அடிப்படைவாத் அமைப்பு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதுதான் இன்றுள்ள நிலைமை

அமெரிக்க நிகழச்சி நிரலில் ஏனைய வட ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்ட மக்களின் எழுச்சிக்கும் லிபியாவில் இடம்பெறும் போராட்டங்களுக்கும் நேர்மாறான நோக்கம் உண்டு என்பதுதான் நாம் புரிய வேண்டிய உண்மை.இது அடக்குமுறைக்கு உள்ளான அத்தனை மக்களும் அவர்களின் விடுதலை வேண்டி நிற்கும் அமைப்புக்களும் புரிந்து கொள்ளவேண்டிய உண்மையுமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பகவானின் 62ஆவது ஜென்மதினம்

யாழ்ப்பாணம்,மார்ச் 6

சம்பூர்ண அவதார புருஷராகிய ஸ்ரீ பகவானின் 62ஆவது ஜென்ம தினத்தை முன்னிட்டு ஆரோக்கிய தீட்சையும், முக்தி தீட்சையும் இந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள உமாஜியால் வழங்கப் படவுள்ளன. இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ''அரோக்கிய தீட்சை'' யாழ். இளங்கலைஞர் மன்றத்திலும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ''முக்தி தீட்சை'' யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை முன்பாக உள்ள தனியார் கல்வி நிறுவனத்திலும் வழங்கப்படவுள்ளன. (ம-313)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி சக ஆசிரியை
திருமதி.ஸ்ரீரதி ஜோன்சன்
அவர்களின்
அன்புக் கணவர்
**திரு.வேதநாயகம் ஜோன்சன்**
அவர்களின்
பிரிவால் துயருறும் அவர்தம்
குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**அசிரியர் கழகம்,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(49-23-27)

## செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 12,13 வகுப்புக்களில் இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு எதிர் வரும் 11,12ஆகிய திகதிகளில் வரணி ஆசிரிய மூலவள மத்திய நிலையத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)


# Dialog & Abans



## விற்பனை பிரதிநிதிகள்

(ஆண் மற்றும் பெண்)

நீங்கள் இளம், துடிப்புள்ள இளைஞரா? கடினமாக உழைக்கக் கூடியவரா?
சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் முகாமைத்துவத்தில் நாட்டம் கொண்டவரா?
இதோ உங்களுக்கான தொழில் வாய்ப்புகள் உங்களது பிராந்தியத்தில்

**கடமைகள்**

- வாடிக்கையாளர்களுக்கு மன நிறைவான சேவையை வழங்குதல்,
- வாடிக்கையாளர்களுக்கு தேவையான விவரங்களை வழங்குதல்,
- வாடிக்கையாளரின்விவரங்களை நேர்த்தியாக பேணுதல்,
- எல்லா விதமான பொருள்களையும் வாடிக்கையாளர்களுக்கு பரிந்துரைத்தல்.
- களத்திலும் சிறப்பாக பணியாற்றக்கூடிய திறமை மேலதிக தகைமையாகும்

**பொருத்தமானவர்கள்**

- 18-30 வயதிற்குறப்பட்டவர்கள்
- க.பொ.த (சா.த) அல்லது க.பொ.த (உ.த) தகைமை
- சிறந்த பேச்சுத்திறன்
- பாடசாலை விடுகை பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
- குறித்த துறையில் அனுபவம் மேலதிக தகைமையாகக்கொள்ளப்படும்.

நீங்கள் மேற்குறித்த தகைமை கொண்டவராயின் கீழ்காணும் இடங்களிலுள்ள பணி வெற்றிடங்களுக்கு நீங்கள் தகுதியுடையவர்கள், எனவே

**மன்னார், தலைமன்னார், மாங்குளம், முருங்கன், செட்டிக்குளம் பிரதேசங்களில் உள்ளவர்கள்**

**வரையறுக்கப்பட்ட அபான்ஸ் காட்சியறை - 106, கிறேண்ட் பசார், மன்னார்**

என்ற முகவரிக்கும்

**யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி, பளை, பரந்தன், முல்லைத்தீவு, பருத்தித்துறை, கொடிகாமம், அச்சுவேலி, திருநெல்வேலி, காங்கேசன்துறை, பலாலி, வேலணை மற்றும் தீவுப்பகுதிகளில் உள்ளவர்கள்**

**160 A கே.கே.எஸ் வீதி சுன்னாகம், யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கும் எதிர்வரும் மார்ச் 10ஆம் - 11ஆம் திகதிகளில் காலை 9.30 முதல் பி.ப 2.30 மணிவரை நடைபெறவுள்ள நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிக்கவும். இயலாத பட்சத்தில் உங்களது சுயவிவரக்கோவையை கீழ்காணும் முகவரிக்கு தபாலிடவும்.

*Assistant Human Resources Manager*
**Abans Office Automation (Pvt) Limited**
No:422, Galle Road, Colombo 3.
Telephone - 0112565251-60
Fax: 011 2565963 Email: hrd@abans.lk

Abans
Office Automation (Pvt) Ltd.
*Genuine Products. Genuine Service.*

# STUDY IN LONDON

## Top Modern University in London

- BEng Civil Engineering
- BSc Construction Management
- BEng Electrical & Electronic Engineering
- BSc Software Engineering
- BSc Computer Networks
- BSc Computing
- BSc Multimedia
- BA Journalism
- BSc Pharmacology
- BSc Biochemistry
- BSc/MSc Physiotherapy
- BSc Sports Coaching
- BSc Sport and Exercise Science
- BA Business Management
- BA Accounting & Finance
- BA Finance, Money & Banking
- BA Travel & Tourism Management
- BA Events Management
- BA Sociology / BA Social Work Studies
- BA / MSc Nursing & Healthcare
- BA Community Studies
- BA English Literature
- BA Special Education Needs
- BA / MA Early Childhood Studies
- MA TESOL (Teaching English for Speakers of Other Languages)
- MA English Language Teaching
- MA International Social Work
- MA Culinary Arts
- Interior Design
- LLM General
- LLB
- MSc Civil Engineering
- MSc Information Security
- MSc Information Technology
- MSc Network and Mobile Computing
- MSc Computer Systems Engineering
- BSc/MSc Biomedical Sciences
- MSc Biotechnology
- BSc/MSc Toxicology
- BSc/MSc Public Health
- BSc/MSc Psychology
- BSc/MSc Health Promotion
- BSc Health Services Management
- BSc Surveying and Mapping Sciences
- MSc Molecular & Biomedical Immunology
- MSc Bioinformatics
- MSc Molecular Medical Microbiology
- MBA Masters in Business Administration
- MSc International Marketing
- MSc Project Management
- MSc Financial Management
- MSc Software Engineering
- BA/MA International Human Resource Mgt.
- BA Music Industry Management
- PG/MA Hospitality Management
- BSc/MSc Architecture/Art & Design/Fashion Design
- BA Theatre Studies

September 2011 Intake

**MAY INTAKE**
- BA Hons Business Administration
- MSc Business and Management
- MSc Computer Networking
- MSc Finance and Business Management

**LOHOS TOPS 400 STUDENTS**

*Over the last 6 years Mr Loho has successfully counselled, guided and placed more than 400 students to U.K. Universities*

- *Advanced entry for students with CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA and other recognised qualifications*
- *G.C.E. A/L students can apply pending results*
- *Students having good O/L's / other qualifications / related work Experience may be considered for entry*
- *Students who are unable to complete their university studies may also apply*

Meet Mr. LOHO ✓ LOHOS GROUP

HELPLINE CALL LOHO 0777 917929

**Please call Sri Lanka Representative's office for more details**
Lucky Plaza Building, 4 / 7, 4th Floor,
St. Anthony's Mawatha, Kollupitiya. Tel : 2577768 / 0777 917929
E-mail : lohosgroup@sltnet.lk / lohosgroup@yahoo.com
www.lohosgroup.com

தமிழில் தொடர்புகளுக்கு : Dr. இந்திராணி - Tel : 0773-498660

**FREE ADVICE + FREE VISA GUIDANCE**
**All our services are FREE**

# கட்டட நிர்மாணத்துறை பணியாள்களுக்கான வெற்றிடங்கள்

யாழ். குடாநாட்டிலும் வவுனியா மற்றும் கிளிநொச்சி நகர்களிலும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய கட்டட நிர்மாண ஸ்தலங்களுக்குக் கீழ் குறிக்கப்படும் பணியாள்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.
தங்குமிட வசதிகள் உண்டு.
தகுதியுடையோர் கீழ்வரும் முகவரிக்கு தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.

01. களஞ்சியப் பொறுப்பாளர் (STORE KEEPER) - 04
02. காவலாளிகள் (SECURITY GUARDS) - 04
03. கனரக வாகன ஓட்டுநர் (HEAVY VEHICLE DRIVER ) - 02
04. இலகுரக வாகன ஓட்டுநர் (LIGHT VEHICLE DRIVER) - 01
05. உழவு இயந்திர ஓட்டுநர் (TRACTOR DRIVER) - 01
06. ஓட்டுநர் (WELDERS) - 02

**தொடர்புகளுக்கு:**
**கிளை முகாமையாளர்,**
**வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனி**
**பிரைவேட் லிமிட்டெட்,**
**23, நல்லூர் குறுக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(1052) (39-27)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 10

# குழந்தைகளுக்கு ஆறு மாதத்துக்குப் பின்பு உணவு கொடுப்பது எவ்வாறு?

உங்கள் வீட்டில் 6 மாதத்தினை அடையும் குழந்தை உள்ளதா? அவ்வாறாயின் நீங்கள் இக்கட்டுரையை கவனத்துடன் வாசியுங்கள்.உங்கள் குழந்தைக்கான தாய்ப்பாலூட்டலுடன் கூடிய உணவூட்டலுக்குத் தயாராவதற்கு இது துணைபுரியும்.

ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து 6 மாதம் வரை தாய்ப்பால் மட்டுமே போதுமானது. அதுவரை கற்கண்டு நீர், கொதித்தாறிய நீர், கொத்தமல்லி, பனங்கட்டி, குளுக்கோசு நீர் என்பன கொடுக்கத்தேவையில்லை. தாய்ப்பாலிலுள்ள ஊட்டச்சத்தும் நீரும் குழந்தையின் வளர்ச்சிக்கும் அதன் பசியை ஆற்றவும் போதுமானது.

ஆறுமாத முடிவில்,மேலதிக ஊட்டச்சத்துக்களைப் பெறவும் குழந்தையின் வளர்ச்சிக்கும் பசியைப் போக்கவும் குழந்தை முழுமையான குடும்ப உணவுக்குப் பழக்கப்படவும் புதிய ஆகாரங்களைப் பழக்குவது கட்டாயமாகின்றது. அவ்வாறு உணவொன்றைக் கொடுத்த பின்பு ஒவ்வொரு முறையும் தாய்ப்பால் கொடுப்பது அவசியமாகும்.

முதலில் சோற்றைக் கரையச் சமைத்து (அல்லது மிக்சியில் அடித்து) அதனுடன் தாய்ப்பாலைச்சேர்த்து, நீராக்கிய பின்பு, நீராகாரமாக இரண்டு, மூன்று தேக்கரண்டியளவு ஒரு தடவை கொடுக்கவும். இரண்டாம் நாளில் வேண்டியளவுக்கு ஒரு தடவையும், மூன்றாம் நாளில் நாளொன்றுக்கு இரண்டு தடவையும் கொடுக்கவும். புதிய உணவு வகைகளை மிகச் சிறியளவில் ஆரம்பிப்பதே சிறந்தது.சமிபாடு அடைகிறதா? எனக் கவனித்த பின்பே உணவின் அளவைக் கூட்டலாம். உணவூட்டலின் பின் ஓங்காளம், வயிற்றுப்பொருமல், விடாது முறுகி அழுதல், வாந்தி, மலத்தின் தன்மை வேறுபட்டுள்ளதா? என்பனவற்றை அவதானிக்கவேண்டும்.

நான்காம் நாளிலிருந்து சோற்றுடன் பருப்பையும் சேர்த்து அவித்து, அரைத்து முன்பு கூறியது போல் தாய்ப்பால் சேர்த்துக் களித்தன்மையாக்கி 3-4 தேக்கரண்டியளவில் ஒன்று அல்லது 2 தடவைகள் கொடுக்கவும்.இவ்வாறு மூன்று நாள்களுக்குத் தொடர்ந்து கொடுக்கவும்.

8 ஆம் நாளிலிருந்து மீன்,கோழி ஈரல் என்பனவற்றைப் பசைபோல் அரைத்துச் சேர்த்துக் கொள்ளலாம். இதற்கு மாஜரீன், சமையல் எண்ணெய் அரைத் தேக்கரண்டியளவில் சேர்க்கலாம்.

இதைவிட நன்றாகப் பழுத்த பப்பாசி அல்லது வாழைப்பழம் ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி கொடுக்க வேண்டும்.

பதினோராம் நாளிலிருந்து சோற்றுடன் பூசணி,கரட்,மீன்,கோழி இறைச்சி என்பனவற்றைச் சேர்த்து அரைத் தேக்கரண்டியளவில் மாஜரீன் அல்லது எண்ணெய் சேர்த்துக் கொடுக்கவும். நாளொன்றுக்கு இரு தடவை கொடுக்கலாம். பழத்தையும் மேற்குறிப்பிட்டளவில் கொடுக்கவும்.

பதினாறாம் நாளிலிருந்து முட்டை மஞ்சள்கரு அரை தேக்கரண்டி, இலை வகை(கீரை,வல்லாரை, பொன்னாங்காணி,கங்குல்) என்பவற்றை மேற்கூறிய உணவுடன் சேர்க்கமுடியும்.

பழங்களில் மேற்கூறியவற்றுக்குப் பதிலாக மாம்பழம் அல்லது தேசிப் பழச்சாற்றின் சில துளிகள் என்பவற்றைப் பயன்படுத்தலாம். மாதுளம்பழம் கொடுப்பதானால் அதன் சாற்றை மட்டுமே கொடுக்கவேண்டும். 7 மாதம் முடிவு வரை இவ்வாறாக உணவூட்டவேண்டும். 7மாதம் முடிவடைந்த பின்பு சோறு, மரக்கறி, பருப்பு, மீன் அல்லது இறைச்சி அல்லது முட்டை மஞ்சள்கரு என்பனவற்றை அரைத்து எண்ணெய் அல்லது மாஜரீன் சேர்த்துக் கொடுக்க வேண்டும். இவற்றை அரை கப் அல்லது குழந்தைக்குத் தேவைப்படின் மேலதிகமாகவும் கொடுக்கலாம். பழங்களை மசித்து முக்கால்வாசி தேக்கரண்டியளவிலும் யோகட் அல்லது தயிர் 2 அல்லது 3 தேக்கரண்டியளவிலும் கொடுக்க முடியும்.

ஒருவாரம் கழிந்த பின்பு முளை விட்ட தானியம்,நெத்தலி மீன் என்பவற்றைச் சோறு மற்றும் பதார்த்தங்களுடன் சேர்த்துக் கொள்ளமுடியும்.

இவற்றைத் தேங்காய்ப்பால் அல்லது சமையல் எண்ணெய் விட்டுச் சமைக்கலாம். இவ்வுணவைச் சிறுதுணிக்கைகள் உள்ளதாக மசித்துக் கொடுக்கவேண்டும்.இவ்வாறு நாளொன்றுக்கு 2அல்லது 3 தடவைகள் கொடுக்கலாம். சிற்றுண்டியாக உருளைக்கிழங்கு, இராசவள்ளி,முட்டை மஞ்சள்கரு இவற்றுடன் பாதி மீன் என்பனவற்றுள் ஏதாவது ஒன்றை அவித்து மசித்துக் கொடுக்கவும்.சிற்றுண்டியாக இரு வாரங்களின் பின் இலைக்கஞ்சி அரைக்கோப்பை கொடுக்கலாம்.இதனுள் அரிசிமா, பயிற்றம்மா என்பன சேர்க்கலாம்.

எட்டாம் மாதமுடிவை அடையும் வேளை உங்கள் குழந்தை மேற்கூறப்பட்ட உணவை அரை கப் அல்லது கூட நாளொன்றுக்கு 2 அல்லது 3 தடவைகள் உண்ணுகின்றாரா? என்பதை உறுதி செய்யுங்கள்.மசித்த பழம் கால் கப் கொடுக்கலாம். யோகட் 6 தேக்கரண்டி வரை உண்ணலாம். பட்டர் சேர்த்த பிஸ்கட் 2 உண்ணமுடியும். வெட்டுப் பாணில் அரை துண்டு, அப்பத்தின் நடுப்பகுதி என்பன உண்ணலாம். குழந்தையின் கையில் கொடுத்து உண்ணப்பழக்கவும்.

ஒன்பதாம் மாத ஆரம்பத்திலிருந்து முட்டை வெள்ளைக்கருவை உணவுடன் சேர்க்கலாம்.கௌபி,சோளம் என்பவற்றை நன்றாக அவித்தபின்பு உண்ணக் கொடுக்கலாம். சொட்டுக்களற்ற தேங்காய்ப் பூவினை இதனுடன் சேர்க்கலாம். வீட்டிலேயே தயார் செய்யப்பட்ட பிட்டு,இடியப்பம்;தோசை, அப்பம், இட்டலி,ரொட்டி,பாற் கஞ்சி, பாற் சோறு என்பவற்றைக் கொடுக்கலாம்.

திருமதி சரோஜினிதேவி, பாலசுந்தரம்
தாதிய சகோதரி, நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

ம்முழச்சோறு,துண்டாக வெட்டிச் சமைத்த மரக்கறி என்பவற்றைக் கரண்டியால் மசித்த பின்பு கொடுத்துப் பழக்கவும். 3 வேளைகள் இதனைப் பிரதான உணவாகக் கொடுக்கவேண்டும். மரக்கறியின் பெயர், நிறம் என்பவற்றைக் கூறி குழந்தைகளுக்கு உணவின் மேல் ஆசையை ஊட்டவேண்டும். அவித்த உருளைக்கிழங்கு,கரட் என்பவற்றைக் குழந்தையின் கையில் கொடுத்து உண்ணப்பழக்கவும்.உப்பு, இனிப்பு,காரம் என்பவற்றைச் சிறிது சிறிதாகச் சேர்க்கவும்.பன்னிரண்டாம் மாதத்திலிருந்து பெற்றோருடனும் உறவினருடனும் வீட்டிலும் விழாக்களிலும் குடும்ப உணவைச் சரிசமனாக இருந்து உண்ணக்கூடியதாகப் பழக்கவும்.

உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது.மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக் களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

# வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்!

கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது அண்மைக்காலமாக வீதி விபத்துக்களால் உயிரிழப்புக்களும் உடல் அங்கங்களின் இழப்புக்களும் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றன.

இந்த விபத்துகளுக்குப் பல்வேறுபட்ட காரணங்கள் உள்ளபோதிலும் பொதுவீதிகளைப் பயன்படுத்துபவர்கள் விழிப்பாக நடந்து கொள்ளாமையே விபத்துகள் அதிகரிப்புக்குப் பிரதான காரணமாக அமைகின்றது.

பொது வீதிகளில் வாகனங்களைச் செலுத்துபவர்கள் கவனிக்கவேண்டிய அம்சங்களாவன:

**✱வாகனங்களை அதிகரித்த வேகத்தில் செலுத்துவதைத் தவிர்த்தல்**

சனநெரிசல் மிக்க இடங்களில் அதிகரித்த வேகத்தில் செலுத்தும்போது சடுதியாக நிறுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் சாரதியின் கட்டுப்பாட்டையும் மீறி விபத்து ஏற்படுகின்றது.

**✱மதுபோதையில் வாகனங்கள் செலுத்துவதைத் தவிர்த்தல்**

வீதியில் ஒழுங்குமுறையாகப் பயணிப்பவர்கள் கூட மதுபோதையில் வாகனங்கள் செலுத்துபவர்களால் விபத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

**✱வீதி ஒழுங்கு முறைகளுக்கமைய வாகனங்களைச் செலுத்துதல்**

ஒழுங்கு விதிகளை உதாசீனம் செய்யும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. உதாரணமாக வாகன ஒலி எழுப்பத் தடை விதிக்கப்பட்ட இடங்களில் (வைத்தியசாலைகள், நீதிமன்றம்) கூட ஒலி எழுப்புதல், வாகனங்களைத் திருப்புவதற்குரிய சமிக்கைகளைக் காட்டாது திடீரெனத் திருப்புதல்,இரவில் வீதியில் வாகனங்களை நிறுத்தும்போது நிறுத்தல் வெளிச்சத்தைப் (pork light) பாவிக்காமை போன்றன.

**✱ நல்ல நிலையில் வாகனங்களை வீதியால் செலுத்துதல்**

வாகனங்களைத் தெருக்களில் செலுத்துவதற்கு முன்னர் அவை நல்ல நிலையில் செயற்படுகின்றனவா? என்பதை உறுதிசெய்துகொள்ளல்.

**✱சாரதிகளின் நடத்தை**

வீதியால் வாகனங்களைச் செலுத்தும்போது மிகவும் உன்னிப்பாகவும் கவனமாகவும் இருத்தல் வேண்டும். சாரதிகளின் கவனக்குறைவு வாகனத்தில் பயணிப்பவர்களையும் வீதியால் பயணிப்பவர்களையும் விபத்துக்குள்ளாக்குகின்றது. பயணிகளை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் தடம்புரழும்போது அதிகமானோர் ஒரே நேரத்தில் விபத்துக்குள்ளாகின்றனர். மற்றும் சாரதிகளுக்குப் பார்வை ,கேட்டல் குறைபாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் தகுந்த மருத்துவ ஆலோசனை பெறவேண்டும். அத்துடன் தலைக்கவசம்,ஆசனப்பட்டி என்பவற்றைப் பயன்படுத்துவதன்மூலம் சாரதிகளுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

**பாதசாரிகள் மற்றும் துவிச் சக்கரவண்டிப் பாவனையாளர்கள் கவனிக்கவேண்டிய அம்சங்கள்:**

✱பாதசாரிகள் நடந்து செல்லும் போது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சமாந்தரமாக நடந்து செல்வதைத் தவிர்த்தல்

✱வீதிகளைக் குறுக்கிடும்போது அதற்கென ஒதுக்கப்பட்ட பகுதியினைப் பாவித்தல்

✱மதுபோதையில் வீதியில் நடப்பதைத் தவிர்த்தல்

✱வீதிகளில் பலபேர் கூடிநின்று கதைப்பதைத் தவிர்த்தல்

✱துவிச்சக்கரவண்டிகளில் சமாந்தரமாகப் பயணிக்கும் நிலைமை பரவலாகக் காணப்படுகின்றது. இயன்றவரை இந்த நிலைமையைத் தவிர்க்கவேண்டும்.


டாக்டர் ஆர்.பரமேஸ்வரன்
மருத்துவ அலுவலர், நீரிழிவு நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

இவற்றைத் தவிர வீதிக்கு அருகில் உள்ள வீட்டில் குடியிருப்பவர்களின் சிறுவர்கள் வீதிக்குத் திடீரென வருகின்ற சந்தர்ப்பங்கள் அதிகம். எனவே இதில் அதிக கவனம் எடுக்கவேண்டும். அத்துடன் சிறுவர்கள் வீதிகளில்கூடி விளையாடுவதைத் தவிர்த்தல் அல்லது கண்காணித்தல் வேண்டும்.

பொது வீதிகளைப் பாவிக்கும் அனைவரினது ஒத்துழைப்புமூலமே தேவையற்ற உயிரிழப்புகளையும் விபத்துக்களையும் தடுக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 153



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1.எஜமான் மீது வேலையாள் வைப்பது
5.நெல்லின் வெளிப்பகுதி
7.வட்டத்தட்டு
8.வீதிக்குக் குறுக்கே நீர் பாய்வது இதன் ஊடாக
9.பூமரம் வளர்ப்பது இதில்
10.அழகு
12.நாதியற்ற பெண்.
13.பிடிவாதம்
14.உதவும் நோக்கோடு செய்யப்படுவது
16.உள்ளே இருப்பது
17.தொடக்க
18.நான்கு பக்கங்களைக் கொண்ட வடிவம்
19.வலு
20.தங்களுடையது

### மேலிருந்து கீழ்

1.உழவன்
2.காட்டி
3.கடலோரத்தில் மீனவர் அமைக்கும் தொழிலகம்
4.சரசம்
5.காலைப்பாட்டு
6.கூடும்.
8.கல் தோன்றப் பின் தோன்றியது.
11.இலக்கைப் பிடிக்க விரிப்பது இதனை.
12.இந்தக் கொடியும் திரண்டால் மிடுக்கு
13.வெளியேற்ற
14.தானியங்களை இடிக்கப் பயன்படும் கருவி
15.விளக்கம்
16.ஆரம்பம் இல்லாதது
17.எனவே

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 151 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)வளையாபதி (5) சதா (7)கடைக்குட்டி (9)மதம் (11)குட்டை. (12)திரி (13)உதடு (15) சமையல். (16)சக (17) கன .(18)நயம் (19)சம்பந்தம் (22) சிதம்பரம்

### மேலிருந்து கீழ்

(1)வருமதி (2)யாகம். (3)படை. (4)திக்குதல். (5)சட்டை. (6)தாடி (8)குட்டு.(10) தரிசனம் (13) உயர்ந்த (14)பூகம்பம். (16)சய (17)கசம். (18)நம்ப. (20)பசி. (21)தம்.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 151 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **ப.வனிதா,** புதிய பூமி, இடைக்காடு, அச்சுவேலி.

**2 ஆம் பரிசு** — **குணசேகரன் சக்தினா,** வேரவில், பூநகரி.

**3 ஆம் பரிசு** — **சி.பக்சன்,** நாகர்கோவில் மேற்கு, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு** — **து.நிர்மலம்,** இல.2, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு** — **ச.குணேஸ்வரி,** திருப்பரங்குன்றம், நவாலி வடக்கு, மானிப்பாய்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **ஸர்மலா யோசப்,**
இல 814/2 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(2) **உ.சாம்பவி,**
இல. 40, கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(3) **செல்வி அபிசா சத்தியசீலன்,**
துர்க்கை அம்மன்கோவில் கல்வயல், சாவகச்சேரி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 153**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 16.03.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.153 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 20.03.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

# குளத்தடி.....

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

பால், தயிர், நெய் என வாழ்ந்த அவர்கள் இப்போ வழங்கலில் கிடைக்கும் பால்மாவை அளந்து பாவிக்க வேண்டியிருந்தது.

அவன் பஸ் ஏறி வவுனியா வந்து பின் கிளிநொச்சியை அடைய நேரம் பத்துமணியாகி விட்டது. அவன் காக்கா கடைச் சந்திக்கு வந்து இரணைமடுவுக்குப் போகும் வீதியில் நடக்க ஆரம்பித்தான். இடிந்த கூரையற்ற கட்டடங்கள் அவனுக்குப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. ஓரளவுக்கு அதை அவன் எதிர்பார்த்தான்.

அவன் கிளிநொச்சிக் குளக்கட்டில் வந்து ஏறிய போது வீசிய கொடிய துர்நாற்றத்தை அவனால் சகிக்க முடியவில்லை. ஒரு காலத்தில் பல்லாயிரம் மக்கள் நீராடும் தடாகமாகவும் தாமரை மலர்கள் பூத்துச்சிரிக்கும் நீர் நிலையாகவும் விளங்கிய அது சம்புப்பற்றைகளாலும் கொட்டப்பட்ட குப்பை கூழங்களாலும் நாறிப்போய்க் கிடந்தது. ஆனால் என்ன செய்ய முடியும்? அந்தப் பாதையால் தானே போக வேண்டும்.

அதிகாலையில் எழுந்து மருதமரவேர் தழுவும் குளத்தின் வால் கட்டுப்பகுதியில் குளித்து விட்டுக் கனகபுரம் கோயிலுக்குப் பூசை செய்யக் குளக்கட்டால் சைக்கிளில் போகும் போது மெல்லிய குளிர்காற்று மேனி தடவித்தரும் சுகானுபவத்தை ஒருமுறை நினைத்துக் கொண்டான். அடி வயிற்றிலிருந்து எழுந்து வந்த பெருமூச்சை அவனால் அடக்க முடியவில்லை. வைரவர் கோயிலை நெருங்க நெருங்க ஏனோ நெஞ்சு படபடவென அடிக்கத் தொடங்கியது. வீதிகள் பற்றைகள் மூடிப் பாதியாக ஒடுங்கி விட்ட நிலையில் கோயில் முற்றம் மட்டும் செடி,கொடி கூட இன்றிச் சுத்தமாகவே இருந்தது. இலைச் சருகுகள் கூடக் காணப்படாத போதிலும் முற்றம் கூட்டப்பட்டதான அடையாளங்களைக் காணமுடியவில்லை.

குளத்தில் போய் அவன் காலைக் கழுவிவிட்டு வந்து மண்டபத்தில் ஏறி உள்ளே இருந்த வைரவர் பீடத்தை எட்டிப் பார்த்த போது அவன் அதிர்ந்தே போனான்.

அங்கே அர்ச்சிக்கப்பட்டிருந்த வாடாத மலர்களும் வைரவருக்குச் சாத்தப்பட்டிருந்த வண்ணப் பட்டும் அவனுக்கு ஒரு புதிய நம்பிக்கையையும் எல்லையற்ற மகிழ்வையும் கொடுத்தது. அவன் குனிந்து பீடத்தைத் தொட்டுக் கும்பிட்டு விட்டுப் புதிய உற்சாகத்துடன் வெளியே வந்தான். வெளியே வந்து பார்த்தபோது அலரி மரத்தில் ஒரு மஞ்சள் நிற 'ஓம் முருகா' சால்வையும், மங்கிய வெள்ளை நிற நாலுமுழ வேட்டியும் தொங்கிக் கொண்டிருந்தன. உடைகளைக் காற்று நிலத்தில் விழுத்திவிடாமல் இருப்பதற்காகத் தனது தகப்பன் அவற்றைக் கொப்புக்களில் முடிந்து விடுவது நினைவுக்கு வந்தது. அவை தனது தந்தையாருடையது என்பது அவனுக்கு உறுதியானது.

அவன் மரத்தினருகே செல்ல நினைத்துக் காலை எடுத்த போதுதான் அலரியின் அருகில் மண்டையோட்டுப் படத்துடன் கூடிய அறிவித்தல் அவன் கண்ணில் பட்டது.

''கண்ணிவெடி கவனம்''

கால்கூச உடல் சில்லிட காலைப்பின்னால் எடுத்துக் கொண்டான். வாடாத மலர்களும் மரத்தில் தொங்கிய ஆடைகளும் அவர் இன்னும் அங்குதான் இருக்கிறார் என அவனைத் திடமாக நம்பவைத்தன. ஏதோ ஒரு சக்தி அவனை உந்தவே பலமாகக் கத்தினான்.

''ஐயா...''

அவன் குரல் குளத்து நீரிலும் எதிரொலித்தது.!

அவன் மீண்டும் மீண்டும் கத்தினான்.

இரு படையினர் துப்பாக்கிகளுடன் ஓடி வந்தனர். கோயிலடியில் நின்று கத்திய விஸ்வநாதனுக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டியபடி வேகமாக அருகில் சென்றனர்.

ஒருவன் உறுமும் ஒலியில் கேட்டான்.. ''ஏய்.. என்ன.. என்ன.. சத்தம்..''

விஸ்வநாதன் பயத்துடன்... ''ஐயா.. எங்கடை அப்பாவைத் தேடுறன்.'' மற்றவன் இவனைப் பைத்தியம் என்று நினைத்திருக்க வேண்டும். அவன் மெல்லிய சிரிப்புடன் சொன்னான். ''இங்கை அப்பா இல்லை... யார் சரி இல்லை.. சரியா...'' என்றான்.

விஸ்வநாதன் தயக்கத்துடன்... ''வேட்டி சால்வை எல்லாம் கிடக்கு..'' என்று விட்டு அலரி மரத்தைச் சுட்டிக் காட்டினான்..

அவன் அவற்றைப் பார்த்துவிட்டு. ''ஏய்... அது மிச்சம் நாள் போலே இருக்கி... சரியா...'' என்றான்.

மற்றவன்.. ''சரி..சரி.. இங்க நிக்க வேணாம்.. போ..போ..'' என விரட்டினான்.

விஸ்வநாதன் தயங்கியவாறு அவ்விடத்தை விட்டு அகன்ற போதும் தனது தகப்பன் உயிருடன் இருக்கிறார் என்ற நம்பிக்கை மட்டும் தளரவில்லை. எனவே கிளிநொச்சியில் நின்று யாராவது தெரிந்தவர்களிடம் தனது தந்தையைப் பற்றி விசாரிக்க வேண்டும் எனவும் இரவு கந்தசாமி கோயில் ஐயர் வீட்டில் தங்கிவிட்டு அதிகாலையில் வைரவர் கோயிலடியில் போய்ப் பார்ப்பது எனவும் முடிவு செய்து கொண்டான் அவன்.

அடுத்த நாள் அதிகாலையில் அவன் வைரவர் கோயிலடிக்குச் சென்ற போது முதல் நாள் சந்தித்த படையினரில் ஒருவன் கண்டுவிட்டான்.

''ஏய்.. எங்கை போறது?'

''கோயிலடிக்கு..''

அவனுக்கு கோபம் வந்துவிட்டது. அவன்.. ''ஏய்.. அங்க போக ஏலாது. நேத்திக்குச் சொன்னது தானே... கண்ணிவெடியில சாவ ஆசையா... போ... போ... நிக்க வேணாம்.. போ..'' எனக் கத்தினான்.

விஸ்வநாதன் தயங்கி நின்றபோது ''ஏய் நான் போ.. சொன்னது தானே.. நீ இனி வந்தா... சுடுறது.. சரியா... போ..போ..'' என்று விரட்டினான். விஸ்வநாதன் கிளிநொச்சியை நோக்கி சோர்வுடன் நடக்க ஆரம்பித் தான்.

அவன் வவுனியா பஸ் நிலையத்தில் வந்து இறங்கியபோது பக்கத்துக் கூடாரத்தில் இருக்கும் அன்னலட்சுமி அவனைக் கண்டுவிட்டாள். அவள் ஓடி வந்து சாரதாவுக்கு ஆண் குழந்தை பிறந்து விட்டதாகவும், இப்போ வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தாள்.

மருத்துவமனை மகப்பேற்று விடுதியை அவன் அடைந்தபோது சாரதா அவனை முகம் நிறையப் புன்னகையுடன் வரவேற்றாள். அவள் மகிழ்ச்சியுடன் ''ஆம்பிளைப்பிள்ளை'' என்றாள்.

விஸ்வநாதன் குனிந்து தன் மகனைப் பார்த்தான். வேதார்ணியக்குருக்கள் போலவே சிவந்த நிறமும், நீண்ட கைகால்கள் அவனுக்கு இருப்பதாகவே விஸ்வநாதனுக்குத் தோன்றியது. கடைசியாக அவரை விட்டுப் பிரிந்தபோது அவர் சொன்னது அவரின் நினைவுக்கு வந்தது.

''வைரவர் விடைகொடுத்தால்.... நீங்கள் எங்கை இருந்தாலும் நான் அங்கை வந்து சேருவன்''

சாரதா சொன்னாள் ''நேர்சம்மா என்ன பெயர் வைக்கப்போறியள் எண்டு கேட்டுட்டுப் போறா...''

அவன் உறுதியாகக் கூறினான்

''வேதார்ணியம்'' ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதல்வன் தாய்க்கே

மனித வாழ்வியலில் பரத்தமையொழுக்கம் பற்றிய பல செய்திகள் பேசப்படுகின்றன. அவ்வொழுக்கம் களையப்பட வேண்டியதொன்று. இதில் மாறுபட்ட கருத்துக் கிடையாது. பண்டைய தமிழர் வாழ்வியலில் பரத்தமை ஒழுக்க நிலையைப் பல சங்கப்பாடல்கள் எடுத்துக்காட்டியுள்ளன. சங்க அகப்பாடல்களின் தொகுப்பு நூல்களில் ஒன்றான ஐங்குறுநூற்றில் முதல் நூறு பாடல்களாகப் பரத்தமை பற்றிய பாடல்களே தொகுக்கப்பட்டுள்ளன. ஏனைய அகப்பாடல் தொகுப்புக்களில் அகநானூற்றில் ஆறு என வரும் எண்ணிக்கை கொண்ட பாடல்கள் பரத்தமையொழுக்கம் பற்றிய பாடல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. பின்வந்த இலக்கியங்களில் சிலப்பதிகாரம் பரத்தமையால் ஏற்பட்ட பெரும் சிக்கல்களை விரிவாகக் காட்டியுள்ளது. அறநெறி நூல்களும் பரத்தமையொழுக்கத்தைக் கண்டித்துப் பேசியுள்ளன.

பரத்தமையொழுக்கம் சங்கப்பாடல்கள் தோன்றிய போது, அது சமூக அங்கீகாரம் பெற்றிருந்துள்ளது. அதனால் அவ்வொழுக்கம் பற்றிய பாடல்களும் தோன்றியுள்ளன. அன்பாக ஆணும் பெண்ணும் இணைந்த இல்லற வாழ்வில் பரத்தமையால் ஏற்பட்ட சிக்கல் பற்றிய செய்திகளைப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. பரத்தமை பற்றிய விளக்கம் பல பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாகப் பரத்தமை யென்பது திருமணமான ஓர் ஆண் பிறபெண்களை நாடிச்சென்று காமம் அனுபவிப்பதையே குறித்தது. அதனால் குடும்ப வாழ்க்கையின் அமைதிநிலை குலையக் கூடாது என்ற எண்ணம் வலுப்பெற்றிருந்தது. இதேவேளை தன்னிடம் இன்பம் அனுபவிக்க வரும் ஆண்மகன் தன் மனைவியோடு மகிழ்வாய் இல்லறம் நடத்துவது பரத்தைக்குச் சினம் தரும் செயலாக இருந்துள்ளது. பின்வரும் குறுந்தொகைப் பாடல் அந்நிலையையே விளக்கிக் காட்டுகிறது.

*''கழனி மா அத்து விளைந்துகு தீம் பழம்*
*பழன வாளை கதூஉ மூரன்*
*எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்*
*கையும் காலும் தூக்கத் தூக்கும்*
*ஆடிப்பாவை போல*
*மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே''.*

*[குறுந்தொகை:8]*

இப்பாடல் பரத்தைக் கூற்றாக அமைந்துள்ளது. தன்னோடு தொடர்பு கொண்டுள்ள குடும்பத் தலைவனின் குண இயல்பைப் பற்றிப் பரத்தைக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. அவளுடைய சினங் கொண்ட தோற்றத்தைப் புலவர் காட்சிப்படுத்தியுள்ளார். முதலில் அவனுடைய ஊர் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நீர்வளம் மிக்க மருதநிலத்திலே அவன் குடியிருக்கிறான். மருதநிலத்து விளை பொருளாக மாம்பழம் விளங்குகிறது. நீர்வயல்கள் நிறைந்த பிரதேசம். அப்பிரதேசத்தின் செழுமை காரணமாக



மாம்பழங்கள் பழுத்துத் தாமாகவே கீழே விழுகின்றன. அவை மிகுந்த இனிமையானவை. அவற்றை முதிர்ந்த நெல் விளைந்த ஈரலிப்பான வயல்களின் சேற்றிலே வாழுகின்ற வாளை மீன்கள் உண்ணுகின்றன.

இலக்கியக் காட்சி - 78

அடுத்துக் குடும்பத் தலைவனுடைய குண இயல்பு கூறப்பட்டுள்ளது. அது பரத்தையின் சினம் பொருந்திய கூற்றாகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ''என்னுடைய வீட்டிலே என்னைப் பற்றிச் சிறப்பான மொழிகளைக் கூறுவான். தன்னுடைய வீட்டிலே கையும் காலும் தூக்கும் கண்ணாடியால் செய்யப்பட்ட விளையாட்டுப் பாவை போல தன்குழந்தையின் தாயின் சொல்லைக் கேட்டே அவன் தொழிற்படுவான்'' என்ற பரத்தையின் கூற்று அவளுடைய குணத்தையும் காட்டுகிறது.

குடும்பத்தலைவனுடைய இரட்டை வேடத்தைப் பிறரும் அறியவேண்டுமெனப் பரத்தை எண்ணுகிறாள். 'புதல்வன் தாய்க்கே' என்ற தொடர்மூலம் தனக்கும் அவனுடைய மனைவிக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகிறாள். ஒரு குழந்தைக்குத் தாய் என்ற நிலையில் அவன் மனைவிக்கு எல்லாவற்றையும் செய்வது அவளுக்கு மிகுந்த சினத்தை ஊட்டுகிறது. அக்காலத்தில் பரத்தையர் குழந்தைப்பேற்றை விரும்புவதில்லை. குழந்தை பெற்றால் அவர்களுடைய இளமையும் அழகும் போய்விடும். பின்னர் அவர்களிடம் காம இன்பம் பெறுவதற்காக ஆண்கள் யாரும் வரமாட்டார்கள். இந்தநிலை அவளுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்துள்ளது. மனைவி வீட்டிலிருக்கும் போது காம இன்பத்துக்காகப் பரத்தையிடம் செல்லும் ஆண்மகன் குழந்தையின்பம் பெறுவதற்காகப் பரத்தையை விட்டுவிட்டு வீட்டுக்குச் சென்றுவிடுகிறான். மனைவிக்குப் 'புதல்வன் தாய்' என்ற சிறப்புண்டு. குடும்பத்துக்கு வாரிசான ஆண் குழந்தையைக் கருவிலே தாங்கிப் பெற்று எடுத்தவள் அவளே. இல்லறத்தின் பெரும் பேறான மக்கட்பேற்றை அவள் மூலம் அடைந்தமையால் அவன் மனைவி சொல்வதையே கேட்டு நடக்கிறான் என்பதே பரத்தையின் குற்றச்சாட்டாகும். 'ஆடிப்பாவை' என்ற சொல் கண்ணாடியால் செய்யபட்ட சிறிய விளையாட்டுப் பொம்மையைக் குறிப்பது இங்கே குடும்பத் தலைவனுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

தம்மில், எம்மில் என்ற இரு சொற்களும் பரத்தையின் வீட்டையும் குடும்பத் தலைவன் வீட்டையும் பிரித்துக் காட்டுகின்றன. இருப்பிட நிலையில் பரத்தையின் வீடும் வளம் பெற்றதாக இருந்துள்ளது. ஆடல், பாடல் போன்ற செயற்பாடுகள் செய்வதற்கு ஏற்ற இல்லமாக இருந்தமை புலப்படுகிறது. உரையாசிரியர் இப்பாடலைக் காதற் பரத்தைக் கூற்றாக உரை செய்துள்ளார். பரத்தையரில் சேரிப்பரத்தை, காமப்பரத்தை, இற்பரத்தையென வேறுபட்ட பரத்தையர்கள் இருந்துள்ளனர். இவர்கள் வாழ்விடங்களைக் கொண்டே பெரும்பாலும் வேறுபடுத் தப்பட்டுள்ளனர். காமப்பரத்தை என்ற பெயர் குடும்பமாக வாழும் ஆண்களுடைய அதீத காமத்தைத் தீர்க்க நாடும் பரத்தையைக் குறித்து நின்றது. சேரிப்பரத்தை ஊருக்கு வெளியே சேரிப்புறத்தில் வாழும் பரத்தையாவாள். இற்பரத்தை தனக்கெனத் தனியான இல்லமொன்றைக் கொண்டிருப்பவள் ஆவாள்.

பரத்தையரிடம் காமம் மட்டுமே இருந்தது. காதல் பரத்தையிடம் இருந்தது என்று கூறுவது பொருத்தமாகாது. சங்கப்பாடல்களில் ஆண் விரும்பித் திருமணம் செய்து கொண்ட காதலியை 'கிழத்தி' எனக் குறிப்பிடும் மரபு உண்டு. அந்த ஆண் மீண்டும் தன் காமத்துக்கு வேறு ஒரு பெண்ணை நாடிச் செல்லும் போது அவளை அவனுடைய காமத்துக்குரியவளாகக் ''காமக்கிழத்தி'' எனக் குறிப்பிடும் மரபு இருந்துள்ளது. எனவே அக்காலத்தில் ஆண்மகனுக்குக் காதற்கிழத்தியும், காமக்கிழத்தியும் இருந்தமை புலப்படுகிறது.

மொழிநடை நிலையில் சினமுற்ற பெண்ணின் உணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்மொழி, பெண்மொழி பற்றிய வேறுபாடு இப்பாடலில் துல்லியமாக உள்ளது. ஆணின் மொழியைப் பரத்தைக் கூற்றாகப் 'பெருமொழி' எனப் புலவர் வேறுபடுத்தி உள்ளார். பெருமொழி என்பது ஆணினுடைய காமப் புகழ்ச்சியான பேச்சைக் குறிக்கிறது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் காமப் புகழ்ச்சியை 'உலவாக் கட்டுரை' எனக் குறிப்பிடுகிறார். 'மேவனசெய்தல்' எனும் தொடர் பெண்ணினுடைய நுட்பமான சினத்தைப் புலப்படுத்துகின்ற மொழி நடையாக உள்ளது.

இந்தப் பாடலைப் பாடியவர் ஆலங்குடி வங்களார் எனும் புலவராவார். அவருடைய காட்சிப் படுத்தலில் சங்ககாலப் பரத்தையின் உள்ளத்து உணர்வுகள் நன்கு வெளிப்படுத்தப் பட்டுள்ளன.



கலாநிதி
மனோன்மணி
சண்முகதாஸ்

# உணவுக்கும் மருத்துவத் தேவைக்கும் பயன்தரும் மூலிகைகள்

## கொட்டிக் கிழங்கு கொடி

**வேறுபெயர்:** கரவம்
**தாவரவியற் பெயர்-** Aponogeton natans
**(அபோனோஜெறோன் நேற்றன்ஸ்)**
**குடும்பம் -** Aponogetonaceae
**(அப்போனோஜெரோனேசியே)**
**சிங்களப் பெயர்:** கெகட்டிய
**சமஸ்கிருதப் பெயர்:** கசார

ஆம்பல், நெய்தலுடன் சேர்ந்து நீர்நிலைகளில் உண்டாகும் ஒரு நன்னீர்க்கொடியாகும். நீர் வற்றிய காலத்திலும் மண்ணில் கெட்டியாக இருந்து நீர் கிடைக்குங்காலத்து முளைவிடும். நீண்ட இலைக் காம்புகளில் நீள்வட்டவடிவமான இலைகளையும் மடலுருவான பூக்கள் வெள்ளை நிறப் பூக்களையும் கொண்டவை.

இதன் கிழங்கை நீர்விட்டவித்து வெந்தவுடன் மேற்றோல் நீக்கி உண்டுவந்தால் உடற்சூடு, தேகக் கடுப்பு, தேமல் என்பன நீங்கி உடலுக்குக் குளிர்ச்சியும் ஏற்படும். இதை உப்பிட்டு வேகவைத்து மேற்றோலை நீக்கி வற்றலாக உலர்த்தி வைத்துக் கொண்டு நெய்யில் பொரித்து உண்டு வந்தால் நாச் சுவையின்மை, பசியின்மை, மூலம், வயிற்றுவலி என்பன நீங்கும். பூவின் மகரந்தத்தைக் குடிநீர் செய்து கொடுக்க உடல் எரிவு, பெரும்பாடு என்பன நீங்கும்.



## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

### கறிமுல்லை

**வேறுபெயர்:** அரணி, வைசயந்தி, முன்னை
**தாவரவியற் பெயர்-** Premna integrifolia
**(பிரேம்னா இன்ரகிறிபோலியா)**
**குடும்பம் -** Verbenaceae
**(வேபனேசியே)**
**சிங்களப் பெயர்:** மீதி
**சமஸ்கிருதப் பெயர்:** அக்கினிமந்த, ஆரணி

இது சிறுமர வகுப்புக்குரியது. தண்டு வைரமானது. இடையிடையே முள்கள் காணப்படும். தனி இலைகள். இலைகளின் ஓரம் பற்களுடையதாகவும் நுனி கூர்மையாகவும் காணப்படும். முல்லையில் பசு முல்லை (கறிமுல்லை), எருமை முல்லை, காட்டு முல்லை, பேய் முல்லை, பஞ்சபாண்டவர் முல்லை என்ற பேதங்களிலிருந்தாலும் மருத்துவ குணம் பெரும்பாலும் ஒன்றாகவேயுள்ளது.

இதன் இலை, வேர் என்பன மருத்துவத்தில்



பயன்படுகின்றன. இலையைக் குடிநீர் செய்து 15-30 மி.லீ அளவில் தினம் இருவேளை கொடுத்துவர நாச்சுவையின்மை, பசியின்மை என்பன நீங்கும்.

இலையை வறை அல்லது சொதியாக சமைத்து உண்ண மலச்சிக்கல், வயிற்றுப் பொருமல், அசீரணம் என்பன நீங் கும். வேரைக் குடிநீர் செய்து 15-30 மி.லீ அளவில் காலை,மாலை பருகி வர வாதநோய்களான மூட்டு வாதம், மூட்டு நோ, கை கால் பிடிப்பு, நாரிப்பிடிப்பு என்பன நீங்கும். (வளரும்...)



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
அம்பிகை துணை

கச்சேரி நல்லூர் வீதி
பாணன்குளம்
நாச்சி அம்மன் ஆலய

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

## விகிர்தி வருஷம் - 2011

| | |
|---|---|
| கொடியேற்ற உற்சவம் | 07.03.2011 திங்கள் முற்பகல் 10 மணி |
| தினசரி உற்சவம் | காலை 9.30 மணி |
| | மாலை 5 மணி |
| வேணுகோபாலர் உற்சவம் | 18.03.2011 வெள்ளி காலை 6 மணி |
| சப்பற உற்சவம் | 19.03.2011 சனி மாலை 5 மணி |
| தேர் உற்சவம் | 20.03.2011 ஞாயிறு காலை 7 மணி |
| தீர்த்தோற்சவம் | 21.03.2011 திங்கள் காலை 7 மணி |
| பூங்காவனம் | 22.03.2011 செவ்வாய் மாலை 5மணி |

மஹோற்சவ காலத்தில் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பிகையை வணங்கி அருள் பெறுவீர்களாக

சுபம்

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (48,19,22)

ஆலய பரிபாலனசபை

# வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளராக ஆசையா?

## ஓர் நாள் விசேட பயிற்சிப்பட்டறை


இலங்கையின் முதற்தர வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்களின் வழிக்காட்டலின் கீழ்வெள்ளவத்தையில் நடைபெறுகின்றது.

- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்
- கட்டணம் 1500/-

தொடர்புகளுக்கு :
**011-7273740 | 0777-201610**
**LANKA MASS MEDIA INSTITUTE OF FURTHER EDUCATION**
39B, Rajasinga Road, Wellawatta, Colombo 06.
(வெள்ளவத்தை Arpico விற்கு அருகில்)

GoodWin ADV

## மகாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்களின் மறைவு சைவ உலகுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு



ஒருவரும் எதிர்பார்க்காத நிலையில் மாவைக் கந்தன் தனது உயிர் பக்தனை ஆட்கொண்டுவிட்டார். ஸ்கந்த லோகப்பிராப்தி அடைந்த அவரது ஆத்மா முருகன் திருவடிகளில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்
தர்மசாஸ்தா குருகுல மாணவர்கள்

(48,19,22)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| விண்ணில் | மண்ணில் |
|---|---|
| 14.04.1942 | 26.02.2009 |

**திருமதி பாக்கியலட்சுமி (சின்னமணி) திவாகரமூர்த்தி**

மீண்டும் ஒரு முறை வேண்டும்
அம்மா உன் கருவறையில்
என்றும் நாம் உங்கள் பிள்ளைகள் அம்மா
இரவிலும் பகலிலும் நமக்கென துடித்தாய்
கனவிலும் நாம் அழுதால் திடுக்கிட்டு விழிப்பாய்
உன் தியாகம் சொல்ல மொழிகள் இல்லை
உங்கள் ஆத்மா சாந்திக்காய் என்றும்
இறைவனை வேண்டுகின்றோம்.

அருள்நிதி வாசா,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

# மகளிர் தினம்

தென்மராட்சி, மார்ச் 6

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின விழா எதிர்வரும் எட்டாம் திகதி செவ்வாய்க் கிழமை பி.ப.2.00 மணிக்கு சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு இல்ல மண்டபத்தில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும் சிறப்பு விருந்தினராக பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் சு.ரவீகரனும் கலந்துகொள்வர். (ம-207)

## எனது கனவு பிரித்தானிய பட்டப்படிப்பு

சர்வதேச அங்கீகாரம்பெற்ற பிரித்தானிய ஹோட்டல் / சுற்றுலா முகாமைத்துவம்

தேம்ஸ் தனது கல்லூரியில் சர்வதேச அங்கீகாரம்பெற்ற பட்டப்படிப்பில் இணையும் மாணவர்களுக்கு இலண்டன், அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து மற்றும் நியுசிலாந்து செல்ல இலவச ஆலோசனைகள் மற்றும் ஆவனங்கள் தயாரித்தல் சேவையினைகளை வழங்குகிறது.

டிப்ளோமா 09 மாதம் ▶ உயர் டிப்ளோமா 09 மாதம் ▶ கலைமானி 12 மாதம்

க.பொ.த சாதாரண தர அல்லது உயர்தர சித்தியுடன் கலைமானி பட்டத்தைப்பெற இன்றே அழையுங்கள்

கட்டணங்களை தவணைமுறையில் செலுத்தும் வசதி

Mr. Arzad **0783856840**
arzad@thamescollege.lk




Casting Machine
Plating Machine
Buffing Machine
Magnetic Polisher
Wax Injector
Invesmenting Powder
All Types of Accessories




தலை சிறந்த தங்கநகை உற்பத்தி உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்

**ZAM JEWELCRAFTS (PVT) LTD**
6, Joseph Lane, Colombo 04.
Tel : 011 2 585964 Fax : 011 2 585974
E-mail : sales@zamjewelcrafts.lk

FLEX Graphic

## ஆசிரியர் தேவை

10ஆம், 11ஆம் ஆண்டு வகுப்புக்களுக்கு சித்தன்கேணி பகுதிக்கு சகல பாடங்களும் வீட்டில் வந்து கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை தொடர்புகளுக்கு : 0777739996
0777546826

## காணி விற்பனைக்கு

பூதர்மடம், பருத்தித்துறை வீதி 100 யார் தூரத்தில் சமுர்த்தி வங்கி அருகில் 27 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
011 2365164,0770268226

## கார் விற்பனைக்கு

MITSUBISHI LANCER (CII) A/C , P/S
விலை 3.45 லட்சம்
தொடர்புகளுக்கு - 0716867209, 0779492589.

## வாடகை/விற்பனைக்கு

இல.146, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையில் (K.K.S. வீதிக்கு அருகில்) கீழ்+மேல் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். அத்துடன் இல.12 பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை சாவகச்சேரியில் 31/2 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு
தொடர்பு: 0771526874,0775361370

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடி ஒழுங்கையில் மூன்று மாடிகளைக் கொண்ட இரு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0212228145,0776184354, 0779610084

## THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில முழுக்கட்டணம் 5000/- மேலதிக வகுப்புகள் இலவசம். By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
Tel:0776751649

## காணிவிற்பனைக்கு

சாவகச்சேரி A-9 வீதியில் 'இந்து' ஆரம்பப் பாடசாலைக்கு செல்லும் வீதி பிரியும் சந்திக்கு சமீபமாக வீடு, கிணறு பயன்தரு மரங்களுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777 291673

## வீடு வாடகைக்கு

ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் 12அறைகள் 2 சமையல் அறைகள் 3 குளியலறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
பொது நிறுவனங்களுக்கு உகந்தது.
தொடர்பு : 077625[illegible]26
(27-23-43)

# கண்ணீர் அஞ்சலி



கொனிக்கா கலர் லாப் உரிமையாளர் ஸ்ரீதரன் அவர்களின் தாயார்

**திருமதி இராசமணி வீரசிங்கம்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு மனம் வருந்துவதோடு அன்னாரின் குடும்பத்தினரோடு துயர் பகிர்ந்து ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கோல்டன் டச் படப்பிடிப்பாளர்
இருபாலைச் சந்தி, கோப்பாய்.

# aat பாடநெறிகள்

மேற்படி பாடநெறிக்கான பதிவுகளை **கிளிநொச்சியில் மேற்கொள்ளலாம்.**

- க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 6பாடங்களில் சித்திபெற்ற அனைவரும் இப் பாட நெறிக்கான பதிவினை மேற்கொள்ளலாம்.
- க.பொ.த சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் இப்பதிவினை மேற்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 021 3212682, 0777705963

**சட்டவள நிலையம்,**
**கந்தசுவாமி கோயில் முன்பாக,**
**கண்டிவீதி, கிளிநொச்சி.** (27-23-43)

# கண்ணீர் அஞ்சலி



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பிரதம குருக்களும், மாவை ஆதீன கர்த்தாவுமான

*மஹாராஜ ஸ்ரீ*
**சு.து.ஷண்முகநாத குருக்கள்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொன்னுச்சாமி குடும்பம் (பாஸ்கரன்)
மாவிட்டபுரம்.

# கூறுவிலை கோரல் அறிவித்தல்
## மாநகரசபை, யாழ்ப்பாணம்

மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட வீதி மற்றும் கட்டட வேலைகளுக்கு தேவையான வீதி உருளை , மாட்டு உருளை, பக்கோ(JBC Bacow) ஆகிய இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இவற்றினை வாடகைக்கு வழங்கும் நிறுவனங்கள் கூறுவிலைகளை சமர்ப்பிக்கலாம். இந்தக் கூறுவிலைகள் யாவும் 16.03.2011 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ எம்மால்கோரப்பட்டமைக்கு அமைவாக தங்களால் படிவம் தயாரிக்கப்பட்டு கடித உறையின் இடது மேல் பக்கத்தில் " Po/2011 வீதிஉருளை, பக்கோ வாடகைக்கு அமர்த்தல்" எனக் குறிப்பிட்டு முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**விவரம் வருமாறு:**

1. வீதி உருளை வாடகைக்கு அமர்த்தல்
   I. 10 தொன் நிறையுடைய வீதி உருளை 01 மணித்தியாலத்துக்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை (சாரதி, எரிபொருள் செலவு உட்பட)
   II. 10 தொன் நிறையுடைய வீதி உருளை ஒரு நாளுக்கு 08 மணித்தியாலத்துக்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை(சாரதி, எரிபொருள் செலவு உட்பட)
   III. மாட்டு உருளை ஒரு மணித்தியாலத்துக்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை (செலவு உட்பட)
   IV. மாட்டு உருளை ஒரு நாளுக்கு 8 மணித்தியாலத்துக்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை (செலவு உட்பட)
2. பக்கோ இயந்திரம் ((JBC Bacow) வாடகைக்கு அமர்த்துதல்
   1) 01 மணித்தியாலத்துக்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை (சாரதி, எரிபொருள் செலவு உட்பட)
      60Hp
      120Hp
      200Hp
   II. ஒரு நாளுக்கு 8 மணித்தியாலயத்துக்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை(சாரதி, எரிபொருள் (செலவு உட்பட)
      60Hp
      120Hp
      200Hp

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
04.03.2011

திருமதி யோ.பற்குணராசா
மாநகரமுதல்வர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்டங்காய் காப்பணம் சுமை கூலி...

"சுண்டங்காய் காப்பணம் சுமை கூலி முக்காப்பணம்" என்று எம்மவர் களிடையே பழமொழியொன்று இருக்கிறது உங்களுக்குத் தெரியும் தானே! இது தொண்டராசிரியர்களாகவிருந்து பல வருடங்களாக மட்டையடித்து ஒரு மாதிரி ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களுக்கு மிகவும் பொருந்தும்.

பல வருடங்களாகத் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிப் போராட்டங்கள், பகிஷ்கரிப்பு எனப் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் இவர்கள் பகடைக் காய்களாகப் பயன்படுத்தப்பட்டுத் தமது தேவைகளையெல்லாம் நிறைவு செய்த அரசியல்வாதிகள் ஏனோ தானோ என்று ஆசிரிய உதவியாளர்கள் என ஒரு பதவியினைக் கொடுத்து சுமார் 450 ஆசிரியர்களை வடக்கில் பணிக்கு அமர்த்தினார்கள்.

இவ்வாறு ஆசிரிய உதவியாளர் களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகிறது.கடந்த ஒன்றரை வருடங்களாக அந்தச் சம்பளத்துடன் காலத்தை ஓட்டி வருகிறார்கள்.

"கொழுக்கட்டையும் மோதகமும்" வடிவத்தில்தான் வேறொழிய உள்விடயத்தில் ஒன்றுதான். அதேபோல்தான் தொண்டராசிரியர்களாகக் கடமை யாற்றிவர்களை ஆசிரிய உதவியாளர்கள் என்று பெயர் மட்டும் மாற்றியிருக்கிறார்கள்.

இந்த ஆசிரிய உதவியாளர்களில் வெளிவாரிப்பட்டதாரிகளும் உள்ளனர். அத்துடன் 40 வயதுக்கு மேற்பட்ட குடும்பஸ்தர்களும் இருக்கிறார்கள். கணவனை இழந்த பெண்களும் உள்ளனர். இவர்களது பொருளாதார நிலையைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள், யோசித்துப் பாருங்கள் ஒன்றரை வருடங்களாக இவர்கள் எவ்வாறுதான் வெறும் மூவாயித்துடன் தமது குடும்பச் செலவுகளைக் கொண்டு செல்கிறார்கள்.

இதில் அநேகமான ஆசிரியர்கள் நீண்டதூரம் பஸ் பயணத்தினை மேற் கொண்டே சேவையாற்றுக்கின்றனர். இவ்வாறு பயணம் செய்பவர்களுக்குப் பயணச் செலவு என்பது கொடுக்கின்ற 3 ஆயிரத்தையும் தாண்டிவிடும்.

பொருளாதாரத்தில் இன்றைய காலகட்டத்தில் ஒருவர் சுமார் 30 ஆயிரம் ரூபா வருமானத்தைப் பெற்றுக் கொண்டாலே சாதாரணமாகத்தான் வாழ முடியும். அந்தளவுக்குப் பொருள்களின் விலைவாசியும் ஏறிக்கொண்டே போகிறது. இரண்டு நாள் குடும்பச்செலவுக்குத்தான் 3 ஆயிரம் ரூபா போதும் இவர்கள் மாதாந்தம் 3 ஆயிரம் பெறுகிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஆசிரிய உதவியாளர் ஒருவரை அண்மையில் சந்தித்தபோது,

"என்ன தலைமயிரெல்லாம் நரைத்துப் போட்டுது" என்று கேட்டேன்.

"வயது 50ஆகுது தலை நரைக்கும் தானே, பென்ஷன் எடுக்கிற காலத்தில தான் சம்பளம் தருவாங்களோ? தெரியாது" என்று சலித்துக் கொண்டார்.

ஆசிரியத் தொழில் என்பது மிகவும் புனிதத்தன்மை வாய்ந்தது. அதனைச் செய்பவர்களின் மனங்களில் மன உளைச்சலையும், உளத்தாக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் இந்த 3ஆயிரம் ரூபா வேதனம் வழங்கல் அமைகிறது. அவர்களுடைய நாளாந்த அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாடி அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் பணிக்கமர்த்தப்பட்ட பாடசாலைகளில் அதிபர், சிரேஷ்ட ஆசிரியர்கள் கொழுத்த சம்பளத்தை வாங்கிக் கொண்டு இந்த ஆசிரியர்களிடம் "பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல" சக்கை வேலை வாங்குகிறார்கள்.

வேலைக்கேற்ற ஊதியம் இன்றி வெறும் மூவாயிரம் ரூபாவுடன் சேவை மனப்பாங்குடன் தமக்கும் எதிர்காலத்தில் ஆசிரிய நியமனம் கிடைக்கும். கை நிறையச் சம்பளம் வரும் என்று நிறைந்த எதிர்பார்ப்போடும் காலங்களை நகர்த்தும் இவர்களிடம் அதிபர், ஆசிரியர்கள் தமது வேலைகளையெல்லாம் இவர்கள் மீது திணித்து விடுகிறார்கள் என்று மிகுந்த மனப் பாதிப்புடன் குமுறிக் கொள்கிறார்கள்.

**வயது 50 ஆகுது தலைமுடியும் நரைச்சிட்டுது... பென்ஷன் எடுக்கிற காலத்தில்தான் சம்பளம் கிடைக்குமோ?**

அத்துடன் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறுகின்ற போட்டிகளுக்கு மாணவர்களைச் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அழைத்துச் செல்வதற்கும் இவர்களைத்தான் அனுப்புகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இவர்கள் வாரம் முழுவதும் ஆசிரிய சேவையில் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

வெளிவாரியாகப் படித்து பட்டம் பெற்ற பட்டதாரிகள் பலரும் இந்த வெறும் மூவாயிரத்துடன் மட்டும்தான் ஒன்றரை வருடங்களாகக் காலத்தை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

"வரவு பத்து செலவு எட்டாக இருக்க வேண்டும் என்றுதானே எல்லோரும் நினைத்துக் கொள்வார்கள். அதுதானே யதார்த்தமும். ஆனால் இவர்களுடைய நிலையில் "வரவு எட்டு செலவு பத்து" என்ற கணக்கில் செல்கிறது வாழ்க்கை.

"உந்த 3 ஆயிரத்துக்கு வருடக் கணக்கா மினக்கெடுகிறதிலும் பார்க்க பேசாமல் வீட்டில் இருந்து பிள்ளைகளைப் பார்த்தாலும் பரவாயில்லை. இல்லையென்றால் எங்கையாவது பல சரக்குக் கடையில் நின்றாலும்" என்று மனைவிமார் கணவன்மாரைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொருளாதாரச் சிக்கல், அதனால் குடும்ப முரண்பாடுகளால் ஏற்படுகின்ற மன உளைச்சல்கள் மற்றும் பாடசாலைகளில் அதிகூடியதான வேலைப்பளு எனப் பல்வேறு நெருக்கடிக்களுக்கு முகம் கொடுத்து வெறுமனே 3ஆயிரம் ரூபா சம்பளத்திற்காகச் சேவையில் உள்ளார்கள்.

ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் தொண்டர் ஆசிரியர்கள் விடயத்தைத் தூசுதட்டித் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தியவர்கள் இதுவிடயத்தில் தொடர்ந்தும் கவனமெடுக்க வேண்டும் என்பது பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் உள்ளக்கிடக்கைகளின் வெளிப்பாடாகும்.

**கவிநேசன்**

காலத்தை இழுத்தடிக்காது ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு இவர்களை உள்வாங்கித் தரம் III ஆசிரிய நியமனங்களை வழங்க வேண்டும். அவர்களது சேவைக்குரிய வேதனங்களையும் கொடுக்க உரிய உயர் அதிகாரிகள் தொடந்தும் தகுந்த நடவடிக்கையினை எடுக்க முன்வரவேண்டும். இதற்கு ஆசிரிய உதவியாளர்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள்.

# பனை வளத்தின் அபிவிருத்திக்கு வழி பிறக்குமா...? 6



பனை வளம் சார்ந்த பூரண அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் இது தொடர்பான கற்கை நெறியை விரிவாக மேற்கொள்ளவேண்டும்.

இந்தக் கற்கை நெறியினூடாக உள்வாங்கப்படும் மாணவர்கள் பனை இனத் தாவரங்கள் பற்றி விளக்கமாக கற்றுக் கொள்வதற்கும் இது பற்றிய ஆய்வுகளை முன்னெடுப்பதற்கும் இவற்றினூடாக இவ்வளத்தினை மேம்படுத்துவதற்கும் வாய்ப்புக்கள் உண்டென எதிர்பார்க்கப்படுகின்றது. பனை வளத்தினது பிரயோகங்களென எமது மூதாதையரினால் இனங் காணப்பட்டவை தவிர அதன் பயன்களை மதிப் பேற்றஞ்செய்து புதிய பொருள்களாக அனைவரும் விரும்பி வாங்கிப் பயன்படுத்தும் பொருள்களாக மாற்றும் சந்தர்பத்திலேயே எங்களூர் வளமான கற்பக தருவினாலான பயன்பாட்டின் விருத்தி சாத்தியமாகும். எமது கையிலேயே இப்படியொரு வளத்தை வைத்துக் கொண்டு வேலைவாய்ப்பைத் தேடியலையும் நிலைமையை இனியும் வரவிடாது இவ்வளம் பற்றிய அறிவுத் தேடலுக்குள் எமது இனிய இளையவர் சமூகத்தை உள்வாங்கிக் கல்வியுடனான அபிவிருத்திக்கு வழி செய்ய வேண்டியது எல்லோருடைய கடமையாகும். விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கடமையாற்றிய கலாநிதி தெய்வேந்திரராசா, பேராசிரியர் கந்தையா ஆகியோரும் விவசாய பீடத்தில் பணிபுரிந்த பேராசிரியர் மோகனதாஸ் போன்றோர் பனைசார் ஆய்வில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர மருத்துவ பீடத்தின் உயிரி இரசாயனவியல் துறையிலும் இதுபற்றிய ஆய்வுகள் நடைபெற்றிருக்கின்றன. இவை அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்த்தால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலுள்ள விவசாய பீடத்தில் இப்பட்டப்பயில் டிப்ளோமா கற்கை நெறியினை உள்வாங்கும் பட்சத் தில் விஞ்ஞான பீடத்தின் தாவரவியல் மற்றும் இர சாயனவியல் துறைகளும் கலைப்பீடத்தின் பலதுறை களும் முகாமைத்துவ வணிக பீடமும் மருத்துவ பீடத் தின் உயிரி இரசாயனவியல் துறையும் இன்னும் சித்த வைத்தியத்துறை, இராமநாதன் நுண்கலைப்பிரிவின் சித்திரமும் வடிவமைத்தலும் துறை என அனைவரும் இணைந்த துறைகளுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் (Inter disciplinary) கற்கை நெறியாக இதனை உருவாக்குதல் நன்று. அதற்கான இக்கற்கை நெறிக்கான பாட அலகுகள் தேவையான ஆளணி, கற்கைக்கான ஏனைய வளங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்பட வேண்டும். பனை சார்ந்த கற்கை நெறியை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தைப் புலமையாளர்கள் முன்மொழிந்திருக்கும் இந்த நிலையில் இதனைச் செயற்படுத்தும் சாத்தியத்தைப் பொதுமக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி நடைமுறைப்படுத்தலாம். இதில் ஆய்வுக் கட்டமைப்பில் விரைவில் புனரமைக்கப்படும் பனை அபிவிருத்திச் சபையின் பனை ஆராய்ச்சி நிலையத்தையும் ஒருங்கிணைத்துக் கொள்ளலாம். எமது பிரதேசத்தில் உள்ள வளத்தைப் பற்றியதான இக்கற்கை நெறி பற்றிய பொதுமக்களின் கருத்துக்களைப் [illegible] கற்கைநெறியினூடான வேலைவாய்ப்பு, ஆய்வு விருத்தி இவற்றுடனான அபிவிருத்தி என்பன இங்கே அலசி ஆராயப்பட வேண்டிய விடயங்களாகின்றன. வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் வேகத்திற்கு ஈடு கொடுத்து எங்களூர் வளங்களின் பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டினை கல்விக் கண் கொண்டு சீர்தூக்கி விடவேண்டியது எமதெல்லோருக்கும் முன்னாலுள்ள சவாலாகவே உள்ளது. இது பற்றிய கருத்துக்கள் அரசசார்பற்ற இணையத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணச் சிந்தனைக் கூடத்தி னால் அண்மையில் நடத்தப்பட்ட கருத்தரங்கிலும் முன்மொழியப்பட்டுள்ளது. இக் கற்கைநெறி பற்றிய கருத்துக்களையும் மேலும் பரிமாறி அதனை ஆரம்பிப்பதன் பலாபலன்களை அனை வருக்கும் தெளிவுபடுத்தி இதனை செயல் வடிவமாக்கும் நாளை எதிர்பார்த்திருப்போம். அதன் மூலமே பனை சார் அபிவிருத்தி யென்பது முழுமைபெறும். (வளரும்)



பேராசிரியர் கு.மிகுந்தன்,
தலைவர், விவசாய உயிரியல் துறை,விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

837/1, கே.கே.எஸ். வீதியில் உள்ள ஒன்றரைப் பரப்பும் ஒரு குழியும் உள்ள காணி விற்பனைக்குண்டு. பெரிய வீட்டுக்கான சகல அத்திபாரமும் மிகப் பெரிய அளவிலான நீர்த்தாங்கியும் கட்டப்பட்டுள்ளது.

விவரத்துக்கு: 0774942379,
தொடர்புகொள்ளவும்.
00491787021138 (ஜேர்மனி)


## வலுவிழந்தோர் சங்கத்தின் ஆண்டுநிறைவுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 6

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 21ஆவது ஆண்டு நிறைவு நாளினை முன்னிட்டு திறந்த வெளிப்போட்டுப் போட்டி நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கைதடி நவீல்ட் பாடசாலை, கோண்டாவில் சிவபூமி இல்லம், இனியவாழ்வு விழிப்புணர்வற்றோர் சங்கம், உடுவில் ஆர்க் பாடசாலை, வாழ்வகம் ஆகிய மாற்று வலுவுடையோர் பாடசாலைகளைச் சேர்ந்த 180இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இப்போட்டியில் கலந்துகொள்கிறார்கள்.

நாளையும் நாளை மறுதினமும் தொடர்ந்து இப்போட்டிகள் இச்சங்கத்தைச் சேர்ந்த சிவனேஸ்வரன் சுதா தலைமையில் இடம் பெறுகிறது. பாட்டு, பழம்பொறுக்குதல், பந்தெறிதல், சக்கரநாற்காலி ஓட்டம், நடனம், கதிரை பின்னுதல், தலை அலங்காரம், கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் போன்ற 23 வகையான போட்டிகள் நடைபெறவுள்ளன. (ம-313)


## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற அங்கத்தவரான சு.பாஸ்கரன் [கஜன் ரேடர்ஸ்- சாவகச்சேரி]
அவர்களின் பாசமிகு தந்தை
அமரர் சு.சுப்பிரமணியம் 05.03.2011 இல் காலமானார்.
இவரின் மறைவுக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.
(39) சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# காபரேற்றர் ஆனந்தனின் அன்பு மனைவியின்
# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

## திருமதி
## பாலசிங்கம் நீலா



மண் மகிழ
09.08.1948

கண்நெகிழ
09.03.2008

**திதி: 06.03.2011**

கண்ணீர் கரைந்து ஆண்டுகள்
மூன்று ஆனதம்மா!
கண்முன்னே நீங்களில்லை
உறவாட எம்மோடு உங்களை
எண்ணாத நாளில்லை
இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே
எம்மை ஆளுகின்றன
இறுதிவரை எம்மோடு
சேர்ந்திருப்பீர்கள்
என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்க விட்டு
எங்கு சென்றீர்கள்?
எம் உயிர் உள்ளவரை
உங்களை மறவோம்!

உங்கள் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

காபரேற்றர் ஆனந்தன்
130, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(49-27)


## மெய்வன்மைப் போட்டி

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சிரேஷ்ட சட்டத்தரணி மா.தியாகராஜன், தேசிய சேமிப்பு வங்கியின் இளைப்பாறிய முகாமையாளர் திருமதி ரதி தியாகராஜன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக சர்வதேச விசேட ஒலிம்பிக் குழுவின் வடமாகாண விளையாட்டுப்பணிப்பாளரும் யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளருமான மா.இளம்பிறையன், திருமதி சிவஷ்தி இளம்பிறையன் ஆகியோரும், உரும்பிராய் லயன்ஸ் கழகத்தின் தலைவருமான கே.சண்முகநாதன், திருமதி ஜே.சண்முகநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-25)


## கண்ணீர் அஞ்சலி



04.03.2011 அன்று இறைபதமடைந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பிரதமகுரு
**து.சண்முகநாதக்குருக்கள்**
அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா இறைவனில் சங்கமமாகப் பிரார்த்திக்கின்றோம்.

பாஸ்கரன் சிற்பாலயம், பாஸ்கரன் ஆச்சாரி,
479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0212223515
(39-27-19)



## 31 ஆம் நாள் நீங்கா நினைவுகளுடன்

மண்ணில்
02.12.1955



விண்ணில்
04.02.2011

அமரர் **செல்லத்துரை வரதராஜா**
(ஜேர்மனியில் இறைபதமெய்தினார்)

திரைகடல் ஓடி திரவியம் தேடப் புறப்பட்ட
எங்கள் பாச உறவே! உங்கள் பிரிவுதனை
கேட்டுமனம் துடித்துப் போனதையா!
தாயகம் திரும்புவாய் என்று உனைப் பார்க்க
தாகமாய் இருந்தோம்
இதயத்தில் இடியாய் வந்தது உங்கள் மரணச் செய்தி....
மறக்க முடியவில்லை உங்கள் நினைவுதனை....
தாங்க முடியவில்லை உங்கள் பிரிவுதனை...

546, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
என்றும் உம் நினைவில் தவிக்கும்:
குடும்பத்தினர்.
(49-19-22)



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
14.11.1941

விண்ணில்:
19.02.2007

அமரர்
**சிவசம்பு மனோகரசீலன்**
திதி: 06.03.2011

ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
உங்கள் நினைவலைகள்
எம்மைவிட்டு அகலாது
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த நாள்களை
என்றென்றும் நினைத்துப் பார்க்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாவலடி ஒழுங்கை,
மானிப்பாய். (39-27-19)
(1061)



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 14.11.1946
உதிர்வு: 09.03.2008

அமரர் **கந்தையா கனகரத்தினம்**
(ஓய்வுபெற்ற கிராம அலுவலரும் சமாதான நீதிவானும், கலைஞானகேசரியும்)

திதி: 06.03.2011

எமது குடும்பத்தின் குலவிளக்கின் 3 ஆம் ஆண்டு நினைவு தினத்தில் அவரை மனமுருகி நினைவு கூருவதுடன் இன்று (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

தற்காலிக முகவரி:
26/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
தம்பகாமம், (48,22,19)



## வீடு வாடகைக்குத் தேவை

அரச பணிபுரியும் ஒருவரின் சிறிய குடும்பத்துக்கு கொக்குவில், தாவடி, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
தகுந்த முற்பணம் வழங்கப்படும்.
0774842776



## மணமகள் தேவை

ஐரோப்பிய நாட்டில் வசிக்கும் இந்து உயர் குலம் பெற்றோர் தமது மகனுக்கு (35) பொருத்தமான மணமகளைத் தேடுகின்றனர்.
பொருந்தாத நட்சத்திரங்கள் அச்சுவினி, மகம், மூலம், ஆயிலியம், கேட்டை, ரேவதி, அவிட்டம், பூரட்டாதி.

தொடர்பு:-
ksanush@hotmail.com.
(39) 0774153487



## மலிவு விற்பனை

100இற்கும் மேற்பட்ட Sony Wega Flat Tv, TG 21 - 16,500/= 21Q 13,000/=AR25" 22,000/= 29" 25,000/= குளிர் சாதனப்பெட்டிகள் DTS அம்ளிவி பயர்கள், JB 2 Box வகைகள் RX ரேடி யோக்கள் DVD, VCR என்பன மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0771393670, 0778449829
[illegible]
(ஆரம்பப் பாடசாலை அருகில்) K.K.S வீதி, இணுவில்.



## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன உரிமையாளர்
வீ.சிறிதரனின்
அன்புத் தாய்

திருமதி
**வீரசிங்கம் இராசமணி**

மரணமடைந்த செய்தியறிந்து அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


பிரிவால் துயருறும்:
கொனிக்கா கலர்லாப், சிறிராம் ஜுவல்லர்ஸ் ஊழியர்கள்,
தாயகம் சிறுவர்களும், ஊழியர்களும்.

(சி/576593) (39-22-19)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமுன் காப்பதே சிறந்தது

**நம்பவே முடியாத அளவுக்கு லாபம் கிடைக்கும் என்று ஒருவர் சொல்வாரானால் அது உண்மையில் நம்ப முடியாததுதான். பிரமிட் திட்டம் சட்ட விரோதமானது. இது தண்டனைக்குரிய குற்றமாகும். இதில் முதலீடு செய்யும் அநேகர் பணத்தை இழக்க நேரிடும்.**



## பிரமிட் திட்டம் பற்றி ஓர் அலசல்

''நெஞ்சத்தில் நேர்மையுள்ளவரை ஏமாற்ற முடியாது.'' இது ஒரு பழமொழி. ஏனைய பழமொழிகளைப் போலவே இதுவும் நூற்றுக்கு நூறு நிஜமல்ல. ஏனென்றால் ஒவ்வொரு நாளும் நேர்மையான ஆள்கள் மோசடிக்கு ஆளாகிறார்கள். நேர்மையாக இருப்பது மட்டுமே அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதில்லை.

இந்த உலகத்திலுள்ள பெரும் அறிவாளிகள் சிலர் மக்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து பணம் பறிப்பதற்காகச் சதித்திட்டம் தீட்டி, அதைச் செயற்படுத்துகிறார்கள். ஓர் எழுத்தாளர் குறிப்பிட்டபடி, ''சில ஏமாற்று வேலைகள் படுதிறமையாகச் செய்யப்படுவதால் அவற்றால் ஏமாந்து போகாதிருப்பது தான் முட்டாள்தனம்''.

பழமையான சூழ்ச்சித் திட்டங்கள் பல மாற்றங்களோடு இன்று வலம் வருகின்றன; புதிது புதிதாகப் பல சூழ்ச்சித் திட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. மோசடிக்காரர்கள் ஆள்களை ஏமாற்றும் வழிகள் அனைத்தையும் தெரிந்து கொள்ள நாம் பிரயாசைப்பட வேண்டியதில்லை. ஆனால் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது அதற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ள எமக்குப் பெரிதும் உதவும்.

முதலீடுகளிலிருந்து நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு இலாபம் கிடைக்கும் என்ற வாக்குறுதிதான் எல்லா மோசடிக்கும் அடிப்படையாக இருக்கிறது. திடீர் பணக்காரர் ஆவதற்காக தீட்டப்படும் ஒரு பொதுவான மோசடித் திட்டமே பிரமிட் திட்டம். பிரமிட் திட்டம்

**பணத்தைப் பறி கொடுத்து மனதை ரணமாக்க வேண்டாம்! ஒருமோசடிக்காரன் தான் சொல்வதை அப்படியே நம்பிவிடும் ஆட்களைக் குறி வைக்கிறான் மோசடிக்கு ஆளாகாமல் முன்னெச்சரிக் கையோடு இருப்பவர்கள் வெகு சிலர்தான் என்பதே வருந்தத்தக்க விஷயம்**

என்பது Multi Level Marketing ஆகும்.

இத் திட்டத்தில் சேருபவர்கள் தங்களைப்போல் மற்றவர்களையும் சேர்ப்பதற்காக நுழைவுக் கட்டணம் செலுத்த வேண்டும். பொதுவாக இப்படிப்பட்ட திட்டங்களில் விற்பனை என்பது இருக்காது. சொற்ப உழைப்பும் சொற்ப முதலீடும் இருந்தாலே போதும், எக்கச்சக்கமான பணத்தை வாரிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தையே இவை எப்போதும் அளிக் கின்றன. இத் திட்டத்தில் பல வித்தி யாசமான முறைகள் இருக்கின்றன. இதில் முதலீடு செய்பவர்கள் வேறு பல முதலீட்டாளர்களைச் சேர்ப்பதன் மூலம் கொமிஷன் (Commission- தரகு) பெற்றுக்கொள்வதே பொதுவான ஒரு சூழ்ச்சி.

அதாவது, நீங்கள் பணம் செலுத்தி ஒரு கிளப்பில் (Club) சேர்ந்து கொள்ள வேண்டும். இன்னும் சிலரையும் அதில் சேர்த்து விட்டால் உங்களுக்கு ஒரு கணினியோ வேறு ஏதாவது எலக்ரோனிக் சாதனமோ கிடைக்கும். பெயர்ப்பட்டியலில் முதலில் இருப்பவருக்கு பணம் அனுப்பும்படி சங்கிலித் தொடர்போல் கடிதங்களை அனுப்பு வதும் கூட இதுபோன்ற ஒரு முறையா கும். பட்டியலில் உங்களுடைய பெயர் முதலிடத்துக்கு வரும்போது நீங்களும் பெருந்தொகைப் பணத்தைச் சுவீகரித்துக் கொள்வீர்கள் என உறுதியளிக்கப் படுகின்றது.

பிரமிட் திட்டங்கள் எப்போதுமே தோல்வியடைகின்றன. காரணம், புதிய ஆள்களைத் தொடர்ந்து சேர்த்துக் கொண்டே இருப்பது முடியாத விஷயம். இதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். 5பேர் சேர்ந்து ஒரு பிரமிட் திட்டத்தை ஆரம்பிக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு 5பேர் சேர்க்கும்போது 25பேர் சேர்ந்து விடுகிறார்கள். இவர்கள் எல்லோரும் 5பேர் வீதம் ஆள்களை சேர்க்கும்போது அந்த எண்ணிக்கை 125ஆகப் பெருகி விடுகிறது. இப்படியாக ஒன்பதாவது நிலையில் ஏறக்குறைய 20 லட்சம் பேர் சேர்ந்து விடுகிறார்கள். இவர்களும் புதிய ஆள்களைச் சேர்த்தால் 90 லட்சம் பேருக்கு மேல் சேர்ந்து விடுகிறார்கள். அதற்குமேல் அதிகமான ஆள்களை சேர்க்க முடியாதநிலை ஒரு சமயத்தில் ஏற்படும் என்பது இந்தத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

அந்தளவுக்கு எண்ணிக்கை சேர்ந்ததும் அவர்கள் பணத்தைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிடுகிறார்கள். கடைசியில் உங்களுடைய பணத்தை நீங்கள் ஒருவேளை இழந்து விடலாம். அது மட்டுமல்ல, நீங்கள் சேர்த்துவிட்ட ஆள்கள் தாங்கள் இழந்த பணத்தை உங்களிடமிருந்து திரும்பப் பெறுவதற்கு முயலலாம்.

பிரமிட் திட்டத்தின் மூலம் நீங்கள் பணம் சேர்க்க வேண்டுமென்றால், மற்றொருவர் பணம் இழக்க வேண்டியிருக்கும் என்பதையும் நினைவில் வையுங்கள். அண்மைக்காலமாக இலங்கை மத்திய வங்கி மோசடி மிக்க இப்பிரமிட் திட்டம் குறித்து விழிப்புணர்வூட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உழைப்பு ஏதும் இல்லாமலேயே உங்கள் முதலீட்டுக்காகப் பெரும் தொகையை இலாபமாக யாரேனும் தருகிறார்களா? அப்படியானால் இந்த எச்சரிப்பை மனதில் கொள்ளுங்கள்.

நம்பவே முடியாத அளவுக்கு இலாபம் கிடைக்கும் என்று ஒருவர் சொல்வாரானால் அது உண்மையில் நம்ப முடியாதது தான். ''இது [illegible]'' என நினைத்து விளம்பரதாரர் கொடுக்கும் வாக்குறுதிகளையும், அதனால் பலனடைந்தவர்களின் அறிக்கைகளையும் அவசரப்பட்டு நம்பிவிடாதீர்கள்.

பணத்தை வாரிக் கொடுப்பதற்கோ இரகசியங்களை எல்லாம் சொல்லிக் கொடுத்து உங்களைப் பணக்காரர் ஆக்குவதற்கோ யாரும் வியாபாரம் செய்வதில்லை என்பதை மறந்து விடக் கூடாது.

தனக்கு இருக்கும் அபார அறிவால் உங்களுக்கு நிறையப் பணம் கிடைக்கும் என ஒருவர் சொன்னால் அந்த அறிவைப் பயன்படுத்தி அவர் பணக்காரராக வேண்டியதுதானே. என்னைப் பணக்காரர் ஆக்குவதற்கு அவர் ஏன் தன்னுடைய நேரத்தை வீணடிக்கிறார்? என்று உங்களை நீங்களே கேளுங்கள்.

இன்று நாம் வாழும் உலகம் தார்மீக நெறிமுறைகள் மாறி வருகிறது. ஒரு காலத்தில் கண்டனம் செய்யப்பட்ட நேர்மையற்ற பழக்கங்கள் இன்றோ கண்டும் காணாமல் விடப்படுகின்றன.

சில ஊடகங்களில் திருடர்களும் மோசடிக்காரர்களும் ஓஹோவென போற்றிப் புகழப்படுகின்றார்கள். ஹீரோக்களைப்போல் காட்டப்படுகிறார்கள்.

ஆனால், மோசடிக்காரர்கள் போற்றிப் புகழப்பட வேண்டியவர்கள் அல்லர். நம்பிக்கைத்துரோக நிபுணர்களுக்கே உரிய தனிப் பண்பு அவர்களுடைய இயல்பான திறமையே.

பெரும்பாலும் இளம் வயதிலேயே தங்களுக்கு அருகில் இருப்பவர்களைத் தந்திரமாக நடத்திக் காரியத்தை சாதித்து விடுகையில் அவர்களுடைய குணம்புலப்பட்டு விடுகிறது. இந்தத் திறமை மட்டுமல்ல அவ்வாறு காரியத்தைச் சாதிக்கையில் குற்ற உணர்வு அல்லது வருத்தமோ அவர்களுக்கு ஏற்படுவதில்லை. மாறாகத் தங்களுக்குப் பரம திருப்தி கிடைத்ததாகவே அதாவது ஒருவித சந்தோஷம் கிடைத்ததாகவே உணருகிறார்கள். மற்றவர்களுக்கு என்ன பாதிப்பு வந்தாலும் சரி, தாங்கள் விரும்பியதைத் தொடர்ந்து சாதிக்க இது அவர்களை உந்துவிக்கிறது.

இன்று தில்லுமுல்லு இந்தளவு அதிகமாக நடப்பதற்கு காரணம், தார்மீக நெறிகள் அறவே இல்லாத சமுதாயத்தில் நாம் வாழ்வதுதான் என்று உறுதியாக நம்பலாம்.

தார்மீக நெறிகளின் வீழ்ச்சி, ஒரு பித்தலாட்ட பண்பாட்டை உருவாக்கியிருக்கிறது. தார்மீக நெறிகளை வீட்டில் கற்பிக்காத ஒரு சமுதாயத்தில் நாம் வாழ்கிறோம்; தார்மீக நெறிகளைப் பள்ளியில் கற்பிக்காத ஒரு சமுதாயத்தில் நாம் வாழ்கிறோம்; காரணம், தார்மீகத்தை கற்றுக் கொடுத்தால் ஆசிரியர்கள் குற்றவாளிகளாகி விடுவார்கள்.

'பாசாங்கு செய்தோ போலி ஆதாரங்களைக் காட்டியோ, வாக்குறுதிகள் கொடுத்தோ பணத்தை அபகரிக்கத் திட்டமிட்டு வஞ்சிப்பது அல்லது சதித் திட்டம் போடுவது தான் மோசடி என்று வரையறுக்கப்படுகிறது. பெரும்பாலான மோசடிக்காரர்களுக்கு எந்தத் தண்டனையும் கொடுக்கப்படாதது வருந்தத்தக்க விடயம்; அவர்கள் திட்டமிட்டுத் தான் மோசடி செய்திருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பது பெரும்பாலும் கடினமாக இருப்பதாலேயே தண்டனை வழங்க முடிவதில்லை.

அதுமட்டுமல்ல, ஏமாற்றுப் பேர்வழிகள் பலர் சட்டத்தின் ஓட்டைகளை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தியும் கொள்கிறார்கள்.

ஆகவே தங்கள் மீது குற்றம் சுமத்தவே முடியாதபடி சாமர்த்தியமாக மோசடி செய்கிறார்கள்.

ஒரு மோசடிக்காரன் மீது வழக்குத் தொடுப்பதால் ஏகப்பட்ட நேரமும் பணமும் வீணாவதுதான் மிச்சம். பொதுவாக கோடிக்கணக்கான பணத்தைச் சுருட்டியவர்கள் அல்லது ஊர் உலகத்தையே உலுக்குமளவுக்கு அதிர்ச்சியூட்டும் காரியத்தைச் செய்தவர்கள்தான் குற்றவாளிகளாய் தீர்க்கப்படுகிறார்கள். அப்படியே ஒரு பித்தலாட்டக்காரன் பிடிபட்டு, தண்டிக்கப்பட்டாலும் கூட, அவன் அந்தப் பணத்தை ஏற்கனவே செலவழித்திருப்பான். அல்லது ஒளித்து வைத்திருப்பான். பாதிக்கப்பட்டவர் பெரும்பாலும் பணத்தைத் திரும்பப் பெறுவது அபூர்வமே.

ஜி.சுகந்தி,
சாவகச்சேரி.

சுருங்கச் சொன்னால், உங்களை யாரேனும் மோசடி செய்திருந்தால், போன பணம் போனதுதான். திரும்பக் கிடைப்பது கஷ்டம். ஆகவே ஏமாந்து போய் பணத்தைத் தொலைத்துவிட்டு பிறகு மறுபடியும் அதைத் தேடி அலைந்து கொண்டிருப்பதைவிட ஏமாறாமல் முன் ஜாக்கிரதையுடன் இருப்பதே சிறந்த கொள்கை.

மோசடி செய்யப்படுவது ஒவ் வொரு வருடமும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மோசடிக்கு ஆளான பலியாடுகள் பணத்தை இழந்து விடுவதுபோக, பெரும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு ஆளாகிறார்கள்; நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகக் கருதிய ஒருவராலேயே நம்பிக்கைத் துரோகம் செய்யப்பட்டதை எண்ணி அவர்களது மனம் வலியால் துடிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யு.கே விசாவுக்கான ஆங்கிலம்.

**ESOL (L1-L5)**
( European Framework)

புதிய சட்ட விதிகளின்படி ,இங்கிலாந்தின் குடியுரிமை சார்ந்த விசா விண்ணப்பதாரிகளுக்கு ஆங்கில அறிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் இங்கிலாந்தினால் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்படும் ESOL சான்றிதழ் கோரப்படுகிறது.

தனிப்பட்ட மேற்படி வகுப்புக்களுக்கும் பரீட்சைக்கும்
யாழ்ப்பாணத்தில் அங்கிகரிக்கப்பட் நிறுவனம்
Obtain English Education & Qualification
(Approved by UK Border Agency)

நொலிட்ஜ் யூனிவேர்ஸ்
இலக்கம் 75 கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
விபரங்களுக்கு 0776458253


## வயலில் மயங்கி விழுந்து குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச். 06

தென்மராட்சி தெற்குதணங்கிளப்பு வயலில் நெல் அறுவடை செய்து கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி விழுந்து மரணமானார்.

நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த சுப்பையா சுப்பிரமணியம் (வயது-58) என்பவரே மரணமானவராவார்.

(த-207)

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லத்துரை சற்குணதேவி

துவாளி வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சற்குணதேவி நேற்று (05.03.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் செல்லத்துரையின் அன்பு மனைவியும் சுதர்சன், கோபிநாத், வசீகரன், ஜினோத்ததாஸ் (இந்திரன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்சினி, நவீனா, துஷிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சர்மிலன், பிரித்தி, நிலக்ஷன், விசாலி, கிருஷானி, அபிஷானி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சற்குணராசா, துரைராசா, செல்வமணி, கமலாதேவி, ரஞ்சிதமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 021 226 3362
021 321 8586

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி பொன்னம்மா கிருஷ்ணசாமிக் குருக்கள்



ஊரெழு மேற்கு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கிருஷ்ணசாமிக் குருக்களின் அன்புத் துணைவியாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சைவாலய முன்னேற்றக் கழகம்.
ஊரெழு

(1110)


பிரத்தியேக வகுப்புகள்

*தரம் 8 - 11 வரை*
**கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்**
G.C.E (A/L)
*அரசியல், வணிகக்கல்வி*
தனிப்பட்ட ரீதியாகவோ,
குழுக்களாகவோ கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- T.P0750497577



விற்பனை பிரதிநிதி வட பிராந்தியம்

மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்து வினியோகம் செய்வதில் முன்னோடியாகிய நாம் தகுதி வாய்ந்த விற்பனை பிரதிநிதிக்கு எம்முடன் இணைந்து செயலாற்ற அழைக்கின்றோம்.

தகைமைகள்:
★சிறந்த கல்வித் தகைமைகள்
★சிறந்த தொடர்பாடல் தகைமை
★சொந்தமாக மோட்டார் உந்துருளி உடையவர்
★யாழ்.மாவட்டத்தில் நிரந்தர வசிப்பாளர்
★மோட்டார் வாகன உதிரிப்பாக தேர்ச்சி பெற்றவர் அல்லது விற்பனை அனுபவம் உடையவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
★வயது 20-45 வரை

உடனடியாக விண்ணப்பிக்கவும். தெரிவுசெய்யப்படுபவர்க்கு சிறந்த கொடுப்பனவுகள் காத்திருக்கிறது.

விளம்பரதாரர்: 223, ஹில் வீதி, தெஹிவளை.
email-usm@usmotor1.com (48,27)


## கண்ணீர் அஞ்சலி



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீன கர்த்தாவும்
பிரதம குருக்களுமாகிய

### மகாராஜஸ்ரீ து.சண்முகநாதகுருக்கள்

அவர்கள் இறைபதமெய்தியதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா மாவை முருகப் பெருமானின் பாதங்களில் சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவைக் கந்தன் அன்னதான சபை,
காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை
ஊழியர்கள்.

## துயர் பகிர்கின்றோம்



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும் இந்து இளைஞர் சங்க உறுப்பினர்களுக்கும் ஆரம்பத்தில் இருந்து ஆலோசனைகளும் ஆசிகளும் வழங்கிய பெருமைக்கும் பெருமதிப்பிற்குமுரிய

### மஹாராஜஸ்ரீ
### து.சண்முகநாதக்குருக்கள்

அவர்கள் மாவைக் கந்தன் கழலடி சேர்ந்தார் என்ற செய்தி கேட்டு கலங்கும் நாங்கள் அன்னாரின் குடும்பத்தாரின் துயரிலும் பங்குகொண்டு அவரின் சாந்திக்காகத் துர்க்கா தேவியைப் பிராத்திக்கின்றோம்.

தெல்லிப்பழை
இந்து இளைஞர் சங்கம்

## மரண அறிவித்தல்

### கந்தசாமி மகேஸ்வரி



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மகேஸ்வரி 05.03.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், செல்வராஜா, ஜெயராஜா, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெகதாம்பாள், பமிலா, காலஞ்சென்ற கிருஷ்ணசாமி ஆகியோரின் அன்பு மாமியாரும் அஸ்வினி, சிவாஜினி, நிஷாலினி, பிரியங்கா, வதனா, ரமேஷ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் செம்மணி இந்து மாயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.
(1105)

தகவல்:
குடும்பத்தினர்.


மலேசியா

தமிழ் பேசும் பெண்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு
மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 28,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் - முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
GOODLINE MANPOWER SERVICES
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592



கார் விற்பனைக்கு

16 - இலக்கமுடைய TOYOTA CARINA கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0770870728



யப்பானில் விற்பனையாகும் முதல்தர
'நோட்புக்' தற்பொழுது இலங்கையில்...
FUJITSU

நீங்கள் தரத்தில் அக்கறையுடையவர்களாயின்
பின்வருவன பற்றிச் சிந்தியுங்கள்



LIFEBOOK LH530 (336B / 337R)
* Intel Core i3-370M Processor (2.40GHz, 3Mb Cache, 1066MHZ)
* 2GB DDR3 1066MHz
* 320Gb HDD
* 14 inch SuperFine HD back-light LED
* 1.3 Mega Pixel camera
* Dual Layer DVD Super Multi Writer
* Intel® HD Graphic
* Bluetooth®v2.1+EDR
* 100/10Mbps Ethernet PCI Express®
* WLAN 802.11BGN
* Card Reader
* 6 cell Li-Ion 4400mAh
* 1 Year International Warranty



LIFEBOOK A530
* Intel Core i3-370M Processor (2.40GHz, 3Mb Cache, 1066MHZ)
* 2GB DDR3 1066MHz
* 320Gb HDD
* 15.6 inch SuperFine HD back-light LED
* 1.3 Mega Pixel camera
* Dual Layer DVD Super Multi Writer
* Bluetooth®v2.1+EDR
* 100/10Mbps Ethernet PCI Express®
* WLAN 802.11BGN
* Card Reader
* 6 cell Li-Ion 4400mAh
* 1 Year International Warranty

Superb Graphics — Enhanced with HD graphics card with 512MB VRAM.
Spill-resistant Keyboard — Complete peace of mind from accidental spills.
Instant Converged Communications — Communicate on-the-go with the built-in 1.3 Mega Pixel camera with dual built-in stereo microphones.

இலவசம் Carrying Case HSDPA Modem

LIFEBOOK | Built-In Confidence

Authorised Distributor: FUJITSU SALA
C LAP TECH SYSTEM
Mr.Achunthan - 0777745764
No 56, Kandasami Kovil Road, Vavuniya.

Sala Enterprises
Ms.Safra - 0772270003
No. 203, Castle Street Colombo - 08


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கிருந்து நஞ்சு வந்தது?



''பேப்பர் வாசிச்சனியோ?''

''இல்லை! ஏன்?''

''செல்போனில புளூ பிலிம் வச்சிருந்த ஆளைப் பொலிஸ் பிடிச்சிருக்காம்.''

''உது பெரிய புதினமோ? இப்ப உது தானே அடிக்கடி இஞ்ச நடக்குது.''

ஒரு பஸ்ஸில் நடந்த உரையாடல் இது. இந்த உரையாடலின் முடிவில் இந்தச் செய்தி ஒரு புதினமோ? எனக் கேட்ட நபர் ஓடும் பஸ்ஸிலேயே தனது 'செல்போனில்' இருந்த ஆபாச வீடியோக்களை அவசரமாக அழித்தது வேறுவிடயம்.

யாழ்ப்பாணம் இப்போது வீங்கிப் பெருத்துவிட்டது. முன்பெல்லாம் கொழும்புக்குச் சென்றுதான் செய்ய முடியும் என்ற பலகாரியங்களை இப்போது இங்கேயே செய்துவிட முடிகின்றது. எல்லா வங்கிகளும் தம் கிளைகளை பரப்பி விட்டன. சகல பொருள்களும் குவிந்து கிடக்கின்றன. குறிப்பாக தொழில் நுட்பம்சார் பொருள்களின் உள்நுழைவு யாழ்ப்பாணத்தில் மிகையாகிவிட்டது.

அதில் முதலிடம் வகிப்பது செல்போன்கள் (அலைபேசிகள்) தான். தனியே தொடர்பாடலுக்கு மட்டும் என்றிருந்த இந்த அலைபேசிகள் இப்போது ஒரு கணினி உள்ளடக்கியிருக்கக் கூடிய ளவுக்கு பல்வேறு வசதிகளைக் கொண்டவையாக மாறியிருக்கின்றன.

வீடியோ, கமரா, இன்ரநெற், மியூஸிக் பிளேயர் என பொழுது போக்குக்குரிய அத்தனை அம்சங்களும் இப்போது அலைபேசிகளுக்குள் அடக்கம்.

அண்மையில் நண்பன் ஒருவனுக்கு வெளிநாட்டில் இருந்து புதிய அலைபேசி ஒன்று உறவினரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதனை எல்லோருக்கும் காட்டி பெருமையடித்துக் கொண்டிருந்தான். கடைசியாக அவனின் போன் மகத்துவத்தைக் கேட்க அவனது தாத்தா வந்தார்.

''உதில அப்பிடி என்ன இருக்கெண்டு எல்லாருக்கும் காட்டிக் கொண்டிருக்கிறாய்?'' கிழவருக்கு இந்த அலைபேசிகளில் கதைப்பது மட்டுமே தெரிந்த விடயம். எனவே தன் விளக்கவுரையை இவன் ஆரம்பித்தான்.

''இதில 100 மீற்றருக்கு அங்கால உள்ளதைக் கூட கிளியராப் படம் எடுக்கலாம். இன்ரநெற்றும் படு ஸ்பீட். எவ்வளவு பாட்டுகளையும் டவுண்லோட் பண்ணிவைக்கலாம். ஏனெண்டால் இதின்ர 'கப்பாசிட்டி' மற்ற போன்களை விடவும் கூட. அதை விட இதில ரேடியோ இருக்கு. வீடியோ இருக்கு. அவ்வளவு ஏன் டோர்ச்லைற் கூட இருக்கு.....'' அவன் நீட்டி முழக்கிக்கொண்டே போக, தாத்தா இடைமறித்தார்.

''எல்லாம் சரியப்பு! ஒருக்கா உந்த போனில நான் சொல்ற நம்பருக்கு ஒரு 'கோல்' எடுத்துத் தாறியோ?''

தாத்தாவின் கேள்வியால் பேரன் சங்கடத்துடன் நெளிந்தான்

அது வந்து தாத்தா.......... கோல் எடுக்க போனில இப்ப காசு இல்லை. தாத்தாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

''கதைக்கிறதுக்குத் தானே போன். அதை விட்டிட்டு மற்ற எல்லாம் செய்யலாமெண்டா பிறகென்னத்துக்கு உதை? கொண்டுபோய் குப்பையில் எறி'' புறுபுறுத்தவாறே அங்கிருந்து நகர்ந்து விட்டார் அவர்.

இந்தச் சம்பவத்தில் நடந்ததைப் போன்றுதான் இப்போது பெரும்பாலானோர் அலைபேசியை ஒரு நகரும் தொடர்பாடல் சாதனம் என்ற நிலைக்கும் அப்பால் பிறதேவைகளுக்கே அதிகம் பயன்படுத்துகின்றனர்.

அதிலும் சமூகச்சீரழிவான விடயங்களுக்கே இது பயன்படுத்தப்படுவது இன்னும் அபாயகரமானது. அலைபேசி அளவில் சிறியது. எப்போதும் கூடவே எடுத்துச் செல்லலாம். தனிப்பட்ட பாவனைக்குரியது. அதிகளவான உள்ளடக்கும் திறனைக் கொண்டது. இவ்வளவும் போதாதா, பாலியல் வக்கிரங்களைத் தூண்டும் வீடியோக் காட்சிகளை அலைபேசியில் பத்திரப்படுத்தி வைப்பதற்கு? எனவேதான் எவ்விதப் பயமுமின்றி எங்கள் இளசுகள் தங்கள் அலைபேசிகளில் ஆபாசப் படங்களைச் சேமித்து வைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

முத்திரை சேகரித்தல் போன்று இப்போது இளசுகளிடையே இத்தகைய ஆபாசப் படங்களை விதவிதமாகச் சேகரிப்பதும் ஒரு பொழுதுபோக்காக மாறி விட்டது. ஒருவரிடம் மற்றவரிடம் இருக்கும் ஆபாசக்காட்சிகள் இல்லாவிட்டால் அதனை 'புளூடூத்' அல்லது 'எம்.எம்.எஸ்.' வழிமுறைகளூடாகத் தம் அலைபேசிக்கு தரவிறக்கம் செய்தால்தான் நம் காளையர்களுக்கு நித்திரையே வரும்.

தனியே இளைஞர்கள் மட்டும்தான் இந்தக் கைங்கரியத்தில் ஈடுபடுகிறார்கள் என்றில்லை. வயதானவர்கள் கூட வாயில் 'வீடீ[illegible] ஆபாசக் கா[illegible] அலைபேசிகளில் பார்த்து மகிழும் அளவுக்கு நிலைமை மலையேறிவிட்டது.

நம் இளம்பெண்கள் மட்டும் இந்த விடயத்தில் சளைத்தவர்களா என்ன? அண்மையில் ஒரு வீதி விபத்து. எதிரே வந்த வாகனத்தில் 'ஸ்கூட்டியில்' வந்த பெண்ணொருவர் மோதுண்டு , கீழே விழுந்து மயங்கிவிட்டார். கூட்டம் கூடிவிட்டது. மயங்கி விழுந்த யுவதியின் செல்போனைக் கண்டெடுத்தார் ஒரு நடுத்தர வயது நபர். அந்த செல்போனில் யுவதியின் வீட்டுக்குத் தொடர்பு கொண்டு, நடந்தவற்றை சொல்ல அவர் விழைந்தார். ஆனால் செல்போனைப் பற்றி அவருக்கு அவ்வளவாகப் பரிச்சயம் கிடையாது. ஏதோ ஒரு கைக்கணக்கில் அவர் செல்போன் 'கீபோர்ட்டை' அமுக்க , அது எதேதோ பைல்களைத் திறந்து, இறுதியில் செல்போன் திரையில் 'எல்லாம் திறந்த' காட்சிகள் ஓடத் தொடங்கின. நடுத்தர வயது மனிதருக்கு அதை நிறுத்தும் வழிகூடத்தெரியவில்லை. கடைசியாகப் போனின் 'பற்றரியைக்' கழற்றிய பின்னர்தான் அந்த ஆபாசக்காட்சியை அவரால் நிறுத்த முடிந்தது. சற்றுநேரத்தில் மயக்கத்தால் விழித்துக் கொண்ட யுவதி தன்னுடைய காயங்கள், மோட்டார் சைக்கிளுக்கு ஏற்பட்ட சேதங்கள் என்பவற்றைப் பற்றி சிறிதும் லட்சியம் செய்யாமல் என்ர போன் எங்க? என்றுதான் தேடியிருக்கிறார்.

முகத்தைச்சுளித்தபடி நடுத்தர வயது மனிதர் போனைக் கொடுத்ததும் அந்த பெண் சேதமடைந்த 'ஸ்கூட்டியை' ஒ[illegible] 'ஸ்டார்ட்' பண்ணியபடி அவ்வி[illegible]த்தை விட்டே அகன்றுவிட்டார். ஆண்களின் அலைபேசிகளில் மாத்திரமல்லாது சில பெண்களின் அலைபேசிகளிலும் வில்லங்கமான காட்சிகள் அடங்கிய வீடியோக்கள் ஒளிந்திருப்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இதைவிடப் பல பிரபலமான பாடசாலைகளில் இடைவேளைகளின் போதும், பாடங்கள் நடக்காத சந்தர்ப்பங்களின் போதும் இத்தகைய காட்சிகளை அலைபேசிகளில் மாணவர்கள் கும்பலாகக் கூடியிருந்து பார்ப்பதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய காட்சிகளைப் பார்ப்பதால் உண்டாகும் வக்கிர எண்ணங்களின் விளைவுகளே - பருத்தித்துறைக் கடற்கரையில் வெளிநாட்டு மருத்துவப்பெண் மீது கும்பலாக மேற்கொள்ளப்பட்ட பலாத்கார முயற்சிகள் போன்ற - விபரீதங்களை ஏற்படுத்துகின்றன.

இதைவிடச் சிலமாதங்களுக்கு முன்னர் ஒருபாடசாலையைச் சேர்ந்த மாணவனும், இன்னொரு பாடசாலையைச் சேர்ந்த மாணவியும் அந்தரங்கமாக இருந்த புகைப்படங்கள் இணையங்கள் வெளியாகி பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தன. அந்தப் புகைப்படங்கள் செல்போன் மூலமாகவே இவ்வாறு இணையத்தில் வெளியிடப்பட்டன. அதே போன்று இன்னொரு பாடசாலையில் - ஒருவருடத்துக்கு முன்னர் - காதலர்களான மாணவனும் மாணவியும் அந்தரங்கமாக இருந்த வீடியோக் காட்சிகள் செல்போன்களுக்கிடையே பரவலாகி , பெரும் பரபரப்பையும் அந்த மாணவர்களின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கியிருந்தது.

அலைபேசிகளில் ஆபாசப்படங்களை வைத்திருப்பவர்களைக் கைது செய்வதோ, அல்லது அவர்களுக்குத் தண்டனை வழங்குவதோ இத்தகைய செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவப்போவதில்லை. ஏனெனில் இப்போது ஒரு குடும்பத்துக்கு ஒரு அலைபேசி என்ற காலம் போய், ஒருவரே பல அலைபேசிகளுடன் திரியும் நிலை வந்துவிட்டது.

எனவே, அலைபேசியூடாகப் பரவலாகிவரும் ஆபாசக் காட்சிகளின் மூலவேர் எங்குள்ளது என்பதையே கண்டறிய வேண்டும். மூலவேரைக் கண்டறிந்து அதனைப் பிடுங்கிவிட்டால் ஓரளவுக்கேனும் இந்த ஆபாசக்கலாசாரத்திலிருந்து மீளலாம். ஆனால் மூலவேர் எவரும் நெருங்கமுடியாதளவுக்கு பயங்கரமானதாக இருந்தால் எவருமே எதுவுமே செய்யமுடியாதுதானே?

அலைபேசிகளில் உலாவரும் ஆபாசக் காட்சிகளைப் பார்த்திருந்தீர்களானால் அவற்றில் அநேகமானவை மிக அண்மையில் எடுக்கப்பட்டவையாக இருப்பதுடன், சிங்கள மொழி பேசுவோரே அந்தக் காட்சிகளில் தோன்றுகின்றனர்.

**ஔண்யன்**

மாலைவேளைகளில் படையினருடன் அளவளாவும் நம் இளைஞர்கள், சிங்கள மொழியிலான செல்போன் காட்சிகள் என்பவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் எங்கிருந்து நஞ்சு வருகின்றது என்பது புரிந்துவிடும்.

நம்முடைய சிந்தனைகளை மழுங்கடித்து பாலியல் வக்கிரங்களின் பக்கம் திசை திருப்பி, காலா காலத்துக்கும் சபிக்கப்பட்ட இனமாகவே மாற்றுவதற்கான வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமே இந்த செல்போன் ஆபாசக் காட்சிகளின் திருவிளையாடல்.

இந்து சமயத்தில் கடவுளை உணராமல் இருப்பதற்கு மாயை என்னும் மலம் தடை போடுவதாகக் கூறப்படுகின்றது. நம் இளையோரும் தம்முடைய இலக்கினை நோக்கி நகரமுடியாமல் செல்போன் ஆபாசம் என்ற மாயைக்குள் வீழ்ந்து கிடக்கின்றனர். உண்மையை நம் இளசுகள் உணராவிட்டால் எப்போதுமே விலகமுடியாத இருளில் சிக்கிவிட நேரிடும்.

இருளா? ஒளியா? முடிவு எல்லோர் கைகளிலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பண்டிதர்,சைவப்புலவர், வித்துவான்
குமாரசுவாமி கந்தையா வயிரவப்பிள்ளை
இலங்கை பண்டிதர் சங்கத் தலைவர் (பண்டிதர் கு.க. வயிரவனார்)
அவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

புற்றலைச் சித்திவினாயகர் ஆலய தர்மகத்தா சபைத் தலைவர் "சிவ சிவ" எனச் சிவனையே நினைத்திருந்து சூரிய, சந்திர, அக்கினி தேவர்களை சாட்சிவைத்து பூவுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து சிவபதம் அடைந்த எந்தையே இந்நாளில் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்திக்கின்றோம்.

புற்றளை,
புலோலி.
(108625)

குடும்பத்தினர்.

## Micro Construction (Pvt) Ltd.
## a subsidiary of Micro cars Ltd.

கீழ்க் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடம் உள்ளது. உரிய தகுதி உடையவர்கள் தங்களுடைய விண்ணப்பம் மற்றும் உரிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் புதன், வியாழக்கிழமை (09.03.2011, 10.03.2011) மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரை நேர்முகத் தேர்வுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு சமுகமளிக்கவும்.

**1. QualityAssurance Engineer**
(தரக்கட்டுப்பாட்டு பொறியியலாளர்)
தகைமை :- B.Sc (Eng) or N.D.T (Civil)
அனுபவம் :- கட்டட பொறியியலில் தரக் கட்டுப்பாட்டு முன் அனுபவம் (Quality Assurance)
மேலதிக தகைமை :- கணினி அனுபவம் (MS Project for Planning, Cost Control)

**02. Quantity Surveyor**
தகைமை :- B.Sc (Quantity Surveyor) or NDT
அனுபவம் :- குறைந்தது 05 வருட முன் அனுபவம்

**03. Technical officer (Building)**
தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டடம்)
தகைமை :- NDT (Civil)
அனுபவம் :- குறைந்தது 7வருட முன் அனுபவம் கட்டடத் துறை சார்ந்த தொழிலில் (RCC Building Construction and finish work)

**Manager,**
*Micro Constructions (Pvt) Ltd.*
425/15, Thimbirigasyaya Road,
Colombo - 05, T.P: 0112 555214 - 6 (48,27)

## வீட்டுடன் காணி தேவை

வீட்டுடன் கூடிய காணி வாடகைக்குத் தேவை.
இடம்: திருநெல்வேலி, பலாலி வீதிக்கு அண்மையில் அமைந்திருத்தல் நல்லது.

தொடர்பு: Ms. V. Thanishka
இல- 125, சென் மைக்கல் வீதி ,கொழும்பு. 03.
தொலைபேசி இல: 011-2323105. பக்ஸ் 011-4611081
email: trade@biopowerlanka.com

## உடனடி விற்பனைக்கு

DJ SOUND SYSTEM,
BEEMAAMP (USA) MAX BOX,
0777915224

## வீடு விற்பனைக்கு

தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கில் அமைதியான சூழலில் 4 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் நிறைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0773604712, 021 5672567.

## வீடு வாடகைக்கு

ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் 12 அறைகள், 2 சமையல் அறைகள், 3 குளியலறைகள் கொண்ட வீடு வாடகைக் குண்டு பொது நிறுவனங்களுக்கு உகந்தது.
தொடர்பு:- 0776255826

## இதய அஞ்சலி



மாவைக் கந்தசுவாமி
கோயில்
ஆதீனகர்த்தா
மஹாராஜஸ்ரீ
ஷண்முகநாதக்
குருக்கள்
அவர்களுடைய
ஆத்மா மாவைக்கந்தன் திருவடி நிழலில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பேராசிரியர் கைலாஸநாதக்குருக்கள்
ஞாபகார்த்தசபை நியந்த்ரீ,
சிவன் கோயில், நல்லூர்

## மரண அறிவித்தல்

### சுப்பையா சுப்பிரமணியம்

மீசாலை கிழக்கைச் சேர்ந்த சுப்பையா சுப்பிரமணியம் நேற்று (05.03.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் சுபாஸ்கரனின் (கஜன் றேடர்ஸ்) அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (05.03.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்லாரை பொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு, மீசாலை.* *தகவல்:* மனைவி.

## இதய அஞ்சலி




மாவை ஆதீன குரு முதல்வரும்
துர்க்காதேவி தேவஸ்தானத்தின்
விதிமுறைகளை நெறிப்படுத்தியவரும்
தமிழ்வேந்தர் கால குரு பரம்பரையில்
இன்றைய பிதாமகனுமாகிய
மகாராஜஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள்
அவர்களின் பிரிவு குறித்து எமது
இதயபூர்வமான அஞ்சலிகளைச்
சமர்ப்பிக்கின்றோம்.
அன்னாரது ஆத்மா சாந்தி பெற
எல்லாம் வல்ல துர்க்காதேவியைப்
பிரார்த்திக்கின்றோம்.

*நிர்வாக சபை,*
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(சி/575430)(31)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் ஆங்கில
ஆசானும் கல்லூரியின் வளர்ச்சியில்
இன்றுவரை மிகுந்த ஈடுபாட்டுடனும்
அக்கறையுடனும்
செயற்பட்டுவந்தவரான
**சுப்பையா மனோகரன்**
அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி
கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம்.
அன்னாரது ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திப்பதோடு, குடும்பத்தவரது
துயரிலும் பங்கேற்றுக் கொள்கின்றோம்.

யா/நெல்லியடி மத்திய மகா
வித்தியாலயம்,
நெல்லியடி, கரவெட்டி.

அதிபர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள்.

(சி/575422)(31)

# கண்ணீர் அஞ்சலி



திருமதி
வீரசிங்கம்
இராசமணி

நேசித்த நெஞ்சமெல்லாம்
நிறை துயருக்கானதுவோ
இன்முறுவல் காட்டி இனிமையாய்ப் பேசும்
புன்னகைப் பூக்கள் உதிர்ந்தனவோ
நெஞ்சம் கலங்குதம்மா கண்ணீர் மல்குதம்மா
வஞ்சித்த காலனவன் வானுலகுக் கழைத்தானோ
பண்பான உம் வார்த்தை என்று நாம்
இனிக் காண்போம்

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தி னருக்கு ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

சிறி நதியா ஸ்தாபனத்தார்.

# மரண அறிவித்தல்

## நவரத்தினம் சண்முகராசா



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் சண்முகராசா நேற்று முன்தினம் (04.03.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினபூபதி மற்றும் வேதநாயகி ஆகியோரின் அன்புக் கணவரும் பாலாம்பிகை, சிறிஸ்கந்தராசா, இராஜேஸ்வரி, தவயோகராசா (ஜேர்மனி), செல்வமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் பாஸ்கரன் (லண்டன்), சுதாகரன் (ஜேர்மனி), ஐங்கரன் (கனடா), வசீகரன் (உருத்திரபுரம்), சசிகரன் (உருத்திரபுரம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாருமதி, சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனும் மாதுரி, பைரவி, சுருதிகா, பகலவன், பாவலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2011) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19 V, D 10
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

(சி/575916)(31)

*தகவல்:*
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இட ஒதுக்கீடு முடிந்து விட்டது. காங்கிரஸ் கட்சியுடனான பேச்சு மட்டுமே இழுபட்டு வந்தது. காங்கிரஸ் ஐவர் குழு மற்றும் தி.மு.க. குழுவினர் இடையே, மூன்று சுற்று பேச்சு நடந்த பின், 60 தொகுதிகளை விட்டுக்கொடுக்க தி.மு.க., ஒப்புக் கொண்டது. முதலில் அதற்குச் சம்மதம் தெரிவித்த காங்கிரஸ், பின்னர் முடிவை மாற்றி, 63 தொகுதி வேண்டும் என, அடம் பிடித்தது. மேலும், அந்த 63 தொகுதிகளும் தாங்கள் கேட்கும் தொகுதிகளாக இருக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது.

காங்கிரஸின் இந்த நிபந்தனைகளை தி.மு.க.,மேலிடம் விரும்பவில்லை. பொறுமை காத்து வந்த தி.மு.க., தலைவர் கருணாநிதி, நேற்று முன்தினம் நள்ளிரவில், கண்டிப்புடன் கூடிய அறிக்கை ஒன்றை வெளியிட்டார். "காங்கிரஸ் தரப்பினர் கோருவது நியாயமானதா?'' என்று கேள்வி எழுப்பி, ''தி.மு.க., உயர்மட்ட செயல்திட்டக் குழு கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்கப்படும்'' என்றும் அறிவித்தார். இதனால், தி.மு.க., - காங்கிரஸ் இடையேயான கூட்டணி தொடருமா அல்லது முறியுமா என்ற பரபரப்பான சூழ்நிலை உருவானது.

இந்தத் தருணத்தில், நேற்று முற்பகலில், டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, ''அரசியல் ரீதியான எங்களின் உறவுகளில் சில நேரங்களில், பிரச்சினைகள் ஏற்படும். பிரச்சினையை உருவாக்கும் திறமையும், அதேநேரத்தில், அதை தீர்க்கும் திறமையும் எங்களுக்கு உண்டு'' என்றார்.

இந்நிலையில், நேற்று மாலை, சென்னை தி.மு.க., தலைமையகத்தில் நடந்த அக்கட்சியின் உயர்நிலை செயல்திட்டக் குழு கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உட்படச் சிலரை, தி.மு.க., தலைவர்கள் கடுமையாக விமர்சித்தனர். காங்கிரஸின் பிடிவாதப் போக்கிற்குக் கடும்கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக அனல் பறக்கும் விவாதங்கள் நடந்தன. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நடந்த இந்தக் கூட்டத்தில், மத்திய அரசிலிருந்து தி.மு.க. விலகுவது; பிரச்சினைகளின் அடிப்படையில் அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு தருவது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. தற்போது எடுத்த முடிவால் மத்திய அரசுக்கு பாதிப்பு ஏற்படாது. காரணம், பிரச்சினைகளின் அடிப்படையில் ஆதரவு தரப்படும் என்று தெரிவித்திருப்பதாலும், மாநில சட்டசபைத் தேர்தல் நடக்கவிருப்பதாலும், மத்திய அரசுக்குப் பாதிப்பு இருக்காது. தி.மு.கவுக்குத் தற்போது, 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். மத்திய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக இருவர் மற்றும் இணை அமைச்சர்களாக நான்கு பேரும் உள்ளனர். இனி, ஐ.மு.கூ., அணி பலம், 256 ஆக, லோக்சபாவில் இருக்கும்; பெரும்பான்மை என்பது, 273 இடங்கள்; இருந்த போதும், மத்திய அரசு சுலபமாக சமாளிக்கும்.

மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தி.மு.க., அமைச்சர்கள், நாளை டில்லி செல்கின்றனர். அங்கு, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து, தங்களின் ராஜினாமா கடிதங்களைக் கையளிக்கவுள்ளனர். தி.மு.க., சார்பில் மு.க.அழகிரி உட்பட இருவர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாகவும், நெப்போலியன், ஜெகத்ரட்சகன், பழனிமாணிக்கம், காந்திசெல்வன் ஆகியோர் இணை அமைச்சர்களாகவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 8 வயதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் குறித்துப் பொலிஸார் தெரிவித்ததாவது:-

சந்தேகநபர் கொலைக் குற்றங்கள் தொடர்பான வழக்கில் இரு தடவைகள் விளக்க மறியலில் வைக்கப்பட்டவர். அண்மையில்தான் அவர் பிணையில் வெளியே வந்திருந்தார். சம்பவம் இடம் பெற்ற நேற்றுமுன்தினம், நிறை மது போதையில் வீட்டுக்கு வந்த அவர், மனைவியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இதனை அடுத்து தனது ஒரு மகளை அழைத்துக் கொண்டு சந்தேகநபரின் மனைவி தனது தாய் வீட்டுக்குச் சென்றுள்ளார். அவர் வீட்டுக்குத் திரும்பிய போது, வீட்டில் இருந்த 8 வயது மகள் விம்மி விம்மி அழுதபடி தந்தைக்கு அருகில் இருந்து விசிறிக் கொண்டிருந்துள்ளார். மகளின் உடலில் இரத்தம் காணப்பட்டதை அடுத்து பதற்றப்பட்ட தாய் விடயம் என்னவென்று விசாரித்துள்ளார்.

அப்போதே தந்தை தன்னைப் பலாத்காரப்படுத்திய விடயத்தை மகள் தாயிடம் கூறியுள்ளார். விரைந்து செயற்பட்ட தாய் மகளை கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். அங்கிருந்து சிறுமி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தக் கொடூரத்தைப் புரிந்த தந்தை ஏற்கனவே இருவேறு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர். அதனால் இரண்டு தடவைகள் நீதிமன்றினால் விளக்க மறியலில் வைக்கப்பட்டவர்.

15 நாள்களுக்கு முன்னரே கொலை வழக்கு ஒன்றிலிருந்து அவர் பிணையில் வெளியே வந்திருந்தார். தன்னைப் பிடித்துக் கொடுத்தால் வெட்டி விடுவேன் என்று பெரிய வாள் ஒன்றைக் காட்டி அயலவர்களை மிரட்டி விட்டுத் தலைமறைவாகி விட்டார். அவரைக் கைது செய்வதற்காகத் தேடுதல்களை முடுக்கி விட்டுள்ளோம் - என்றனர் பொலிஸார். எனினும் நேற்று மாலை வரை அந்த நபர் கைது செய்யப்படவில்லை. (உ-14)

# ஈழத்தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்ரோபர் மாதம் தொடக்கம் இதுவரையிலும் பின்டான் எனும் இடத்தில் டான் ஜங் பினாங்க் எனும் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தம்மை விடுதலை செய்யுமாறு கோரி கடந்த காலத்தில் அவர்கள் பல தடவைகள் பல்வேறு கோரிக்கைகள் மற்றும் போராட்டங்களையும் நடத்தியிருந்தனர்.

ஆஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூட், இந்தோனேஷிய ஜனாதிபதி சுசில பம்பாங் யுதானோவுடன் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து அந்த இலங்கைத் தமிழர்களை அகதிகளாக ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளார். அதனையடுத்து அவர்களை விடுவிக்க இந்தோனேஷிய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. (ஒ-ம)

# சேந்தாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினர் அனுமதி மறுத்திருந்தனர். இருப்பினும் நாளை திங்கட்கிழமை முதல் இப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட அந்தப் பகுதியில் 80 குடும்பங்கள் மீளக்குடியமர உள்ளன என்றும் இதன் மூலம் கடற் றொழிலாளர்கள் பலர் நன்மையடையவுள்ளனர் என்றும் வலி.வடக்குப் பிரதேச வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-9)

# மாவிட்டபுரம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 11 மணிக்கு கீரிமலை தீர்த்தக் கேணிக்கு அருகில் இடம்பெறவுள்ளன. குருக்களின் இறுதிக்கிரியைகளில் மக்கள் கலந்துகொள்ள வசதியாக இலவச பஸ் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 8 மணி முதல் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இருந்து கீரிமைலைக்கு இலவச பஸ் சேவை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த)




# கண்ணீர் அஞ்சலி



திருமதி
வீரசிங்கம்
இராசமணி

பாசத்தின் திருவுருவாய்
அன்பின் அணையா விளக்காய்
பண்பின் சிகரமாய்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்திருக்கின்ற
பாச உறவே!
துடித்துப் போகிறது
எம்மனங்கள் உன் பிரிவை எண்ணி...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சுப்பஸோ உரிமையாளரும் ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

# ஆகம விதிகளை அப்பழுக்கின்றி நிறைவேற்றிய மாவை ஆதீனகர்த்தா

செந்தண்மை பூண்டொழுகும் சிவாச்சாரியார்களின் வழித் தோன்றலாகிய மாவை ஆதீனகர்த்தாவாக விளங்கியவர் மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாத குருக்கள் ஐயா அவர்கள். சிவஸ்ரீ சு.துரைச்சாமிக் குருக்களுக்கும் நாராயணி அம்மையாருக்கும் சிரேஷ்ட புத்திரராக 07.05.1927இல் பிறந்தவர். கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, வீமன்காமம் ஆங்கில வித்தியாசாலை, திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி என்பவற்றில் கல்வி கற்றவர்.

சமயக் கிரியைகளைச் சிறு வழுத்தானும் இன்றிச் செய்வதில் வல்லவர். அதேபோன்று ஆகம விதிகளை அப்பழுக்கின்றி நிறைவேற்றுவதில் மிகுந்த ஆற்றல் கொண்டவர். தமது தள்ளாத வயதிலும் பிரதான பூசைகளை நடத்தியவர்.

சமய சாஸ்திரங்களில் நிறைந்த அறிவும் ஆற்றலும் கொண்டவர். தமக்குச் சரியெனப் பட்டதை நேருக்கு நேர் எவருடனும் விவாதித்து வெல்லும் வல்லமை அவரது தனித்திறமை.

ஒரு சந்தர்ப்பத்தில் படைப் பிரதானி ஒருவர் சமயக் குருமாருக்குத் தமது பணியகத்தில் கூட்டம் ஒன்றில் நடத்திய பிரதானி வருகை தந்தபோது எழுந்து நிற்காமல் குருமாருக்கு உரிய தனித்துவத்தைப் பேணியவர். எழுந்து நின்று மரியாதை செய்தவர்கள் ஏன் அவ்வாறு செய்தீர்கள் என்று கேட்டதற்கு ''நாங்கள் மதகுருமார்கள், அவர்கள் தான் எங்களுக்கு மரியாதை செய்யவேண்டும்'' என்றார்.

முருக பக்தியுடன் தன்னலமற்ற அரும் பணிகளை ஆற்றியவர். 1950ஆம் ஆண்டு ஐப்பசியில் கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் ஐயாவின் தவப் புதல்வியான நகுலேஸ்வரியைத் திருமணம் செய்துகொண்டார்.

### அபிமானி

ஹற்றன் மாணிக்கப் பிள்ளையார் கோவில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் என்பவற்றின் கும்பாபிஷேக நிகழ்வுகளைச் சிறப்புடன் செய்த பெருமை அவருக்குண்டு.

1976ஆம் ஆண்டு மார்கழி மாதம் தொடக்கம் 35 வருடங்களாக மாவை ஆதீனப் பொறுப்பை ஏற்று ஆதீனத்தை இதுவரை சிறப்பாக நடத்திவந்த பெருமை அவ ருக்குரியது. பெரும் பெரும் சிவாச்சாரியார்கள் மத்தியில் பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் அவர்களால் சிவாகம வித்தியா பூஷணம் என்ற கௌரவப் பட்டம் வழங்கி வாழ்த்தப்பட்டவர். இந்து கலாசார அமைச்சு 'விவேக சூடாமணி' என்ற பட்டம் வழங்கி அவரைக் கௌரவித்தது.

மாவை முருகப்பெருமானுக்கு நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறவும், மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை அடியார்கள் தரிசிக்கவும் மாவை முருகனை அனுதினமும் பிரார்த்தித்து வந்த குருக்கள் ஐயா அவர்களின் மறைவு தமிழ்ச் சைவப் பேருலகுக்குப் பேரிழப்பாகும்.

### காயத்திரி பீட குருகுல அதிபர்

இணுவில் காயத்திரிபீட குருகுல பீடத்தின் முதல்வர் மகாதேவக் குருக்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் -

மகாராஜஸ்ரீ என்ற பட்டத்துக்கு ஏற்ப தன் வாழ்நாள் முழுவதும் ஒரு மகாராஜாவுக்குரிய அதிகாரங்களோடு மாவை ஆதீனத்தை பரிபாலித்து வந்தவர் மகாராஜஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள்.

சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் மூன்று பாஷை களிலும் விற்பன்னராகத் திகழ்ந்த குருக்கள் ஐயா அவர்களுடைய ஆங்கில அறிவை ஸ்ரீலங்காவின் மந்திரிமார்கள், பாதுகாப்புப்படைத் தலைவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். வயது முதிர்ந்த நிலையிலும் தன் கடமையைத் தவறாது செய்து காட்டியவர். அவரை முருகன் தன் திருவடிகளில் சேர்த்துக்கொண்டாலும் அவர் தம் பெருமை என்றும் அழியாது நிலைத்து நிற்கும் - என்றுள்ளது.



### செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் -

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தப் பெருமானின் பிரதமகுருவும், தமிழ் வேதாந்த கால இராச குரு பரம்பரையின் தலைமகனுமாகிய மகாராஜஸ்ரீ து.சண்முகநாதக் குருக்களின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகிறோம்.

ஆகம விற்பன்னராகவும், ஆளுமை மிக்க சிவாச்சாரிய தலைமகனாகவும் விளங்கிய இப்பெருந்தகையின் இடத்தை யாரும் நிரப்பமுடியாது. மும்மொழிப் பாண்டித்தியத்துடன் எவருக்கும் அஞ்சாத அறிஞனாக விளங்கியவர் இவர்.

போரின் அனர்த்தத்தினால் அழிந்துபோன மாவைக் கந்தன் திருக்கோயிலை மீளவும் கட்டியெழுப்புவதில் அல்லும் பகலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். நடமாடும் ஆத்மிகக் களஞ்சியமாக எம் மத்தியில் விளங்கியவர். திருக்கோயில் விதிமுறை தொடர்பான எந்த ஐயங்களையும் தெளிவுபடுத்தும் ஆற்றல் மிக்கவர்.

இப்பெருமகனாரின் இழப்பு சைவஉலகுக்குப் பேரிழப்பு என்பதில் ஐயமில்லை. குருக்கள் ஐயாவின் ஆத்மாவைக் கந்தன் திருவடியில் சாந்தி பெறப் பிரார்த்திப்பது சைவமக்களின் நன்றிக் கடனாகும் - என்றுள்ளது.

### இந்து சமயப் பேரவை

இந்துசமயப் பேரவையின் சார்பாக அதன் செயலாளர் சி.சக்திகிரீவன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் -

சைவத் தமிழ்ப் பேரறிஞரான மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்களின் மறைவு எமக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

சைவத்தமிழ் உலகில் வேதசிவாகம நூல்களைத் திரிபறக்கற்று, தெளிந்த சிந்தனையோடு வாழ்ந்த மஹாராஜஸ்ரீயின் மறைவு சைவ உலகில் பெரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

வலி.வடக்கு மக்களை மீளக்குடியமர்த்துவதில் மிகுந்த கரிசனையோடு செயற்பட்டுவந்த ஐயாவின் மறைவால் தமிழ்ச் சமூகமே சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கிறோம் - என்றுள்ளது.

### ஜனாதிபதியின் இணைப்பாளர்

ஜனாதிபதி இணைப்பாளர் ராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மாவின் அனுதாபச் செய்தியில்-

நெருக்கடியான காலகட்டத்தில் தனது இறைபணியையும், ஆலய பரிபாலனத்தையும் நிர்வாகம் செய்து இந்து மதத்துக்கும், அந்தண சமூகத்துக்கும் பெருமை சேர்த்த மூத்த இந்து குரு தனது 84 வயதில் மோட்ச பிராப்தி அடைந்தார்.

இப்பெருந்தகையின் மறைவினால் தமிழ்ச் சமூகம் துயரத்தில் மூழ்கியுள்ளது - என்றுள்ளது.

### இந்து சமய கலாசாரத் திணைக்களம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய ஆதீன கர்த்தாவும் சிறந்த வேதாகம சாஸ்திர விற்பன்னருமாகிய மஹாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக் குருக்கள் ஐயாவின் மறைவுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

## ஜி.சீ.ஈ. உயர்தர தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் விண்ணப்பம்

கொழும்பு,மார்ச்5

2011 ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளுக்கான தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, 21 வயதுக்கு உட்பட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மாகாணக் கல்வி அமைச்சில் இதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும், ஏனைய தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சைகள் திணைக்களத்துக்குச் சமுகமளிப்பதன் மூலமோ அல்லது, தபால் மூலமோ இதற்கான விண்ணப்பங்களை விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா

யாழ்ப்பாணம்,மார்ச் 6

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி விழா எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் புதன்கிழமை விசேட பூசைகளும் மாலை 4 மணிக்கு கற்பூரத் திருவிழாவும் இடம்பெறும். (ஓ-313)

## கொள்ளைச் சம்பவங்கள்: இருவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,மார்ச் 6

தென்மராட்சிப் பிரதேசத்தில் நீண்ட காலமாக பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இருவரை கொடிகாமம் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

கரவெட்டி மற்றும் புத்துவெட்டுவான் பகுதிகளைச் சேர்ந்த இருவரையும் பொலிஸார் நீதிமன்றின் உத்தரவின் பேரில் கண்காணித்து கைது செய்தனர்.

இந்த இருவரையும் நேற்று முன்தினம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கினை விசாரித்த நீதிவான் இருவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-207)

## வல்வெட்டித்துறை பஸ் நிலையம் நேற்றுத் திறப்பு

வடமராட்சி,மார்ச்6

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட வல்வெட்டித்துறை பஸ் நிலையத்தை பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில்துறை அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

கடந்த 2002ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த எம்.கே. சிவாஜிலிங்கத்தால் இந்த பஸ் நிலையத்திற்கான அடிக்கல் நடப்பட்டு தற்போது பணிகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இதேவேளை - நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 5 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட மீன்சந்தைக் கட்டடத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுத் திறந்து வைத்தார்.

இந்த இரண்டு நிகழ்வுகளிலும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளர் திருமதி வி.சந்திரயோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுகளில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி பங்குபற்றுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-9-236-319)

# குடாநாட்டில் 8 இடங்களில் மீன் ஏல விற்பனை நிலையங்கள்

## 'ஜெய்க்கா'வின் இத்திட்டத்துக்கு சில பகுதிகளில் தடங்கல்

யாழ்ப்பாணம்,மார்ச்.6

'ஜெய்க்கா' நிறுவனம் யாழ் மாவட்டத்தில் எட்டு இடங்களில் மீன் ஏல விற்பனை நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. எனினும் உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றின் செயற்பாட்டால் மூன்று இடங்களில் அதனை அமைப்பதை அந்த [illegible] கைவிட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.

கற்கோவளம்,மண்டைதீவு, புங்குடுதீவு,கச்சாய், மறவன்புலோ, கொழும்புத்துறை, வல்வை ஆதிகோவிலடி, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் மீன் ஏல விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு 'ஜெய்க்கா' நிறுவனம் நடவடிக்கை எடுத்தது.

இந்த நிறுவனத்தின் திட்ட [illegible] விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு அவை அந்தந்தப் பகுதிகளிலுள்ள கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களிடம் கையளிப்பது நடைமுறையாகும்.

ஆனால் கொழும்புத்துறை, அல்லைப்பிட்டி, ஆதிகோவிலடிப் பகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அமைக்கப்படும் நிலையங்களை தம்மிடம் கையளிக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறியுள்ளன.

திட்ட நடைமுறைக்கு முரணாக உள்ளூராட்சி மன்றங்களின் கோரிக்கை உள்ளதன் காரணமாக 'ஜெய்க்கா' நிறுவனம் அந்த இடங்களில் மீன் ஏல விற்பனை நிலையங்களை அமைப்பதைக் கைவிட்டு விட்டது. ஏனைய ஐந்து இடங்களிலும் இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளன. சேவாலங்கா நிறுவனம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்திலும் வடக்கு கிழக்கிலும் தமிழ்க் கூட்டமைப்புகளை ஆதரியுங்கள்

## வேலணை வேணியன் வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 6

மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தில் ஏணி, மீன் சின்னங்களில் போட்டியிடும் மலையகத் தமிழ்க் கூட்டமைப்பையும், வடக்குக் கிழக்கில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் தமிழ் மக்கள் உறுதியாக ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் வேலணை வேணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார். தனது வேண்டுகோளில் வேலணை வேணியன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மார்ச் 17 ஆம் திகதி நடைபெறப் போகும் தேர்தல், தேசிய பொதுத் தேர்தல் அல்ல. ஆனாலும் இன்றைய காலகட்டத்தில் இத்தேர்தல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக எதிர்பார்க்கப்படுகின்றது. போருக்குப் பின்னரான இன்றைய காலகட்டத்தில் நாடு முழுவதும் வாழ்கின்ற தமிழ் மக்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்தும்போக்கையே இரண்டு பிரதான பெரும்பான்மைக் கட்சிகளும் முன்னெடுக்கின்றன. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து விட்டதால், எந்தவித அரசியல் மற்றும் சமூக - பொருளாதாரத் தீர்வுகளையும் தமிழ் மக்களுக்கு வழங்காமல் தட்டிக்கழித்து விடும் கொள்கையையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கடைப்பிடிக்கின்றன. கடந்த காலங்களில் கண்களை மூடிக்கொண்டு யுத்தத்தை ஆதரித்த ஜே.வி.பியும், இந்த அடிப்படையிலேயே இன்று தமிழ் மக்களைப் பற்றிப் பேசுகின்றது.

எனவே இக் கட்சிகளில் நேரடியாகப் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களை ஆதரிப்பதால் தமிழ் மக்களுக்கு ஆகப் போவது எதுவும் இல்லை.மாறாக பெரும் பான்மைக் கட்சிகளுக்கும், பெரும்பாண்மைக் கட்சிகளை மறைமுகமாக ஆதரிக்கும் அணிகளுக்கும் வழங்கப்படும் தமிழ் மக்களின் வாக்குகள் பேரின வாதத்தையே பலப்படுத்தும்.

எனவே இன்றைய காலகட்டத்தில் வடக்குக், கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய அனைத்துத் தமிழர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களிலும் தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் போக்கை தமிழ் மக்கள் ஆதரித்துப் பலப்படுத்த வேண்டும். இந்த அடிப்படையில் வடக்குக் கிழக்கில் தேர்தல் நடைபெறும் நகர சபை மற்றும் பிரதேச சபைகளில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் உறுதியாக ஆதரிக்க வேண்டும். அதேபோல் நுவரெலியா மாவட்டத்தின் ஐந்து பிரதேச சபைகளிலும், இரண்டு நகர சபைகளிலும் ஏணி, மீன் சின்னங்களில் போட்டியிடும் மலையகத் தமிழ் கூட்டமைப்பு வேட்பாளர்களை நுவரெலியா மாவட்ட வாழ் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் நாடுமுழுக்க வாழும் தமிழ் மக்கள் ஒரே அரசியல் அணியில் அணி திரள்வதற்கான அடிப்படை உருவாகும். இதுவே தமிழ் மக்களின் தேசிய குரலாக ஒலித்திட வேண்டும் - என்றுள்ளது. (த)

# இன்றைய ஆட்டங்கள்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு யங்ஹென்றிசியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

*திருமகள் வி.க எதிர் சென்.மைக்கல் வி.க (பிற்பகல் 3.45 மணி)

*புத்தூர் கலைமதி வி.க எதிர் ஊரெழு றோயல் வி.க (மாலை 4.45 மணி) (த-23-86)

# மத்திய கிழக்கில் நிலவும் பதற்றமான நிலைமை இலங்கையரின் வேலைவாய்ப்புக்கு ஆபத்து

கொழும்பு, மார்ச் 6

மத்திய கிழக்கிலுள்ள பல நாடுகளிலும் தலைதூக்கியுள்ள அரசியல் குழப்பங்கள், மோதல் நிலைமைகள் மற்றும் பதற்றம் காரணமாக இலங்கையர்களின் வேலை வாய்ப்புகள் தொடர்பில் அபாயநிலை உருவாகியுள்ளதாகத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பெரும் எண்ணிக்கையான இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் திறந்து விடப்பட்டிருந்த லிபிய வேலைவாய்ப்புச் சந்தை அந்த நாட்டில் நிலவும் உள்நாட்டுக் கலவரங்கள், மோதல்கள் காரணமாக தற்போது முழுமையாக மூடப்பட்டு விட்டது.

லிபியாவில் வழமைநிலை திரும்பி மீண்டும் அங்கு இலங்கையர்கள் வேலை வாய்ப்புக்காகச் செல்ல முடியுமா என்பதில் சந்தேகம் நிலவுவதாக வெளிநாட்டு விவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையில் பதினைந்து லட்சம் பேர் வரையிலான இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிகின்றனர்.

மேலும் யேமன், இஸ்ரேல், எகிப்து, பஹ்ரேன், ஜோர்தான், ஓமான் ஆகிய நாடுகளிலும் கூட . உள்நாட்டு மோதல்கள் நிலவுவதோடு, எகிப்துக்கு இலங்கையர்களை அனுப்புவது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு பஹ்ரேனுக்கு வீட்டுப் பணிப்பெண்களை அனுப்புவதும்கூட தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சேவைப் பிரிவு தெரிவிக்கின்றது. (ஒ-22)

# அபகரித்த மோ.சைக்கிளுடன் மறுநாளே பொலிஸாரிடம் சிக்கினான் திருடன்

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை திருடிய மோட்டார் சைக்கிள் மறுநாளே ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் சிக்கியுள்ளது. அதனைச் செலுத்தி வந்த திருடனும் வசமாக மாட்டிக்கொண்டான்.

நேற்றுமுன்தினம் இரவு வெள்ளிக்கிழமை சாட்டி கடற்கரை வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஜான் பிரசன்னா தலைமையிலான குழுவினரிடமே திருடன் மாட்டிக் கொண்டான்.

இது தொர்டர்பாக மேலும் தெரியவருவதாவது:-

'மேட்' ரக மோட்டார் சைக்கிளில் இரவு வேளை சாட்டி வீதி வழியாக இருவர் உல்லாசமாகப் பயணித்துக்கொண்டிருந்தனர். அவ்வேளை அங்கு வீதியில் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இருவரையும் வழிமறித்தனர். அதில் ஒருவர் தப்பி ஓடி விட்டார் மற்றவர் சிக்கிக்கொண்டார்.

விசாரணைகளின் போது அது திருடப்பட்ட மோட்டார் சைக்கிளென்று தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து சந்தேக நபர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் திருமதி ஜோய் மகிழ்மகாதேவா சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-9-93)



# சந்தியடிச் சோமு

## தொண்டை இறுகும் தொண்டு நிறுவனங்கள்

அண்டைக்குச் சந்தி கூடுறதுக்குப் பிந்திப் போச்சு. கனகாலமா வெத்திலை போடேல்லயென்று போட்டு பத்து ரூபாய்க்கு ஒரு சரைய வாங்கி வெத்திலையைப் போட்டபடி, ''நான் நேற்று வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு மன அமைதிக்காகப் போனனான்'' எண்டு தொடங்க, ''ஏதோ புதினம் கொண்டு வந்திருக்கிறாய் போல?'' எண்டு வெத்திலைச் சாறைப் 'புளிச்'செண்டு துப்பினபடி கதிரண்ணை கேட்டார்.

''ஓமண்ணை, அங்க என்ர பழைய சினேகிதமொண்டைக் கண்டனான், மனுசன் குடும்பத்தில எல்லாக் குமருகளையும் கரை சேர்க்க நாரா தேஞ்சு உழைச்சு ஓஞ்சு இப்ப தனிக்கட்டையா நிக்குது. பென்சனுக்குப் பிறகு இருபது வருசமா தொண்டு தொண்டு என்று உடல் பொருள் ஆவி எல்லாத்தையும் மற்றவைக்காகவே செலவிட்டவர். இப்ப அத விட்டுட்டு கோயில் தொண்டு செய்யிறார். ஆங்கிலம் சிங்களம் எல்லாம் நல்ல தண்ணி பட்ட பாடம். எஞ்சினியரா மகாவலித் திட்டத்திலயும் வேலை செய்தவர்.''

மூச்சு வாங்கிறத்துக்காகக் கொஞ்சம் நிப்பாட்டினன். இப்ப எல்லாம் தொடர்ச்சியா கதைக்கேலாமல் கிடக்கு.

''என்ன சமூக சேவைய விட்டுட்டு கோயில் தொண்டுக்கு வெளிக்கிட்டிட்டியள்'' எண்டு அந்தாளிட்ட கதையக் குடுத்தன். ''ஓம் எந்தத் தொண்டில நிம்மதி கிடைக்குதோ அதைச் செய்து போட்டு சிவனே எண்டு கிடக்கிறதுதான் இந்தக் காலத்தில சரி வரும் பாருங்கோ. பெருமாளுக்குத் தொண்டு செய்யிறதில பெருத்த நிம்மதி கிடைக்குது. அதுதான் இதில இருக்கிறன்'' எண்டு மனிசன் பீடிகை போட்டுது.

''சமூக சேவை செய்யிறதுக்கு முன்னம் கோமாளிக் கூத்துக்களைப் பார்த்து புளுகப் பழக வேணும் பாருங்கோ. இப்ப தொண்டு எண்டதெல்லாம் வெறும் வாய் சவடலாப் போட்டுது பாருங்கோ. வெள்ளை வேட்டிக் கள்ளரெல்லாருக் கும் மாலை போடுறதுக்கும், முதுகு சொறியிறதுக்கும், ஜே.பி. பட்டம் வாங்கிறத்துக்குமெல்லோ தொண்டெண்டு திரியிறாங்கள்'' எண்டு அந்தாளுக்கு முன்னம் பொருமினார் நடேசண்ணை.

''நீங்கள் சொல்லுறதும் சரிதான் பாருங்கோ. இருந்தாலும் சில உண்மையான தொண்டு செய்தவையையும் பார்த்திருக்கிறன். அப்படியான ஓராள்தான் அந்த மனுசன்'' எண்டு நான் ஒரு விளக்க உரையாற்ற வேண்டியதாப் போச்சுது அங்க.

சண்டைக் காலத்தில சனத்தப் பாதுகாத்த பல தொண்டு நிறுவனங்களை மூடப்பண்ணுற அலுவலுகள் நடக்குது எண்டதுதான் என்ர சினேகிதம் சொன்ன முக்கியமான தகவல். அதச் சந்தியில நான் சொல்லப்போக கன விசயம் உடன வெளியால வந்திது.

''ஓம்! ஓம்! போன கிழமை சங்கக் கூட்டத்தில கேள்விப்பட்டனான் பி.ரி.எவ் அனுமதி எண்ட ஒண்டை வைச்சுக் கொண்டு திட்டங்களுக்கு அனுமதி குடுக்காமல் இழுத்தடிச்சு மாவட்டத்துக்கு வந்த பல திட்டங்களை நடக்காமல் பண்ணிப் போட்டாங்களாம்'' எண்டு கதைச்சவை எண்டார் கந்தையாண்ணை. ''இதுவரையில சனத்துக்கு வந்த பல கோடிகளை தந்திரமா தடுத்து நிப்பாட்டிப் போட்டாங்களாம் அது உங்களுக்குத் தெரியுமே? இதால மூன்று தசாப்தமா சனத்துக்கு சேவை செய்த பல உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் மூடுவிழாக் கொண்டாடுகிற நிலைமைக்கு வந்திட்டுதாம்'' எண்டார் அவர்.

''பல வெளிநாட்டு நிறுவனங்கள் சனத்தின்ர புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு காசு தர ரெடியா இருக்கினமாம் எண்டெல்லோ கேள்விப்பட்டன்'' எண்டார் கதிரண்ணை.

''அதுகளையும் தடுத்து நிறுத்துறதில வலு கவனமா இருக்கினமாம். இந்த விசயத்தை அம்மாட்டயும் அய்யாட்டையும் நிறுவனங்கள் தனித்தனியாவும் கூட்டாயும் போய் சொன்னவையாம். இதுக்காக தியட்டருக்குப் 'பைல்' தூக்கிக் களைச்சுப் போன நிறுவனங்களும் இருக்கிறதாக் கேள்வி'' எண்டு என்ர சினேகிதம் சொன்னதை நான் சொல்ல.

''இப்ப தியட்டரின்ர சொல்லொண்டும் அலரிமாளிகைப் பக்கம் எடுபடுகிறதில்லை எண்ட கதை சரிதான் போலக் கிடக்கு'' எண்டு உஷாராக்கினார் நடாண்ணை.

இத்தனைக்கும் ''கொழும்புக்கும் தியேட்டருக்கும் நாயா அலைஞ்சு பாடுபட்டுத் தொண்டு நிறுவனங்கள் அங்கொண்டும் இங்கொண்டுமா அனுமதி பெற்று ஏதாவது திட்டங்கள நிறைவேற்றினால் அதையும் தாங்கள்தான் செய்தனாங்கள் எண்டு காட்டுறத்துக்குத்தானாம் முன்னுக்கு நிக்கினம். சனத்துக்கு ஏதாவது கொடுக்கிறதெண்டு கேள்விப்பட்டால் அதைத் தாங்கள்தான் குடுத்தது எண்ட மாதிரிக் காட்டுறதுக்கு அம்மாவும் அய்யாவும் துடிச்சுக் கொண்டிருப்பினமாம்.'' என்ர சினேகிதம் இதுகளத்தான் என்ர காதில கிசுகிசுத்தவர்.

''உங்களுக்கு உள்நோக்கங்கள் விளங்காது'' எண்டபடி தொடங்கினார் நடாண்ணை. ''வெளிநாட்டு நிறுவனங்களுக்கு நெருக்கடி கொடுத்து அவயின்ர உள்ளூர் அலுவலகம் எல்லாத்தையும் மூட வைக்க வேணும் எண்டு மேலிடத்துக் கட்டளையாம். ஆனா அவயின்ர காசுகளை வறுகிறதுக்கும் ஒரு வழி வச்சிருக்கினமாம். அதென்ன தெரியுமே? தாங்களே உள்ளூர் நிறுவனங்களைப் புதுசா தொடக்குகினமாம். அதுக்கு வசதியா காலங்காலமா சனத்தை பாதுகாத்து வந்த உள்ளூர் நிறுவனங்களின்ர குரல் வளைய நெரிச்சு சாக்காட்டுற வேலை ஆரம்பச்சிருக்கினமாம். ஒவ்வொன்றா செத்துக் கொண்டிருக்கு எங்களுக்குத் தெரியாமல்'' எண்டு பெரு மூச்சு விட்டார் அவர்.

தியேட்டகாரரின்ர ''நான் எல்லாம் செய்து தருவன்'' எண்ட வீராவேச வாய் சவடால் ஒரு பக்கம் இருக்க மண்வாசனையுள்ள நிறுவனங்கள் நயவஞ்சகமா கொல்லப்படுகுதுகள். இதுல என்ன அநியாயமென்றால் யாழ்பாணத்தின்ர பேரில திட்டங்கள் எடுக்கிற தென்பகுதித் தொண்டு நிறுவனங்களுக்கு எந்தத் தடையும் இல்லையாம். ஆனா அவை எடுக்கிற காசு யாழ்ப்பாணத்துக்கு முழுமையா செலவழிக்கப்படுகிறதில்லை என்ற முணுமுணுப்பும் இருக்கு பாருங்கோ.

''அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கெண்ட மாதிரி எல்லாருமாச் சேர்ந்து குரலை உயர்த்தினா என்ன?'' எண்டார் கணேசண்ணை. ''இப்ப எல்லா இடத்திலயும் உரத்து ஒலிக்கிற குரலொண்டும் இல்லைத்தானே! இப்ப எல்லாம் குழையிற குரலுகள் தானே இருக்கு. அதுகளிட்ட இருந்து நீங்கள் சொல்லுற உரப்ப எதிர்பாக்க ஏலாதுதானே'' எண்டு நான் சொல்ல சந்தி ஏகமனதா தலையாட்டிச்சுப் பாருங்கோ!

உந்த ஜ.சி.ஆர்.சிகாரரே பெட்டி படுக்கைகளோட வெளிக்கிட்டாச்சாம் பிறகு இந்த உள்ளூர் அப்பாவிகள் எந்த மாத்திரம்?'' இது கதிரண்ணையின்ர வியாக்கியானம். ''ஓம்! ஓம்! அவங்கள் வன்னியில சனம் சாகேக்க அதத் தடுத்து நிறுத்த முடியாட்டியும். செத்ததையும் காயப்பட்டதையும் கணக்கெடுத்துக் கொண்டாவது இருந்தவங்கள். அதையும் செய்ய வேண்டாமெண்டு அடிச்சுக் கலைச்சுப் போட்டாங்கள். சும்மா சொல்லக் கூடாது அவங்கள் வீரர்தான்.'' எண்டு சொல்லிக் கொண்டு கதிரண்ணை வெளிக்கிட சந்தி கலைஞ்சுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் எதிர்காலச் செயற்பாடுகள், தற்போதைய சூழ்நிலையில் காணப்படும் மனித உரிமைப் பிரச்சினைகள், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றை ஆராய்வதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதிலேயே சிவில் சமூகப் பிரதிநிதிகள் தமது மனக் குமுறல்களைக் கொட்டித்தீர்த்தனர்

சட்டமூலத்தின் தேவை

மனித உரிமைகள் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்க வேண்டும் என்று வலியுறுத்தினார் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் ஆலோசகர் பரமநாதன். அவ்வாறு இயங்க வேண்டுமாயின் அதற்கான அதிகாரங்களை வழங்கும் வகையில் சட்டமூலம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

''மக்கள் சுதந்திரமாகத் தமது கருத்துக்களை பொது இடங்களில் முன்வைக்க வேண்டுமாயின் அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றை நீக்க வேண்டும்'' என்றார் அவர்.

காவலில் உள்ளோர் விடுதலை

சந்தேகத்தின் பேரில் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்றும் சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது.

இதற்கென விசேட நீதிக் குழு ஒன்றை அமைத்து காலவரையறை நிர்ணயித்து அரசு விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்றும் கேட்கப்பட்டது.

சுருக்கு நீக்கப்பட வேண்டும்

மனித உரிமைகள் குறித்துப் பேச வேண்டுமானால் எமது கழுத்தில் உள்ள சுருக்கு முதலில் நீக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.கேசவன்.

''எங்கும் இராணுவத் தலையீடு. இன்று ஜே.வி.பி. கூடப் பேசுமளவுக்கு யாழ்ப்பாணத்தில் இராணுவ நிர்வாகம் உள்ளது. இன்று அனைத்து அரச பணிகளிலும் இராணுவத் தலையீடு உள்ளது. இது தவிர்க்கப்பட வேண்டும். தற்போது சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்க முடியாத நிலையே உள்ளது'' - என்றார்.

இராணுவத்தினர் சிவில் சமூகச் செயற்பாடுகளில் தலையிடுவதன் காரணமாகப் நிதிக் கொடையாளர்கள் நிதி வழங்கப் பின்னிற்கின்றனர் என்பதையும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

முக்கிய விவரங்கள்

சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்ட முக்கிய விவரங்கள் வருமாறு:

* திடீரென ஏற்படும் இயற்கை அழிவுகளால் பாதிக்கப்படுபவர்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்குகிறார்கள். ஆனால், 30 வருடங்களாகப் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. உதவி வழங்குவதில் இப்படிப்பட்ட இருவேறு பார்வைகள் இருக்கக்கூடாது.
* யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் வாழ்வாதாரத் திட்டங்கள் அனைத்திலும் இராணுவத்தினரின் தலையீடு காணப்படுகின்றது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.
* தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்படுபவர்கள் திரும்பவும் கைது செய்யப்படுகிறார்கள். விசாரணை எல்லாம் முடித்துத்தானே அவர்களை விடுவித்தீர்கள்? பின்னர் ஏன் மீண்டும் கைது செய்கிறீர்கள்?
* யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் மக்களுக்கு அபிவிருத்தி கிடைக்கப் போகிறதா? அரசுக்கு அபிவிருத்தி கிடைக்கப் போகிறதா?
* இராணுவ முகாம்களை மூடுகிறோம் மக்கள் குடியிருப்புக்களை விட்டு வெளியேறுகின்றோம் என்று கூறுகிறார்கள். ஆனால் பின்னர் வேறொரு இடத்தில் முகாம் அமைக்கிறார்கள்.
* சிவில் சமூகப் பிரதிநிதிகள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாகவும் துணிவாகவும் முன்வைக்கக் கூடிய சூழல் இல்லை. இராணுவ மயப்படுத்தப்பட்ட நிர்வாக அலகுகளே இங்கு ஆதிக்கம் செலுத்துகின்றன.
* பொது நிகழ்வுகளில் படைத் தளபதியின் பிரசன்னம் காணப்படுகிறது. பாடசாலை நிகழ்வுகளுக்கு படை அதிகாரிகளை அழைக்கும்படி நிர்ப்பந்தம் கொடுக்கப்படுகிறது.
* யாழ்ப்பாணத்தில் நடந்த களவு, கொலைகள் என்பன திட்டமிட்டு உருவாக்கப்பட்டனவே தவிர தன்னிச்சையாக நடந்தவையல்ல. இன்று வரை தமிழர்கள் எதிரிகளாகவே பார்க்கப்படுகிறார்கள்.
* மீள்குடியமர்வு என்பது, மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லும் நிகழ்வு. ஆனால் அரசியல்வாதிகள் ஏதோ தாமே மக்களை புதிதாக அங்கு குடிவைக்கிறார்கள் என்பது போல் நடந்து கொள்கிறார்கள்.
* நீண்ட காலமாகத் தொடரும் கடல் பிரச்சினைக்கு இன்னும் முடிவில்லை. இந்திய மீனவர்களால் எமது மீனவர்கள் நாளாந்தம் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். இரு நாட்டு அரசுகளும் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்கின்றனவே தவிர, எதுவும் நடக்க வில்லை.
* இங்கு சட்டம் ஒழுங்கு எந்த நிலையில் உள்ளது? பொலிஸ் நிலையங்களுக்கு மக்கள் சென்றால் முறைப்பாட்டைப் பதிவு செய்வதற்கு முன்பாகவே தீர்ப்பு வழங்கப்பட்டு வழக்குத் திசை திருப்பப்படுகிறது. பதிவு செய்யாமலேயே பல முறைப்பாடுகள் தட்டிக் கழிக்கப்பட்டிருக்கின்றன. (உ-4)

## நிழல் அல்ல, நிஜம்!!!



சானியா பியூட்டி பலஸ்

இல-132-கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் (முத்திரைச் சந்தி அருகில்)

ஒரே வாரத்திலே...

* உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்பெற;
* முகப்பருக்கள், முகச்சுருக்கம், கரும்புள்ளிகள், கருவளையம், கழுத்துக் கருமை, உதட்டுக் கருமை நீக்கம் போன்றவற்றுக்கான சிகிச்சைகள்
* முடி உதிர்வு, இளநரை, பொடுகு போன்றவற்றுக்கான சிகிச்சைகள்
* உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்
* இடுப்பு மற்றும் வயிற்றுத்தசைகள் குறைவதற்கான சிகிச்சைகள்
* அழகுச் சிகிச்சைகள்
* மூலிகையிலான பேசியல்கள்

முற்பதிவுகளுக்கு
0774011129, 0777351954

(1102) (37)

இவை அனைத்தும் முற்றிலும் இயற்கை மூலிகைச் சிகிச்சைகள், பக்கவிளைவற்றவை

## மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் - மலேசியா
பிரதம குரு திரு.திருமதி சி.சந்தானகோபாலக் குருக்கள் - வைதேகி தம்பதியரின் ஏக புத்திரன்

### சிரஞ்சீவி ஷைலேந்திர சர்மா

அவர்களுக்கு இன்று (06.03.2011) இல் மலேசியாவின் சிரம்பான் ராசா ஜெயா ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற உள்ள உபநயன பிரம்மோபதேச விழாவினையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைவதுடன் அவர் மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபையினர், (சி-575414) (37)
சிவன் தேவஸ்தானம், சித்தன்கேணி.

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna

குறிப்பு:-Deutsch, French மொழி புதிய வகுப்புகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.

COV.Reg.No W/A 7679 5T.P.: 0774842464, 0213216928, 0779927117

## தேவை

யாழ்.மாநகரசபையை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பமொன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு - 0773583879

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா தியாகராசா



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இல. 66, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை வதி விடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா தியாகராசா நேற்று (05.03.2011) காலமானார்.

அன்னார் தியாகராசா (ஓய்வுபெற்ற நில அளவை உதவியாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சரணவமுத்து வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பசுபதி (ராம்சேது) மற்றும் திருமதி முத்துப்பிள்ளை கந்தையா, திருமதி இலட்சுமி தியாகராசா, திரு நடேசபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தயாபரன் (கனடா) இன் பாசமிகு தயாரும், சாந்த குமாரியின் (கனடா) அன்பு மாமியாரும், துஷனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.தியாகராசா (கணவர்)
சு.தியாகலிங்கம் (மருமகன்)

தொ.பே-0215684023, 0772160303, 0215683179

## தேவை

Gate Way நிறுவனத்தின்

நெல்லியடி, சாவகச்சேரி கிளைகளில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

* கணினி விரிவுரையாளர்கள்
* கணினி போதனாசிரியர்கள்
* ஆங்கில மொழிப்போதனாசிரியர்கள்

தகுதி, அனுபவத்தின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

பகுதி நேரமாக வேலை செய்யும் வசதிகள் உண்டு.
கல்வி தராதரப் பத்திரங்களுடன் இன்றும் நாளையும் நேரில் வரவும்.

UTHAYAN IT ISLAND
347, KASTHURIYAR ROAD,
JAFFNA.
0212220549

## சாவகச்சேரியில் சிங்கள வகுப்பு

இரண்டாம் பிரிவு ஆரம்பம்
புதன்கிழமை பிற்பகல் 3.30 - 4.30

ஏற்கனவே பதிவு செய்தோர் தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தவும்

யாழ். புகழ் ஸ்ரீ மாஸ்ரர்

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கணினிப் பயிற்சி நிலையம்
114, டச்சு வீதி, சாவகச்சேரி.

## காணி விற்பனைக்கு

யாழ்.மருதடி வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 0777222422

## மானிப்பாயில் வீடு, காணி தேவை (விற்பனைக்கு /வாடகைக்கு)

மானிப்பாய் சுந்தர்சன் நிறுவனத்துக்கு அண்மையாக பிராதன வீதியில் காணி தேவை. பிரதான வீதியில் அல்லது சற்று உள்ளமாக வீட்டுடன் கூடிய 2 பரப்பு காணி தேவை.

விற்க விரும்புபவர்கள் அல்லது வீடு வாடகைக்கு தர விரும்புபவர்கள் 0772835287 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

(1074) (37)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர், கைலாசபிள்ளையார் கோயில் சூழலில், நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை நிலையத்துக்கு அருகில் இரண்டு பரப்புக்காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 0213217356, 0772730035

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு, கோயில் வீதியில்
4 பரப்புக் காணி தனி வீடு,
நன்னீர் கிணறு மற்றும் இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0757219014

## வீடு விற்பனைக்கு

சங்குவேலி தெற்கு மானிப்பாய் முச்சந்திக்கு அருகில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- T.P.0779301745, 0776917155

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு

யாழ். நகர் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக உள்ள இராமையா செட்டியார் ஒழுங்கையில் மேல்மாடியுடன் காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை

தொடர்பு:- T.P.0779009391, 0212225091

## வேலையாள் தேவை

யாழ்.நகரப்பகுதியில் இயங்கும் ஒட்டுத் தொழிலகம் (Welding Work Shop) ஒன்றுக்கு ஒட்டு வேலை தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்பு - 0774071537, 0777286050 (1081) (37)

## இறைச்சி கோழி விற்பனைக்கு

நிறைகூடிய புறொயிலர், கல்பெட்ஸ் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
(சுத்தம் செய்யப்பட்ட1kg புறொயிலர் 420/= மட்டும்)

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி.

## Chemistry Centre

300, பலாலி வீதி(ஆலடிச் சந்தி),கந்தர்மடம்

இரவுநேர வகுப்புக்கள்
ஆரம்பம்: 07.03 Mon 6 pm


1. General
2. Inorganic
3. Organic
4. அயன் சமநிலை

By: அன்பு

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் இரண்டாவது தேனிலவு







"எங்களுக்குத் திருமணமாகி 10 ஆண்டுகள். வாழ்க்கையில் இன்று ஓர் புதுமலர்ச்சி தோன்றியுள்ளது. முன்னரைவிட அதிக உத்வேகம். எங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் இந்த இனிய மாற்றத்திற்கு வழிகோலியது ட்ரைபுல்..."

இயற்கை மூலிகைச் சாறுகள் அடங்கிய ட்ரைபுல், உங்கள் பாலுறவுச் செயற்பாட்டைஅதிகரிக்கும். உயர்ந்த தரநியமங்களுக்கேற்ப அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்படும் ட்ரைபுல் மாத்திரைகளை எந்த வயதான ஆண்-பெண் இருபாலாரும் எவ்வித பக்க விளைவுகளும் இல்லாமல் பாவிக்க முடியும். நாள் ஒன்றிற்கு 2 மாத்திரைகள் எடுப்பதன் மூலம் உங்கள் தாம்பத்திய உறவை உற்சாகமாகவும் பூரணமாகவும் அனுபவிக்க ட்ரைபுல் உதவும்.

சகல ஃபாமஸிகளிலும் கிடைக்கும்

**Alaris Lanka (Pvt) Limited.**
A Division of Zifam Pinnacle Pty Ltd., Sydney, Australia.
மின்னஞ்சல்: info@alaris.lk
www.alaris.lk

Alaris touching aspirations

**உடனடி அழைப்பு 0772 695657 / 0773 943113**

## அதிகம் சேமித்து அதிகம் வெல்லுங்கள்




### சுப்பர் சீட்டிழுப்பு

2 வருடத்திற்கான இலவச பெற்றோலுடன் சுசுக்கி A-ஸ்டார் கார் ஒன்றை வெல்லுங்கள்

மாதாந்தச் சீட்டிழுப்பில் தங்க நாணயங்களை வெல்லுங்கள்

காலாண்டுச் சீட்டிழுப்பில் உங்கள் கணக்கு மீதி இரு மடங்காக்கப்படும்

சீட்டிழுப்பிற்குத் தகுதி பெற, ஒரு மாதத்திற்காவது உங்கள் சேமிப்புக் கணக்கில் ரூ.10,000ஐ அல்லது நடைமுறைக் கணக்கில் ரூ.5,000ஐ மீதியாக வைத்திருங்கள். அதிகமாகவும் நீண்ட காலத்திற்கும் சேமித்தால், வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாகும்.

ULTRASAVER
சேமிப்புகளுக்கு ஆகக்கூடிய வட்டி வீதம்

யூனியன் வங்கி
15ஏ, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 03. Tel: (011) 2374100 www.unionb.com
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

நாணயச் சபையின் அறிவுறுத்தலுக்கு அமைய, ஒரு வைப்பாளருக்கு ரூ.200,000 வரை என்ற அடிப்படையில் சகல வைப்புக்களும் காப்பீடு செய்யப்படும்.

CDB
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட்
உங்கள் நண்பன்



வாழ்கையில் எதிர்பாரப்புகள் எமக்கு
மிகவும் பெறுமதி வாய்ந்தவை, அதனால் தான்

## அதிக சலுகைகளை

CDBயின் நிலையான வைப்புக்கணக்கு வழங்குகின்றது

நாட்டின் சிரேஷ்ட மக்களுக்கு 1%* வீதத்திற்கும் மேலான வட்டி

**தண சுரெகும் நிலையான வைப்பு**

| காலம் (மாதங்கள்) | ரூ.500,000க்கும் மேலான நிலையான வைப்புகளுக்கு | | | |
|---|---|---|---|---|
| | மாதாந்தம் | வ.தே.வீ. மாதாந்தம் | முதிர்ச்சியில் | வ.தே.வீ. முதிர்ச்சியில் |
| 1 மாதம் | | | 9.50% | 9.92% |
| 3 மாதங்கள் | 10.00% | 10.47% | 10.50% | 10.92% |
| 6 மாதங்கள் | 10.50% | 11.02% | 11.00% | 11.30% |
| 12 மாதங்கள் | 11.00% | 11.57% | 11.50% | 11.50% |
| 18 மாதங்கள் | 11.25% | 11.85% | 12.50% | 12.20% |
| 24 மாதங்கள் | 11.50% | 12.13% | 12.75% | 12.03% |
| 36 மாதங்கள் | 11.50% | 12.13% | 13.00% | 11.60% |
| 48 மாதங்கள் | 11.50% | 12.13% | 13.20% | 11.18% |
| 60 மாதங்கள் | 11.50% | 12.13% | 13.25% | 10.70% |

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

CDB தண சுரெகும்

15 வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் நிதித்துறைக்கு சிறந்த சேவைகளை வழங்கிய CDB உங்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் பெருமிதம் அடைகின்றது. நீங்களும் இன்றே உங்கள் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்ள CDBயின் நிலையான வைப்பு கணக்கொன்றை ஆரம்பித்து உங்கள் பணத்திற்கு சிறந்த பல சலுகைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிட்டட்,
இல.18, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே.: 0117 388 388 www.cdb.lk
யாழ்ப்பாணம்- 021 222 1585/6 மட்டக்களப்பு- 065 222 8490
வவுனியா- 024 222 5862

ரேம் ரேட்டிங் (லங்கா) லிமிட்டட் BBB-/P3
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 1995 செப்டெம்பர் 07

இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையின் 1988ம் ஆண்டு 78ம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




59, W. A. Silva Mawatha,
Colombo 06.




1A, Ebenezer Place,
Dehiwala.




7/8, Hamers Avenue,
Wellawatte.

மனத்திருப்தி +
தனிச்சிறப்பு மிக்க வசதி +
ரம்மியமான சூழல்

## முடிவில்லா மகிழ்ச்சி

# Take your Happiness Key for your own Home...




இப்போது
கட்டட நிர்மாணம்
ஆரம்பமாகிவிட்டது !

## Windsor TOWER

Apartments in
NO. 37, WINDSOR AVENUE.
**DEHIWALA**

CM

**Civi Mec Construction (Pvt) Ltd.**
(BOI Approved Company)
156-1/1, W.A. Silva Mawatha, Colombo 06. Sri Lanka.
Tel: 011 - 2367878 Mobile: 0777 763148

**Windsor Tower...**
- With provisional condominium approval
- 3.9 Mn onwards
- Loan can be taken from any Banks

Deed can be issued
at the time of occupation

FLEX Graphic

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Flex Travels வழங்கும் **FREE AIR TICKET** உடன்

# IELTS இன்றி

## Spot Admissions

# மூலம் UK இல் உயர் கல்வி

## West End College London



| | | |
|---|---|---|
| திகதி | : | **26th March 2011** |
| இடம் | : | **4, IBC Road, Colombo 6.** |
| நேரம் | : | **10.00am to 4.00pm** |

**VISA** பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் **இலவசம்**

**For appointment please contact :**

**0777-761346**

**0775-952607**

**flex Institute**

*Step Towards a Bright Future*

(A Subsidiary of Flex Graphic)

**4, IBC Road, Wellawatte, Colombo 6.**

E-mails > flexinstitute@sltnet.lk
kiru@flexinstitute.lk
ashwinee@flexinstitute.lk

**Web: www.flexinstitute.lk**

FLEX Graphic

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NNO - இலங்கையில் சரும பராமரிப்பிற்கு முதல்தர மெருகூட்டும் நைற் ஒயில்

நொரிஷிங் நைட் ஒயில் (போஷாக்கான இரவு எண்ணெய்) (NNO) என்பது விசேடமாக தயாரிக்கப்பட்ட சருமத்துக்கு ஈரலிப்பையும், போஷாக்கையும், பொலிவையும் இளமையான தோற்றத்தையும் வழங்கக்கூடிய ஜொஜொபா எண்ணெய் மற்றும் விற்றமின் நு அடங்கிய எண்ணெய் ஆகும். இது சருமத்திலுள்ள இயற்கை எண்ணெய்த் தன்மையுடன் சேர்ந்து இளமையான தோற்றத்தை வழங்குவதுடன் 2 – 3 வாரங்களில் கண்களின் கீழ் பகுதியில் ஏற்படும் கரும் புள்ளிகளையும் அகற்றுகிறது.

- உலகெங்கிலும் கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது.
- தினமும் இரவில் முகம், கழுத்து, கைகள் ஆகியவற்றில் பூசவும்.




## NNO வில் உள்ள விசேட அம்சங்கள் என்ன?

- இது ஜொஜொபா எண்ணெய் கொண்டது, இதன் மூலம் சருமத்திலுள்ள இயற்கையான எண்ணெய்த்தன்மையுடன் சேர்ந்து இளமையான தோற்றத்தை வழங்குகிறது.
- சருமத்துக்கு ஈரலிப்பை வழங்கி, சருமத்தை மேலும் வன்மையாக்குகிறது.
- கண்களின் கீழ் பகுதியில் தோன்றும் கரும் புள்ளிகள், கடுமையான கோடுகள் மற்றும் சுருக்கங்களை அகற்றுகிறது.
- இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியது, சுலபமாக பாவிக்கக் கூடியது.
- சுகாதாரமானது, குறிக்கப்பட்ட பாவனை, வசதியான பாவனை முறை.




அனுமதி பத்திரம் வழங்கியவர்
மெகா உயிரியல்விஞ்ஞானம் (அவுஸ்திரேலியா) பிரை லிமிட்டெட
தொலைபேசி: +94 11 4305366, +94 11 4366576, 077 3410071
மின்னஞ்சல்: mega-sl@megawecare.com | www.nnoforever.com

விலை. 570.'.ஸ்ரீ பெட்டி ஒன்றில் 30 ஆப்ளிகப்புகள் உள்ளன

MEGA We Care
Human Wellness

www.naptbs.com

நாடெங்கிலுமுள்ள சுப்பர் மார்கட்களிலும் பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம் | A Baur & Co. Ltd. 1897ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.



# மஹிந்ரா 575DI NST ட்ரக்டரை கொள்வனவு செய்யும் உங்களுக்கு டிமோவிடமிருந்து அருமையான கொடுப்பனவு!

Mahindra



575DI NST ட்ரக்டருடன் ரொடவேடர் இலவசம்!

ரொடவேடருக்கு பதிலாக ட்ரேலரை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு*

- இலங்கையில் அதிக எரிபொருள் சிக்கனம் கொண்ட ட்ரக்டர், 45 குதிரை வலுவை கொண்டவைக்கானது.
- இரண்டு வருடங்கள் அல்லது 2000 வேலை மணித்தியாலங்கள் டிமோவின் உத்தரவாதம்.
- ட்ரக்டருடன் முதல் 6 சேவைகளுக்கு தேவையான உதிரிப்பாகங்கள் இலவசம்!
- இந்தியாவில் 27 வருடங்களாக அதிகம் விற்பனையாகும் முதற்தர ட்ரக்டர்.
- முதல் மூன்று சேவைகளும் இலவசம்.*

(*நிபந்தனைகள் உண்டு)

**Mahindra 575DI NST**
விசேட விலை ரூ. 1,349,000/-

HNB லீஸிங்
மஹிந்ரா 575DI NST ட்ரக்டரை கொள்வனவு செய்வதற்காக HNB லீசிங் அல்லது HNB கடன் வசதியை பெற்றுக்கொள்வீகளேயானால், முதல் வருடத்திற்கான காப்புறுதி இலவசம்! ☎:011 2660330

mel ads 10/11/5968

dimo TECHNOLOGY
வரையறுக்கப்பட்ட டீசல் மற்றும் மோட்டார் என்ஜினியரிங் பகிரங்க கம்பனி
உழவு உபகரணப் பிரிவு, கிரிந்தவலை வீதி, வெயங்கொடை.
தொ.பே/.'.பக்ஸ்:033-4674616
வெப்: www.dimolanka.com

துரித இலக்கம்: 0777418126


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org